13 லட்சம்
பரிசு வெல்லுங்கள்
விவரம் உள்ளே...!

# உதயன்

விலை ரூ.20
பக்கம் 28

சுடர் 30 | கதிர் 090 | வள்ளுவர் ஆண்டு 2046 | மாசி 12 செவ்வாய்க்கிழமை 24-02-2015

# ஐ.நாவிடம் நீதி கோரி இன்று பேரணி

**அணி அணியாய் ஒன்று திரள்வோம்; போர்க்குற்ற விசாரணை அறிக்கையை உடன் வெளியிட வலியுறுத்துவோம்.**

**யாழ்.பல்கலைக் கழக சமூகம் அழைப்பு**

யாழ்ப்பாணம், பெப்ரவரி. 24
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நடத்தப்பட்ட போர்க்குற்ற விசாரணை அறிக்கையை உடன் வெளியிட வேண்டும் என்று வலியுறுத்தி இன்று மாபெரும் பேரணி நடத்தப்படவுள்ளது. அதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். பல்கலைக் கழக சமூகம் கேட்டுக் கொண்டுள்ளது.
பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள் என்பதை அழுத்தமாக வலியுறுத்தவும், தெளிவுபடுத்தவும் அனைவரும் பேரணியில் கலந்துகொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
"எமக்கிழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேசத்திடம் நீதி கோருவோம். அணி அணியாய் ஒன்று திரள்வோம். ஈழத் தமிழினம் உணர்வுகளை இழக்கவில்லை என்பதை உலகுக்கு எடுத்துரைப்போம். காப்போம் தமிழ்த் தேசியம். ஈழத் தமிழ் உறவுகளின் ஆதரவை நாடி நிற்கிறோம்"- என்று யாழ். பல்கலைக் கழகச் சமூகம் அறைகூவல் விடுத்துள்ளது.

பக்கம் 24

## ஆதரவு

யாழ்ப்பாணம், பெப். 24
ஐ.நா. விசாரணை பிற்போடப்படுவதைக் கண்டித்தும், உள்ளக விசாரணைப் பொறிமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். நகரில் இன்று நடத்தப்படும் பிரமாண்டமான கவனவீர்ப்புப் பேரணிக்கு அரசியல் கட்சிகள், சமய அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள் என்பன தமது பேராதரவை வழங்கியுள்ளன.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் - "ஐ.நா. மனித உரிமைகள் சபையால் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை அடுத்த மாதம் வெளியிடவிருந்த நிலையில் குறித்த அறிக்கை வெளியிடப்படுவது 6 மாதங்களுக்குப் பிற்போட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுது.
மேற்படி அறிக்கையை வெளியிடுவதைப் பிற்போடும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தினை கண்டித்தும் எவ்வித காலதாமதமும் இன்றி அந்த அறிக்கையை உரிய நேரத்திற்கு வெளியிட வேண்டுமென வலியுறுத்தியும் யாழ். பல்கலைக்கழக சமூகம் இன்று நடாத்தவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு நாம் முழுமையான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பக்கம் 24

## படகு விபத்து 66 பேர் சாவு

பங்களாதேஷில் நடந்த படகு விபத்தில் 66 பேர் உயிரிழந்துள்ளனர். இரு படகுகள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நடந்துள்ளது. உயிரிழந்தவர்களில் குழந்தைகளும் அடங்குகின்றனர்.

விரிவு 16ஆம் பக்கத்தில்

## உறுதியான தீர்மானம் மீள்குடியமர்வில் தேவை

**அரசை வலியுறுத்துகிறது தமிழ்க் கூட்டமைப்பு**

யாழ்ப்பாணம், பெப். 24
மக்களின் மீள்குடியமர்வு தொடர்பில் புதிய அரசு, அரசியல் ரீதியான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் எல்லோரும் அவர்களது சொந்த நிலங்களிலேயே குடியமர்த்தப்படுவார்கள் என்ற உறுதியான அரசியல் தீர்மானத்தை விரைந்து எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமசந்திரன், நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

பக்கம் 24

## "கோத்தா முகாம் உண்டு; தமிழர்கள் அங்கில்லை"

**கடற்படை ஊடகப் பேச்சாளர் கூறுகின்றார்.**



யாழ்ப்பாணம், பெப். 24
"கடற்படையினரின் கட்டுப்பாட்டில் – தடுப்பில் எந்தத் தமிழரும் இல்லை. அவ்வாறு தடுத்து வைத்திருக்கக் கூடிய வசதியும் கடற்படையினரிடம் இல்லை."– என்று தெரிவித்துள்ளார் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய.
திருகோணமலையில் 'கோத்தா' தடுப்பு முகாமில் 700 பேர் வரையிலும், திருகோணமலை கடற்படைத் தளத்தில் 35 தமிழ்க் குடும்பங்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் புதிய அரசு உடன் விசாரணையை ஆரம்பிக்க வேண்டும் என நாடாளுமன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.
அது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே கடற்படையின் ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு கூறினார்.

பக்கம் 24

## இராணுவ புலனாய்வு அபரிமித வளர்ச்சி

**கொழும்பு ஊடகம் தகவல்**

கொழும்பு, பெப். 24
இராணுவப் புலனாய்வுக் கட்டமைப்பில் புதிய அரசு எதுவித மாற்றங்களையும் மேற்கொள்ளவில்லை. நாட்டின் முதற்தர புலனாய்வுக் கட்டமைப்பாக இராணுவக் கட்டமைப்பே வளர்ச்சி கண்டுள்ளது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
இலங்கையின் பிரதான புலனாய்வு அமைப்பான அரச புலனாய்வுச் சேவையை விடவும், இராணுவப் புலனாய்வுப் பிரிவு வளர்ச்சி பெற்றுள்ளது. அண்மைய இராணுவக் கட்டமைப்பு மாற்றங்களின் போது, இராணுவப் புலனாய்வுத் துறையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

பக்கம் 24

## தமிழ் கைதிகள் கொலை குறித்தும் விசாரிக்குக

**நீதியமைச்சரிடம் கோரினார் சரவணபவன் எம்.பி.**

யாழ்ப்பாணம், பெப். 24
சிறைச்சாலையினுள் வைத்து சிங்களக் கைதிகள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்த குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதை வரவேற்கின்றேன். அதேவேளை, கடந்த காலங்களில் தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலையில் வைத்து அடித்துப் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பிலும், பிந்துனுவெல புனர்வாழ்வு முகாமிலிருந்து தமிழ் இளைஞர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டது தொடர்பாகவும் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும். ‡ இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்விடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பக்கம் 24

## அல்லைப்பிட்டியில் அலவாங்கால் குடும்பஸ்தர் அடித்துக் கொலை

யாழ்ப்பாணம், பெப். 24
அல்லைப்பிட்டியில் குடும்பஸ்தர் ஒருவர் அலவாங்கால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். அது தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்துறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவலிங்கம் (வயது 57) என்பவரே கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பக்.24

## தமிழர் தீர்வுக்கு மோடி வருகை வழி செய்ய வேண்டும்

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருகின்றது**

யாழ்ப்பாணம், பெப். 24
இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்படுவதற்கு இந்தியப் பிரதமரது இலங்கைப் பயணம் வழி திறக்க வேண்டும். எமது உரிமைகள் யாராலும் இரக்கத்தின் அடிப்படையில் வழங்கப்படாமல், கிடைக்க வேண்டியதை கொடுப்பதாக அமைய வேண்டும்.

பக்கம் 24



அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
மஹா சத சண்டி யாகம் - 2015

அம்பிகை அடியார்களே!
நிகழும் மங்கலகர ஜய வருஷம் மாசித்திங்கள் சுக்கிலபக்ஷ மாசி மகத்தை முன்னிட்டு மாசித்திங்கள் 10 ஆம் நாள் முதல் 20ஆம் நாள் வரை (22.02.2015- 04.03.2015) அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பிகைக்கு 100 முறை சண்டி பாராயணமும். 10 முறை சண்டி ஹோமமும் செய்வதற்குத் திருவருள் கைகூடியுள்ளது. ஆகவே அனைத்து அடியார்களும் 11 தினங்களும் காலை. மாலை நடைபெறுகின்ற பூஜை. மகாயாகம் இலட்சார்ச்சனைகளுக்கு வருகைதந்து உபயமேற்க மஹாகாளி. மஹாலக்ஷ்மி. மஹாசரஸ்வதி மற்றும் மஹாமுத்துமாரி திருவருளுக்கு ஆளாகும் வகையிலும். இலங்கையில் எப்பகுதியிலும் நடைபெறாத மஹா சத சண்டி ஹோமம் நம் ஆலயத்தில் இரண்டாம் முறையாக செய்வதற்கு இந்தியாவிலிருந்து சிறந்த சிவாச்சார்யார்களும். இலங்கையில் பிரபல்யம் பெற்ற சிவாச்சார்யார்களும் இணைந்து நடத்துவதற்கும் அம்பிகையின் திருவருள் பாலித்துள்ளது.

இவ்வருடம் 04.03.2015 புதன்கிழமை பிற்பகல் மஹா மகத்தை முன்னிட்டு அம்பிகை இன்பர்சிட்டியில் சமுத்திர தீர்த்தமாடி மாலையில் ஆலயம் திரும்புவார்

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவதானம்.
தொ.பே.இல. 021 226 4263

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!"

ஆலய பரிபாலன சபையினரும் மற்றும் அம்பிகை அடியார்களும்

# 6 ஆயிரம் பக்தர்கள் கச்சதீவில் திரள்வர்

## ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

யாழ்ப்பாணம், பெப். 24

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவில் இந்த வருடம் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய – இலங்கை யாத்திரிகர்கள் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. திருவிழாவுக்கான முன்னேற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.



கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவுக்கான முன்னேற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

கச்சதீவுத் திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கமைவாக 28 ஆம் திகதி அதிகாலை 4 மணியில் இருந்து இலங்கைப் போக்குவரத்தச் சபையின் பஸ்களும், காலை 5 மணியிலிருந்து தனியார் பஸ்களும் யாழ்.நகரில் இருந்து குறிகாட்டுவான் வரை சேவையில் ஈடுபடும். இதற்காகப் பொதுமக்களிடம் இருந்து 72 ரூபா கட்டணமாக அறவிடப்படும்.

இதேவேளை, குறிகாட்டுவானில் இருந்து கச்சதீவுக்குச் செல்வதற்கு காலை 6 மணியில் இருந்து தனியார் படகுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதற்கு ஒரு வழிக் கட்டணமாக 225 ரூபா அறவிடுவதாகப் படகு உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். பிற்பகல் 2 மணி வரை இந்தச் சேவை இடம்பெறும். அதன் பின்னர் மறுநாள் முதலாம் திகதி கச்சதீவில் இருந்து யாத்திரிகர்களைக் கொண்டு வருவதற்குப் படகுகள் சேவையில் ஈடுபடும்.

இந்தத் திருவிழாவுக்கு இந்தியாவில் இருந்து 4 ஆயிரத்து 200 பக்தர்களும், இலங்கையில் இருந்து கலந்துகொள்வதற்கு 2 ஆயிரம் பக்தர்ளும் பதிவு செய்துள்ளார்கள்.

மேலும் திருவிழாவுக்கான பாதுகாப்புக்கு 150 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்புக் கடமையிலும், பக்தர்களின் நலன் கருதி அம்புலன்ஸ் வண்டிகளும் சேவையில் ஈடுபடும். அத்துடன் திருவிழாக் காலத்தில் இரவு, காலை உணவுகள் வழங்குவதற்கு கடற் படையினர் மூலம் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருவிழாவுக்கு வருகை தரும் யாத்திரிகர்கள் சூழலைப் பாதுக்காத்துக்கொள்ள பிளாஸ்ரிக் பொருள்கள், பொலித்தீன் பொருள்கள் பாவிப்பதை முற்றுமுழுதாக தவிர்த்துக் கொள்ள வேண்டும் – என்றார்.

இதேவேளை, கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி மாலை 4 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மறுநாள் காலை 7 மணிக்குப் பெருவிழா நடைபெறும். யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் இந்தியாவில் இருந்து வரும் குரு முதல்வர்களுடன் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். திருவிழாவுக்காக இந்திய – இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் கிறிஸ்தவ மதக்குருக்கள், கன்னியாஸ்திரிகர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலின்போது கிறிஸ்தவ மதகுருமார்கள், கடற்படையினர், பொலிஸார் மற்றும் அரச உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (த–14)

# அனைவரும் திரளுங்கள்

## கூட்டமைப்பு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 24

ஐ.நா. விசாரணை அறிக்கை ஒத்தி வைக்கப்பட்டமை தொடர்பில் தமிழ் மக்கள் தங்களது உணர்வுகளை வெளிக்காட்டவேண்டும். தமிழ் மக்கள் மௌனிகளாக இருப்பது சர்வதேச சமூகம் எடுத்த நடவடிக்கையை ஏற்றுக் கொண்டது போல் – ஆதரிப்பது போல் ஆகிவிடும். எனவே அன்றாடக் கடமைகளை – வேலைகளை ஒரு சில மணி நேரங்கள் ஒதுக்கி விட்டு இளைஞர்கள், யுவதிகள், பெரியவர்கள் என்று எல்லோரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் அழைப்பு விடுத்தார்.

நீர்வேலியிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த அறைகூவலை விடுத்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினால், யாழ்.மாவட்டத்தில் இன்று மிகப் பிரமாண்டமான கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்ட, இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கை மார்ச் மாதம் வெளியிடப்பட வேண்டும். இதற்காக இன்று நடத்தப்படும் பேரணியில் சகலரும் கலந்து கொள்ள வேண்டும்.

இந்தப் பேரணி சாதாரண விடயமல்ல. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு, இலங்கைத் தலைவர்களுக்கு, சர்வதேச சமூகத்துக்கு தமிழ் மக்களின் மன உணர்வுகளைத் தெரியப்படுத்துவதற்கான பிரதான நோக்கமே இதுவாகும். ஏனைய கடமைகளை – வேலைகளைச் சில மணி நேரம் மாத்திரம் ஒத்தி வைத்து விட்டு பேரணியில் கலந்து கொள்ளவேண்டும்.

தமிழ் மக்கள் மௌனமாக இருப்பது, சர்வதேச சமூகத்தின் செயற்பாடுகளை ஏற்றுக் கொள்வது போலாகிவிடும் என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார். (த–5)

# ஆசிரியர் சங்கமும் பேரணிக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், பெப். 24

ஐ.நா.விசாரணையைத் துரிதப்படுத்தல் தொடர்பாக இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.பல்கலைக்கழகச் சமூகத்தினால் மேற்கொள்ளப்படும் பேரணிக்கு இலங்கை ஆசிரியர் சங்கமும் தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளது. பேதங்களைக் கடந்து அனைவரும் இணைந்து கொள்ளவேண்டும் என்றும் அது கோரியுள்ளது.

இது குறித்து சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

தமிழர்கள் மீது இலங்கை அரசால் நடத்தப்பட்ட மிகக் கொடூரமான போர்க்குற்றம் தொடர்பாகவும், அது தொடர்பாக எடுக்கவிருக்கும் நடவடிக்கை தொடர்பாகவும் எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அறிக்கை தாக்கல் செய்யப்படவிருந்தது.

ஆனால் அந்த அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதமே வெளியிடப்படும் என ஐ.நா.மனித உரிமைகள் சபையால் தெரிவிக்கப்பட்ட விடயமானது தமக்கு நீதி கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த பாதிக்கப்பட்ட தமிழ் இனத்துக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சாட்சியங்களைப் பதிவு செய்துள்ள ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு தனது பிராந்திய நலன்களை நோக்காகக் கொள்ளாமல், பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்துக்கு நீதி கிடைக்கும் வகையில் மிகக் காத்திரமான முறையில் தனது அறிக்கையை வெளியிட வேண்டும். இதுவே தமிழ் மக்களின் ஆற்றமுடியாத காயங்களுக்கும், வலிகளுக்கும் தீர்வைப் பெற்றுத்தரக்கூடியதான சந்தர்ப்பமாக அமையும்.

இத்தகைய கோரிக்கைகளுக்காக இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சமூகம் முன்னெடுக்கும் பேரணிக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் தனது ஆதரவினைத் தெரிவிக்கின்றது – என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–4)

# கல்லுண்டாயில் கழிவு கொட்டவே வேண்டாம்

யாழ்ப்பாணம்,பெப். 24

மானிப்பாய் பிரதேச சபையின் தீர்மானத்துக்கு அமைய யாழ். மாநகர சபை எந்தவிதமான கழிவுகளையும் கல்லுண்டாயில் கொட்டுவதற்குச் சபை அனுமதி வழங்கவில்லை என்று கூறியுள்ள சபைத் தவிசாளர், அங்கு கழிவுகள் கொட்டுவதற்கான அனுமதி தொடர்பில் மாகாண சபை தம்முடன் கலந்துரையாடவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சர் இதற்கான தடை உத்தரவை உடன் செயற்படுத்த வேண்டும்.

மாநகரசபை தினமும் 100 தொடக்கம் 110 வரையிலான கழிவுகளை பொறிமுறையற்ற வகையில் கொட்டி எரியூட்டுவதால் பாதிப்பு ஏற்படுகிறது. பல்வேறு நோய் ஏற்படவும் வாய்ப்பிருப்பதாக சுகாதார வைத்திய அதிகாரி கூறியுள்ளார். இதனை நிறுத்துமாறு மானிப்பாயிலுள்ள பொது அமைப்புக்களும் எமக்கு அழுத்தம் கொடுத்துள்ளன. அப்பகுதி வயல்களில் 5 வருடங்களாகப் பயிர் செய்யமுடியவில்லை. கால்நடைகள் உண்ணும் கழிவுகள், அதனுடன் இணைந்த பொலித்தீன்களை உண்பதால் கால்வாய் நோய் ஏற்படுகின்றன. பொலித்தீன் உண்பதால் பல கட்டாக்காலிகள் துடிதுடித்து இறக்கின்றன.

உள்ளூராட்சி அமைச்சர் என்ற அடிப்படையில் முதலமைச்சர் கல்லுண்டாயில் கழிவு கொட்டுவதைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

மாநகர சபை மாத்திரமன்றி ஏனைய சபைகள் அமைப்புக்களும் கழிவு கொட்டுவதை தடுக்க வேண்டும்– என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–4)

# முதல் பல்கலைக்கழகக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 24

இலங்கையில் முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் உயர்கல்வி அமைச்சின் கீழ் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழகக் கல்லூரியில் நேற்று மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு இடம்பெற்றது. விரைவில் அது திறந்து வைக்கப்பட்டு கற்றல் செயற்பாடுகள் ஆரம்பமாகும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியின் நிறைவேற்று அதிகாரி ஜே. ஜூட் வோல்ட்டன் தெரிவித்தார்.




இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமுர்த்தியிலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசமாகவும் சமுர்த்தி இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு [illegible] அரச மானிய அடிப்படையில் குறைக்கப்பட்ட கட்டண அறவீட்டுடனும் இந்தக் கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

8 பாடப் பகுதிகளைக் கொண்ட இந்தக் கற்கை நெறிகள் அனைத்தும் ஆங்கில மொழி மூலமாகவே இடம்பெறவுள்ளன. இலங்கையில் யாழ்ப்பாணம், மாத்தறை, குளியாப்பிட்டிய, அநுராதபுரம், ரத்மலானை ஆகிய [illegible] கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் தொழில்நுட்பம் வாழ்க்கைத் தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சித் திட்டத்தின் கீழ் இந்தப் பல்கலைக்கழகக் கல்லூரிகள் உயர்கல்வி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக ஜி.சி.ஈ உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மேலதிக கல்விக்குரிய சந்தர்ப்பத்தை [illegible] தகைமைகள் மட்டம் 4 இனைக் கொண்டிருப்பவர்களுக்குரிய மேலதிக கல்விக்கான சந்தர்ப்பத்தை விரிவுபடுத்தல் மூலம் தொழிற்துறைக்குத் தேவையான மேலதிக நடுத்தரமட்ட தொழில் நுட்பவியலாளர்களை உருவாக்க முடியும்.

இந்தக் கலாசாலையில் உணவு வகைத் தயாரிப்புத் தொழில்நுட்பம், கட்டட சேவைத் தொழில்நுட்பம், விவசாயத்துறைத் தொழில்நுட்பம், விருந்தோம்பல் முகாமைத்துவம், நவீன இயந்திரசாதனத் தொழில்நுட்பம், கட்டட நிர்மாண தொழில்நுட்பம், தயாரிப்பு வரைபுத் தொழில்நுட்பம், அழகு ஒப்பனைக்கலை ஆகிய கற்கைநெறிகள் இடம் பெறவுள்ளன.

சமுர்த்தியில் உள்ளவர்களுக்குப் [illegible] பதிவுக் கட்டணமாக 250 ரூபா மாத்திரமே அறவிடப்படும். சமுர்த்தி இல்லாதவர்களுக்கு முன்னர் 3 லட்சத்து 7 ஆயிரத்து 100 ரூபா அறவிடப்பட்டது. அரச மானிய அடிப் படையில் பின்னர் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாவாகக் குறைக்கப்பட்டது. அதன் பின்னர் அது மேலும் குறைக்கப்பட்டுத்தற்போது 60 ஆயிரம் ரூபா வரையில் குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு கற்கைநெறிக்கு 30 மாணவர்களே அனுமதிக்கப்படுவர். இரண்டரை வருடங்கள் கற்கைநெறியும் இறுதி 6 மாதங்கள் பயிற்சியுமாக 3 வருடங்களைக் கொண்ட இந்தப் பயிற்சிநெறிக்கு 29 வயதுக்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்க [illegible] என்று ஜூட் வோல்ட்டன் மேலும் தெரிவித்தார். (த–4)

CAMPUS
021 221 9910 / 077 710 2131



# கணக்கைத் தொடக்கியது இங்கிலாந்து

இதுவரை சந்தித்த இரண்டு ஆட்டங்களிலும் படுதோல்வி. அடுத்த சுற்றுக்கு முன்னேற வேண்டுமானால் கத்துக்குட்டிகளிடம், கத்துக்கிட்ட மொத்த வித்தையையும் காட்ட வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கியது இங்கிலாந்து. எந்த அணியானால் எமக்கென்ன கொஞ்சம் சீண்டித்தான் பார்ப்போமே என்ற எண்ணத்தில் களமிறங்கியது ஸ்கொட்லாந்து.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கொட்லாந்து முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது. யானை தன் தலையில் மண்ணை அள்ளிக் கொட்டினால் யார் என்ன செய்ய முடியும். களமிறங்கினார்கள் அலியும், பெல்லும். அடித்து துவைத்து பிளிந்து எடுத்தனர் ஸ்கொட்லாந்

பக்கம் 04





ஸ்கொட்லாந்து – இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தை ஜோடியாகக் காணவந்த ஸ்கொட்லாந்து ரசிகர்கள்.



## ஏன் தோற்றோம்?

நல்ல நிலையில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும் போது எனது ஆட்டமிழப்பு நிகழ்ந்தது. இதுவே எங்களின் தோல்விக்குப் பிரதான காரணம் என்று, தென்னாபிரிக்க அணியின் தலைவர் ஏ.பி.டீ.வில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற உலகக் கிண்ண ஆட்டத்தில், தென்னாபிரிக்க அணி 130 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியிருந்தது. இது தொடர்பில் செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த வில்லியர்ஸ்,

நாங்கள் நல்ல நிலைமையை நோக்கி சென்று கொண்டிருக்கும் போது எனது ஆட்டமிழப்பு நிகழ்ந்தது. இதுவே எங்களை தோல்வியை நோக்கி இழுத்துச் சென்றது. இந்தியா ஒரு கட்டத்தில் 350 ஓட்டங்களைத் தொடும் என்ற நிலைமை இருந்தது. இதை எமது பந்து வீச்சாளர்கள் தடுத்தார்கள்.

பக்கம் 04




## முன்னேறினார் ஜெயவர்த்தன

ஆப்கானுக்கு எதிரான ஆட்டத்தில் மஹேல ஜெயவர்த்தன சதம் அடித்தார். இதன் மூலம் உலகக் கிண்ணத் தொடரில் அதிக சதங்கள் அடித்த வீரர்கள் வரிசையில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

நடப்பு உலகக் கிண்ணத் தொடருடன் இலங்கை அணியின் சிரேஷ்ட வீரரும் முன்னாள் அணித்தலைவருமான மஹேல ஜெயவர்த்தன ஓய்வு பெறவுள்ளார்.

இந்த நிலையில் ஆப்கானுக்கு எதிராக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் சதம் அடித்த ஜெயவர்த்தன, உலகக் கிண்ண தொடரில் அதிக சதம் அடித்தவர் பட்டியலில் மூன்றாமிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

37 வயதான ஜெயவர்த்தன உலகக்கிண்ணத் தொடர்களில் விளாசிய நான்காவது சதம் இதுவாகும். இதன் மூலம் உலகக் கிண்ண தொடரில் அதிக சதங்கள் விளாசியவர்களின் பட்டியலில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் (6 சதம்), ஆஸ்திரேலியாவின் ரிக்கி பொண்டிங் (5 சதம்) ஆகியோருக்கு அடுத்தபடியாக, ஜெயவர்த்தன இடம்பிடித்துள்ளார்.(5–ரி)

## கடுப்பேத்தும் "மோக்கா மோக்கா"



இந்தியாவுடான ஆட்டங்களில் இதுவரை பாகிஸ்தான் வெற்றியே பெறாததைச் சுட்டிக்காட்டி, கடந்த சில வாரங்களுக்கு முன்பு விளம்பரம் ஒன்றை 'ஸ்டார் ஸ்போர்ட்ஸ்' வெளியிட்டது. தமது தேச அணி வெற்றி பெற்றால் பட்டாசு வெடிக்கவேண்டும் என்ற பாகிஸ்தான் ரசிகர்களின் எண்ணம் கடைசி வரை நிறைவேறாமலே இருப்பதாக அமைந்திருந்த அந்த விளம்பரம், பெரு வெற்றி அடைந்தது.

முதல் விளம்பரத்துக்கு கிடைத்த வரவேற்பைப்பார்த்த 'ஸ்டார் ஸ்போர்ட்ஸ்', இந்தியா – தென்னாபிரிக்கா இடையிலான லீக் ஆட்டத்தை முன்வைத்து ஒரு விளம்பரத்தை பதிவேற்றம் செய்தது. அது, இந்திய ரசிகர்களுக்குக் கடுப்பை கிளப்பியிருந்தது. ஏனெனில், அந்த விளம்பரத்தில் இதுவரை இந்தியா, தென்னாபிரிக்காவை வெற்றி கொள்ளாததை குறிப்பிட்டு எடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் தென்னாபிரிக்காவுடனான தற்போதைய ஆட்டத்திலும் வெல்லாது என்பதை நக்கலாகச் சொல்லும் வகையில் அமைந்திருந்தது.

இந்திய ரசிகர்களைச் சீண்டினால்

பக்கம் 04

## தப்புக் கணக்கு போட வேண்டாமாம்

இந்திய அணியைப் பற்றி யாரும் தப்புக் கணக்குப் போடக் கூடாது. அப்படிப் போட்டால் அது அவர்களுக்குத்தான் நஷ்டமாகப் போகும். மிகச் சிறந்த துடுப்பாட்டம், மிகச் சிறந்த பந்து வீச்சு, களத்தடுப்புடன் கூடியதாக இந்திய அணி விளங்குகிறது. இவர்களால் எதையும் சாதிக்க முடியும். இதை இரண்டாவது முறையாக நிரூபித்துள்ளார்கள்.

இவ்வாறு இந்திய அணியின் மேலாளர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

எந்த அணியையும் சந்திக்கும் தெம்பு இந்திய அணிக்கு உள்ளது. ஆஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடர் செயல்பாடு குறித்து இப்போது பேசுவது பொருத்தமல்ல. இந்தியா எப்போதுமே மோசமான அணி அல்ல. நான்கு டெஸ்ட் ஆட்டங்கள் என்பது அதிகபட்சம்.

எனவே வீரர்கள் சோர்வடைந்திருந்தனர். மன நிலையிலும் அவர்கள் சோர்வடைந்திருந்தனர். அவர்களுக்கு இடைவெளி தேவைப்பட்டது. முத்தரப்புத் தொடரில் இந்தியா

பக்கம் 04

## தென்னாபிரிக்காவுக்கு மோசமான பதிவு



★ உலகக் கிண்ணத் தொடரில், இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடுவதில் 9 முறை தென்னாபிரிக்க அணி தோல்வியைத் தழுவியுள்ளது. இந்தியாவுடன் 130 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றதே மிக மோசமான தோல்வியாக அமைந்துள்ளது. 2007 ஆம் ஆண்டு ஆஸி. அணிக்கு எதிராக 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்றிருந்தது.

★ உலகக் கிண்ணத்தில், தென்னாபிரிக்க அணியிடம் தொடர்ச்சியாக 3 முறை தோற்றிருந்த இந்தியா, முதல் முறையாக வெற்றியை வசப்படுத்தி புதிய வரலாறு படைத்துள்

பக்கம் 04

## இப்படியொரு ராசி

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணியின் தொடக்க வீரர் ஷிகர்தவான் சதம் அடித்து அசத்தினார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அசத்தலாக விளையாடி 307 ஓட்டங்கள் குவித்தது. பின்னர் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 177 ஓட்டங்களில் சுருண்டது. இதனால் இந்தியா 130 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் 146 பந்துகளில் 16 பவுண்டரிகள், 2 சிக்ஸருடன் 137 ஓட்டங்கள் குவித்த தவான், ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். தவான் இதுவரை ஒருநாள் ஆட்டங்களில் 7 சதங்கள் அடித்துள்ளார். அவர் சதம் விளாசிய எந்த ஆட்டத்திலும் இந்தியா இதுவரை தோல்வியடைந்தது இல்லை. (5–ரி)



| குழு A | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 3 | 0 | 0 | 6 |
| ஆஸ்திரேலியா | 1 | 0 | 1 | 3 |
| பங்களாதேஷ் | 1 | 0 | 1 | 3 |
| இலங்கை | 1 | 1 | 0 | 2 |
| இங்கிலாந்து | 1 | 2 | 0 | 2 |
| ஆப்கானிஸ்தான் | 0 | 2 | 0 | 0 |
| ஸ்கொட்லாந்து | 0 | 2 | 0 | 0 |

| குழு B | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|
| இந்தியா | 2 | 0 | 0 | 4 |
| மே.இ.தீவுகள் | 1 | 1 | 0 | 2 |
| அயர்லாந்து | 1 | 0 | 0 | 2 |
| சிம்பாப்வே | 1 | 1 | 0 | 2 |
| தென்னாபிரிக்கா | 1 | 1 | 0 | 2 |
| ஐ.அ.இராச்சியம் | 0 | 1 | 0 | 0 |
| பாகிஸ்தான் | 0 | 2 | 0 | 0 |

### அதிகூடிய ஓட்டங்கள்

| | |
|---|---|
| 210 | தவான் (இந்தியா) 2 ஆட்டங்கள் |
| 160 | மில்லர் (தென்னாபிரிக்கா) 2 ஆட்டங்கள் |
| 158 | மொயின் அலி (இங்கிலாந்து) 3 ஆட்டங்கள் |
| 157 | மக்கலம் (நியூஸிலாந்து) 3 ஆட்டங்கள் |
| 153 | ஹோக்லி (இந்தியா) 2 ஆட்டங்கள் |



### அதிகூடிய இலக்குகள்

| | |
|---|---|
| 11 | சவுத்தி (நியூஸிலாந்து) 3 ஆட்டங்கள் |
| 8 | பின் (இங்கிலாந்து) 3 ஆட்டங்கள் |
| 7 | டேவி (ஸ்கொட்லாந்து) 2 ஆட்டங்கள் |
| 6 | சமி (இந்தியா) 2 ஆட்டங்கள் |
| 6 | விக்டோரி (நியூஸிலாந்து) 3 ஆட்டங்கள் |



## இறுக்கமான கட்டுப்பாடு

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் அல் அமின் ஹுசைன், அணியின் விதிமுறைகளை மீறி ஒழுங்கீனமாக நடந்து கொண்டது தெரிய வந்ததால், அவர் உடனடியாக நாட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகப் பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

பிரிஸ்பேன் விடுதியில் அணியினருடன் தங்கியிருந்த அல் அமின் ஹுசைன் அனுமதியின்றி இரவு 10 மணிக்கு மேல் வெளியே சுற்றியுள்ளார். இதனை அறிந்த ஊழல் தடுப்புப் பிரிவு பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் கவனத்திற்கு கொண்டு சென்றது.

இதன் அடிப்படை யில் அவர் உலகக் கிண்ண அணியில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார். (5-ரி)

## 2015 உலகக் கிண்ணம்

இங்கிலாந்து எதிர் ஸ்கொட்லாந்து — நாணயச் சுழற்சி ஸ்கொட்லாந்து

இங்கிலாந்து 119 ஓட்டங்களால் வெற்றி

### இங்கிலாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4' | 6' |
|---|---|---|---|---|---|
| அலி | C கோலிமான் B ஹக் | 128 | 107 | 12 | 05 |
| பெல் | C கொட்ஸர் B பெரிங்டன் | 54 | 85 | 02 | 0 |
| பலன்ஸ் | B இவன்ஸ் | 10 | 18 | 0 | 0 |
| ரூட் | C குறோஸ் B டேவி | 01 | 03 | 0 | 0 |
| மோர்கன் | C மொம்சன் B டேவி | 46 | 42 | 04 | 02 |
| ரெய்லர் | ST. குறோஸ் B டேவி | 17 | 26 | 0 | 0 |
| பட்லர் | C டேவி B வாட்லோ | 24 | 14 | 04 | 0 |
| வோக்ஸ் | C மொம்சன் B டேவி | 01 | 02 | 0 | 0 |
| புறோட் | ஆட்டமிழப்பில்லை | 0 | 03 | 0 | 0 |
| பின் | ஆட்டமிழப்பில்லை | 01 | 01 | 0 | 0 |
| உதிரிகள் | | 21 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| வாட்லோ | 10 | 60 | 01 | 01 |
| டேவி | 10 | 68 | 04 | 0 |
| இவன்ஸ் | 10 | 46 | 01 | 01 |
| ஹக் | 10 | 51 | 01 | 0 |
| பெரிங்டன் | 05 | 43 | 01 | 0 |
| மக்கான் | 02 | 11 | 0 | 0 |
| ஹோட்சர் | 03 | 19 | 0 | 0 |

TOTAL 303/8 (50)

1-172 (பெல்), 2-201 (அலி), 3-203 (பலன்ஸ்), 4-203 (ரூட்), 5-252 (ரெய்லர்), 6-297 (பட்லர்), 7-300 (மோர்கன்), 8-300 (வோக்ஸ்)

### ஸ்கொட்லாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4' | 6' |
|---|---|---|---|---|---|
| ஹோட்சர் | C வோக்ஸ் B அலி | 71 | 84 | 1 | 0 |
| மக்லியோட் | C பட்லர் B அன்டர்சன் | 04 | 06 | 01 | 0 |
| கொல்மன் | C மோர்கன் B வோக்ஸ் | 07 | 16 | 0 | 0 |
| மக்கான் | C பட்லர் B பின் | 05 | 07 | 01 | 0 |
| மொம்ஸன் | C புறோட் B ரூட் | 26 | 42 | 03 | 0 |
| பெரிங்டன் | C மோர்கன் B அலி | 08 | 13 | 0 | 0 |
| குறோஸ் | C ரூட் B பின் | 23 | 32 | 01 | 0 |
| டேவி | C பட்லர் B பின் | 09 | 15 | 0 | 0 |
| ஹக் | C பலன்ஸ் B வோக்ஸ் | 15 | 04 | 03 | 0 |
| இவன்ஸ் | C பட்லர் B அன்டர்சன் | 09 | 15 | 02 | 0 |
| வாட்லோ | ஆட்டமிழப்பில்லை | 0 | 0 | 0 | 0 |
| உதிரிகள் | | 07 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| அன்டர்ஸன் | 06 | 30 | 02 | 0 |
| புறோட் | 07 | 24 | 0 | 0 |
| வோக்ஸ் | 5.2 | 25 | 02 | 0 |
| பின் | 09 | 26 | 03 | 03 |
| அலி | 10 | 47 | 02 | 0 |
| ரூட் | 05 | 27 | 01 | 0 |

TOTAL 184 (42.2)

1-17 (மக்லியோட்), 2-47 (கோல்மன்), 3-54 (மக்கான்), 4-114 (மொம்சன்), 5-122 (ஹோட்சர்), 6-128 (பெரிங்டன்), 7-150 (டேவி), 8-160 (குறோஸ்), 9-184 (இவன்ஸ்), 10-124 (ஹக்)

ஆட்ட நாயகன் அலி

# கணக்கைத் தொடக்கியது இங்கிலாந்து

தின் பந்துவீச்சாளர்களை. காலத்தின் கட்டாயமும் இதுவே.

தலையில் கைவைப்பதை தவிர வேறு எதையும் ஸ்கொட்லாந்தால் செய்ய முடியவில்லை. அலி ஒரு படி மேலே சென்று நிலைமையின் தீவிரத்தினை உணர்ந்து விளையாடினார். இடையிடையே பந்துகள் வானில் வட்டமிடவும் செய்தன. இணைப்பாட்டங்கள் 100, 150 என்று அதிகரித்து கொண்டே சென்றது.

அதிரடியின் ஆதிக்கம் சதம் கடந்து அசத்தினார் அலி. பெல் அரைச் சதம். விடைபெற்றார் பெல். முதல் இலக்குக்காக இணைப்பாட்டமாக 172 ஓட்டங்கள். சிறிது நேரத்திலேயே அலியும் ஆட்டமிழந்தார். பலன்ஸ், ரூட்டால் கத்துக் குட்டிகளை எதுவும் செய்ய முடியவில்லை. வந்த வேகத்தில் பவிலியனில்.

தலைமைப் பொறுப்பை உணர்ந்து ஆடினார் மோர்கன். மீண்டும் ஓட்டங்கள் எகிற ஆரம்பித்தன. முடிவில் இங்கிலாந்து அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 303 ஓட்டங்கள் குவிப்பு.

கத்துக்குட்டிகள்தான் என்றாலும் அவ்வளவு சீக்கிரம் விட்டு விடுவதாய் இல்லை என்ற பாணியில் களமிறங்கியது ஸ்கொட்லாந்து. ஒரு முனையில் கோட்சர் நிலைத்திருந்தாலும் மற்றைய முன் வரிசை வீரர்கள் மைதானத்துக்குள் இறங்கி ஏறினர். வேறு எதையும் அவர்களால் செய்துவிட முடியவில்லை. 54 ஓட்டங்களுக்கு 3 இலக்குக்ள். வெற்றி பெறுவதற்கான தொடக்கம் இல்லை என்றாலும் கத்துக்குட்டிகளைப் பொறுத்தமட்டில் கௌரவமான தொடக்கம்.

மொம்சன் கோட்சருக்கு சற்று ஆறுதல் கொடுக்க அணி மேலும் கௌரவமான நிலையை நோக்கி நடைபோட்டுக் கொண்டு சென்றது. அரைச்சதத்தை எட்டினார் கோட்சர்.

71 ஓட்டங்களுடன் கோட்சர் வெளியேறியதும் பின்வரிசை வீரர்கள் பதின்ம ஓட்டத்தில் வெளியேற ஸ்கொட்லாந்து படிப் படியாக இங்கிலாந்தின் ஆதிக்கத்துக்குள் சிக்க ஆரம்பித்தது.

இறுதியில் சகல இலக்குகளையும் பறிகொடுத்து 184 ஓட்டங்களை மட்டுமே பெற்று 119 ஓட்டங்களால் பரிதாபமாக இங்கிலாந்துக்கு இரையாகியது. ஸ்கொட்லாந்தை வெற்றிபெற்ற இங்கிலாந்து காலிறுதிக்கு தகுதிபெறும் நம்பிக்கையுடன் தனது புள்ளிக்கணக்கைத் தொடங்கியுள்ளது. (5-ரி)

# கடுப்பேத்தும் மோக்கா மோக்கா



சும்மா இருப்பார்களா? ஆட்டத்தில் தோற்றதற்கு வீரர்களின் வீடுகளின் மீது கல் எறியும் அவர்கள், பதிலுக்கு வீடியோ விளம்பரம் ஒன்றை யு.டியுப்பில் தரவேற்றம் செய்தனர். அதில் தென்னாபிரிக்க அணி இதுவரை உலகக் கிண்ணம் எதனையுமே வெல்லவில்லை என்பதைக் குறிப்பதாக அமைந்திருந்தது.

இந்த நிலையில், உலகக் கிண்ண லீக் ஆட்டத்தில், தென்னாபிரிக்க அணியை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தியா வீழ்த்திய சில நொடிகளில் மோக்கா வீடியோ விளம்பரத்தை ஸ்டார் ஸ்போர்ட்ஸ் வெளியிட்டது. மோக்கா என்றால் வாய்ப்பு அல்லது சந்தர்ப்பம் என்று பொருள்.

இந்தப் புதிய வீடியோவில், தென்னாபிரிக்க ரசிகர்களுடன் அமர்ந்து, தென்னாபிரிக்க சீருடை பனியன் போட்டுக்கொண்டு தொலைக் காட்சியில் ஆட்டத்தைப் பார்க்கும் பாகிஸ்தான் ரசிகர், இந்தியா வெற்றி பெற்றதால் பட்டாசு வெடிக்க முடியாமல் கடுப்படைகிறார்.

அப்போது, எதிர்பார்த்த படியே வீட்டின் அழைப்பு மணி ஒலிக்கிறது. யாரென்று பார்த்தால், ஐக்கிய அரபு இராச்சியம் (யு.ஏ.இ) ரசிகர் தனது அணியின் ரீ சேர்ட்டை, தென்னாபிரிக்க சீருடையுடன் இருந்து ஆட்டத்தைப் பார்த்த பாகிஸ்தான் ரசிகரிடம் கையளித்து, அதைப் போட்டுக்கொண்டு இந்தியா – யு.ஏ.இ ஆட்டத்தைப் பார்க்கும்படி குறிப்பால் சொல்லிவிட்டு புறப்படுகின்றார்.

இந்த விளம்பரத்தால், பாகிஸ்தான் ரசிகர்கள் மாத்திரமல்ல, இந்திய அணியை பிடிக்காத எந்தவொரு ரசிகர்களும் கடுப்படைந்து தமது எதிர்கருத்துக்களை சமூக வலைத் தளங்களில் பகிர்ந்து வருகின்றனர். (5-ரி)

# பத்து அணிகள்

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் (ஐ.சி.சி.) நிர்வாக குழு கூட்டம் மெல்போர்ணில் விரைவில் இடம் பெறவுள்ளது.


இதில் 2019 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடக்கும் உலகக் கிண்ண கிரிக்கெட்டில் பங்கேற்கும் அணிகளின் எண்ணிக்கையை 14 இல் இருந்து 10 ஆகக் குறைக்க உறுப்பினர்கள் ஒப்புதல் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

அணிகளின் எண்ணிக்கையை குறைக்கும் போது, களத்தில் சுவாரஸ்யமும், போட்டியும் இதை விட பலமாக இருக்கும் என்று ஐ.சி.சி. தலைமை நிர்வாக அதிகாரி டேவ் ரிச்சர்ட்சன் கூறியுள்ளார். (5-ரி)

## தப்புக் கணக்கு போட வேண்டாமாம்

வெல்லாதது முக்கியமல்ல. இப்போது நடக்கும் ஆட்டங்களை மட்டுமே பார்க்க வேண்டும்.

ஷரதவானின் திறன் குறித்து பலரும் கேள்வி கேட்டனர். டெஸ்ட் ஆட்டத்தில் அவருக்கு அதிர்ஷ்டம் அமையவில்லை. ஆனால் தற்போது பிரமாதமான திறனுக்கு அவர் வந்து விட்டார். சிறப்பாக ஆடி வருகிறார் – என்றார். (5-ரி)




# தென்னாபிரிக்காவுக்கு மோசமான பதிவு

ளது.

★ இந்திய அணிக்கு எதிராக 300 ஓட்டங்களை விரட்டிய 4 ஒரு நாள் ஆட்டங்களிலும் தென்னாபிரிக்க அணி மண்ணைக் கவ்வியுள்ளது.

★ பார்னெல் 9 பந்துப் பரிமாற்றங்களில் வாரி வழங்கிய 85 ஓட்டங்கள், உலகக் கிண்ணத்தில் தென்னாபிரிக்க பந்து வீச்சாளரின் மோசமான பந்து வீச்சாக அமைந்தது. ஷோன் பொலக் 2007 ஆம் ஆண்டு ஆஸி.க்கு எதிராக 83 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்திருந்தார்.

★ இந்தியா எடுத்த 307 ஓட்டங்கள், உலகக் கிண்ணத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக எடுக்கப்பட்ட 2 ஆவது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகும். ஆஸ்திரேலியா 2007 உலகக் கிண்ணத்தில் 6 இலக் குகள் இழப்புக்கு 377 ஓட்டங்கள் குவித்து முதலிடத்தில் உள்ளது. (5-ரி)

## ஏன் தோற்றோம்?

275 ஓட்டங்கள் வரை இந்த ஆடுகளத்தில் துரத்தலாம். ஆனால் இந்திய வீரர்கள் 307 ஓட்டங்கள் குவித்தனர். எங்களது துடுப்பாட்ட வரிசையை மாற்றி அமைத்தோம். ஆனால் இறுதியில் அது பயனளிக்கவில்லை.

நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பெடுத்தாட விரும்பினோம். கடுமையான வெயில் காரணமாக எங்கள் வீரர்கள் சிரமப்பட்டனர். ஆனால் அதனைக் காரணம் காட்ட முடியாது – என்று குறிப்பிட்டுள்ளார. (5-ரி)



# கலக்குகின்றோம்

அடுத்தடுத்து இரண்டு ஆட்டங்களில் துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சுஇரண்டிலும்ஒருங்கிணைந்துகலக்கிஇருக்கிறோம் என்று அணித் தலைவர் டோனி கூறியுள்ளார்.

தென்னாபிரிக்காவுடனான வரலாற்று வெற்றிக்குப் பிறகு இந்திய அணித்தலைவர்டோனி கூறியதாவது, அடுத்தடுத்து இரண்டு ஆட்டங்களில் துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு இரண்டிலும் ஒருங்கிணைந்து கலக்கி இருக்கிறோம்.இதுமற்றொரு முழுநிறைவானசெயல்பாடாகும். வேகப்பந்து வீச்சாளர்கள்துல்லியமாகபந்து வீசி நெருக்கடி அளித்தனர். ஜடேஜா கூட நன்றாகப் பந்து வீசினார்.

ஷிகர் தவான் தனது போக்கில், திட்டமிட்டு அருமையாக விளையாடினார்.

பெரிய ஷொட் தேவைப்பட்ட போது, அதை செய்தார். ஒன்று, இரண்டு ஓட்டங்கள் வீதம் தேவைப்பட்ட போது அதற்கும் ஒத்துழைத்தார்.

சதத்தை கடந்த பிறகும் அவசரப்படாமல் நீண்ட நேரம் நின்று ஓட்டங்களை சேர்க்க வேண்டும் என்ற நோக்குடன் ஆடினார்.

சதத்தை எட்டிய பிறகும், மொத்தம் 130 அல்லது 140 ஓட்டங்கள் குவிக்க முடிகிறது என்றால் அது தான் அணிக்கு முக்கியம். அதனால் அணி கூடுதலாக 20 முதல் 25 ஓட்டங்களை பெற முடியும். வலைப் பயிற்சியின்போது தவான் கடினமாக உழைத்தார்.

அதற்குப் பலன் கிடைத்து இருக்கிறது. போர்மில் இருக்கிறாரா? இல்லையா? என்பது பற்றி ரசிகர்கள் அடிக்கடி கேள்வி எழுப்புகின்றனர்.

போர்ம் என்பது பெரிய விடயமே கிடையாது. 15 முதல் 20 நிமிடங்கள் களத்தில் நின்று விட்டாலேயே இயல்பானநிலைக்குவந்துவிடலாம், என்றார் டோனி. (5-ரி)

# புது அனுபவம்

தென்னாபிரிக்க அணியை போட்டுத் தாக்கிய, இந்திய அணிக்கு இந்திய முன்னாள் வீரர்கள் 'ருவிட்டர்' மூலம் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

**சச்சின்** - இந்திய அணியின் பிரமிப்பான செயல்பாடு இது. உலகக் கிண்ணத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான இந்தியாவின் முதலாவது வெற்றி. உலகக் கிண்ண ஆட்டத்தை முதல்முறையாக ஒரு ரசிகராக மைதானத்தில் அமர்ந்து ரசித்தது, மறக்க முடியாத ஒன்று.

**கும்பிளே:** இது இந்தியாவின் சிறந்த வெற்றி. துடுப்பாட்டம், பந்து வீச்சு அதை விட முக்கியமாக களத்தடுப்பு எல்லாவற்றிலும் தென்னாபிரிக்காவை நாம் தோற்கடித்து விட்டோம்.

**ஹர்பஜன்சிங்:** அணியின் கூட்டு முயற்சியில் கிடைத்த மிகப்பெரிய வெற்றி. இது கொண்டாட்டத்திற்கான நேரமாகும். (5-ரி)

## இந்திய ரசிகர்களின் உணர்வு



மீசைக்கார நண்பா உனக்கு ரோஷம் அதிகம்டா

## தினம் ஒரு பரிசுப் போட்டி 12

பங்களாதேஷ் – இலங்கை அணிகளுக்கு இடையில் நாளை மறுதினம் (26.02.2015) நடைபெறவுள்ள ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

....................................................

பெயர் : ................................................

தே.அ.இல. : ................................................

முகவரி : ................................................

................................................

தொலைபேசி இல.: ......................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (25.02.2015) மாலை 6 மணிக்கு முன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கலாம்.

தினமும் 2,500/= இருவருக்கு

## பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தின் தொடர் நாயகன் யார்?

........................

நடப்பு உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தின் ஆட்ட நாயகன் யார்?

........................

பெயர்: ........................

தே.அ.அ.இல. ........................

முகவரி. ........................

தொலைபேசி ........................

போட்டி முடிவுத் திகதி 26.03.2015

தலா 10,000/= 45 பேருக்கு

## போட்டி விதிகள்

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.

## அரையிறுதிப் பரிசுப் போட்டி

அரையிறுதிக்கு தகுதி பெறும் அணிகள் எவை?

1)........................ 2)........................

3)........................ 4)........................

பெயர்: ........................

தே.அ.அ.இல. ........................

முகவரி. ........................

தொலைபேசி ........................

போட்டி முடிவுத் திகதி 17.03.2015



தலா 5,000/= 20 பேருக்கு

## மாபெரும் இறுதிப் பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

........................

பெயர்: ........................

தே.அ.அ.இல. ........................

முகவரி. ........................

........................

தொலைபேசி

........................

போட்டி முடிவுத் திகதி 23.03.2015

1 ஆம் பரிசு 2½ லட்சம் பணப்பரிசு

2 ஆம் பரிசு 1½ லட்சம் பணப்பரிசு

3 ஆம் பரிசு 1 லட்சம் பணப்பரிசு

தலா 5,000/= 10 பேருக்கு

MJ நியூ மைதிலி ஜுவலர்ஸ்
யாழ் மண்ணில் நன்னிகரில்லா தலைமை நிறுவனம்
தொ.பே: 021 221 7878/ 021 221 7878
E-mail: newmaithily@gmail.com
இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**லக்கி பர்ன்சி கவுஸ்**
இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடோன்**
பஸ்நிலையம் வீதி,நெல்லியடி.
**கவிதா**
350ஏ பிரதான வீதி,பருத்தித்துறை.
**கனன் போட்டோ**
165 பிரதான வீதி.பருத்தித்துறை.
**சூரியா பாமசி**
புதிய சந்தை,அச்சுவேலி.
**நகுலன்**
85 பருத்தித்துறை வீதி நல்லூர்.
**தாட்சாயினி ஸ்ரோர்ஸ்**
3ஆம் சந்தி கெருடாவில்.
**தர்மலிங்கம்**
கோவில் ஒழுங்கை உடுப்பிட்டி.
**கலைச்சோலை**
இல 3 நவீன சந்தை வல்வெட்டித்துறை
**அஞ்சலோ புக் சொப்**
ஆஸ்பத்திரி வீதி ஊர்காவற்றுறை.
**மாவடி ஸ்ரீ முருகன்**
மூளாய் வீதி வட்டுக்கோட்டை.

**தயாளன் ஸ்ரோர்ஸ்**
பலாலி,வீதி,கோண்டாவில்.
**சிவசக்தி ஸ்ரோஸ்**
உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி.
**சிவன் ஸ்ரோர்ஸ்**
பரமேஸ்வரா சந்தி,திருநெல்வேலி.
**தாஸ் ஸ்ரோர்ஸ்**
திருநெல்வேலி.
**ஓம் கணேசா**
இல1, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு.
**பேரின்பநாதன்**
103,வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
41. வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்**
14. விதானையார் வீதி சுண்டுக்குளி.

**சுரேஸ் ஸ்ரோர்ஸ்**
இல. 376 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**அன்ரனீஸ் ஸ்ரோர்ஸ்** 19 புதுமை மாதா கோவில் கிழக்கு.
**சிவானந்தா கபே**
செட்டி தெரு நல்லூர்.
**ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்**
சித்தங்கேணி வீதி, பண்டத்தரிப்பு.
**புஸ்பநாதன்**
பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்**
சித்தங்கேணிச்சந்தி, சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்**
பிரதான வீதி சுழிபுரம்.
**குலம் ஸ்ரோர்ஸ்**
சந்தையடி மானிப்பாய்.
**துர்க்கா புத்தகசாலை**
பஸ் நிலையம் சுன்னாகம்.

**கிருபா போட்டோ**
கே.கே.எஸ்.வீதி மல்லாகம்.
**பாக்கியா** கொக்குவில்.
**சிறிராம்** கைதடி சந்தி.
**பரம்ஸ்**
நவீன சந்தை சாவகச்சேரி.
**மணியம்**
ஏ–9 வீதி சாவகச்சேரி.
**அருள்நாயகி**
ஏ –9 வீதி கொடிகாமம்.
**கஜானன்**
அல்லாரை வீதி, மீசாலை சந்தி.
**அன்பரசன் புத்தகசாலை**
வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.
**உயர்ச்சி புத்தகசாலை**
மல்லாவி.
**கோமதி நெற்கபே**
வெற்றிலைக்கேணி.
**கே.பி.கே.புத்தகசாலை**
24, பஸ் நிலையம் வவுனியா.

**வன்னி பேபி நீட்ஸ்** 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா.
**சோம்சுந்தரம்**
ஏ – 9 வீதி மாங்குளம்.
**மோகன்** பளை.
**நகுலேந்திரன்**
31ஆம் கட்டை முழங்காவில்.
**ஜோதி புக்சொப்**
பெரிய கடை மன்னார்.
**சிவசாந்தி உணவகம்**
தாழ்வுப்பாடு வீதி மன்னார்.
**நிரஞ்சனா** தலைமன்னார்.
**பூநகரி(எம்பிசிஎஸ்)** பூநகரி.
**டிலசிகா**
124 கட்சன் வீதி வட்டக்கச்சி.
**மகிழன் களஞ்சியம்** தர்மபுரம்.
**பொதிகை புக்சொப்** 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.
**தாயன்பு** உடையார் கட்டு.

**சஜி புக் சொப்**
விசுவமடு.
**வரணா புக்சொப்**
755 கனகராசா வீதி திருநகர் கிளிநொச்சி.
**வவிசனா புக் சொப்**
குமரபுரம் பரந்தன்.
**ராஜா தேநீரகம்** உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை**
பிரதான வீதி முல்லைத்தீவு.
**ஸ்ரீ கருணா மல்ரி சொப்**
வரணி.
**விநாயகர் களஞ்சியம்**
அளவெட்டி.
**சிவலிங்கம் ஸ்ரோர்ஸ்**
வியாபாரி மூலை.
**குகன் ஸ்ரோர்ஸ்,**
நவாலி.
**நாகமுத்து ஸ்ரோர்ஸ்**
காரைநகர்.

பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில்

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** வெளியூர் பயணம் செல்ல நேரலாம். தோழி களுடன் சுமுகமாகப் பேசி பழகுவது நல்லது. மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடக்கலாம். எதிர்பாலினத்தாரால் லாபம் கிடைக்கக் கூடும்.

**இடபம்:** மற்றவர்களுக்கு உதவிகள் செய்ய நேரிடும். வீண் அலைச்சல் திடீர் கோபம் உண்டாகலாம். காரிய வெற்றி தரும். மதிப்பும், அந்தஸ்தும் உயரும். தொழில் வியா பாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு கடன் பிரச்சினைகள் தீரும்.

**மிதுனம்:** நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்தவை நல்லபடியாக முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சில விடயங்களைத் தவறாகப் புரிந்து கொண்டு சங்கடப்பட வேண்டி இருக்கும்.

**கடகம்:** மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். மற்றவர்களுக்கு உதவி செய்வதால் வீண் அலைச்சல் உண்டாகலாம். காரிய வெற்றி, பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும்.

**சிங்கம்:** சாமர்த்தியமான செயல்களால் மற்றவர் மனதில் இடம் பிடிப்பீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**கன்னி:** மனதில் தைரியம் உண்டாகும். வாழ்க்கை துணையின் உடல்நலத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் நெருக்கடி ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த வேலையை செய்யும் முன்பும் அதுபற்றி அதிகம் யோசிப்பார்கள். சிலருக்கு புதிய வேலையும் கிடைக்கலாம். பிள்ளைகள் உங்கள் சொற்படி நடப்பது மனதுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

**விருச்சிகம்:** காரிய அனுகூலம் உண்டாகும். எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கும். திறமையுடன் காரியங்களை செய்வீர்கள். எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும்.

**தனுசு:** தொழில் விரிவாக்கம் தொடர்பான திட்டங்கள் செயற்படுத்த முயற்சி மேற்கொள்வீர்கள். பழைய மிகுதி கள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலைப் பளு குறைந்து உற்சாகமாகக் காணப்படுவார்கள்.

**மகரம்:** எடுத்த காரியம் வெற்றி பெறுவதால் மேலதி காரிகளிடம் பாராட்டுக் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை காணப்படும். உறவினர்கள், நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

**கும்பம்:** வாக்கு வன்மையால் காரியங்கள் வெற்றி பெறும். ஆன்மிக எண்ணங்கள் அதிகரிக்கும். காரிய வெற்றி உண்டாகும். செல்வ சேர்க்கை ஏற்படும். வீண் செலவுகளைத் தவிர்ப்பது நன்மை தரும்.

**மீனம்:** எந்த ஒரு வேலையையும் செய்யும் முன் அதில் உள்ள நல்லது கெட்டதை ஆராய்ந்து செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் மிகவும் சாமர்த்தியமாகச் செயற்படுவது நன்மை தரும்.




எனக்கு ஏன் இங்கிலிஷ் படம் பிடிக்கும் என்றால்...

1. ஹீரோக்களின் பெயர்களுக்கு முன்னால் பட்டம் இருக்காது.
2. ஐந்து பாட்டு போட்டு அறுக்க மாட்டாங்கள்.
3. உலகம் அழியுற போதெல்லாம் அவன்கள்தான் காப்பாற்றுவாங்கள்.
4. ஹீரோ கிளைமாக்ஸ்ல மூச்ச பிடிச்சு பத்து பக்கம் வசனம் பேச மாட்டாரு! அரசியல், பஞ்ச் டயலொக் பேசமாட்டாங்க
5. படம் வெளியானா அமைதியாக வெளியாகும். ஒவ்வொரு ரீவிலயும் ஒரு மணி நேரம் படத்தைப் பற்றி அளக்க மாட்டாங்க
6 .காலை காண்பிச்சு, கையை காண்பிச்சு, கண்ணை காண்பிச்சு இதெல்லாம் இல்லாம, சப்பையா ஹீரோ அறிமுகம் கொடுப்பாங்க.
7. கதாநாயகிக்கு படம் முழுக்க முண்டா பனியன் மட்டுமே கொடுத்து செலவை கட்டுப்பாட்டுக்கை வைச்சுருப்பாய்ங்க
8. குண்டடி பட்டு சாகும் நேரத்தில பத்து பக்கமாக டயலொக் பேசமாட்டாங்க.
9. ஒரே பாட்டில ஒபாமா ஆகமாட்டாங்க.

## தனுஷ் - சிவகார்த்திகேயன் மோதல்

'காக்கி சட்டை' படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பிற்கு வராதது மற்றும் தொலைக் காட்சி நிகழ்வொன்றில் சிவகார்த்தி கேயனைப் பார்த்தவுடன் வெளியேறியது உள்ளிட்ட விடயங்கள், தனுஷ் – சிவகார்த்திகேயன் இருவருக்கும் மீண்டும் மோதல் ஏற்பட்டுள்ளதை உறுதிபடுத்த முடிகிறது.

தனுஷ் தயாரித்திருக்கும் காக்கி சட்டை திரைப்படத்தின் பத்திரிகையாளர் சந் திப்பு நடைபெற்றது.

தனுஷ்தான் தயாரிப்பாளர் என்றாலும், பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை. அதே நேரத்தில் நடைபெற்ற சூப்பர் சிங்கர் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பத்திரிகையாளர் சந்திப்பில் பேசிய சிவகார்த்திகேயன், 'முதலில் தனுஷ் ஏன் வரவில்லை என்பதற்கு விளக்கமளித்து விடுகிறேன். உங்கள் மீது முழுநம்பிக்கை இருக்கிறது. நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என்று தெரிவித்தார். படம் ஆரம்பித்த தருணத்தில் இருந்து இப்போது வரை நாங்கள் என்ன கேட்டாலும் செய்து கொடுக்கிறார்' என்று



கூறினார். பத்திரிகையாளர் சந்திப்பு முடிந்தவுடன், சிவகார்த்தி கேயன் மற்றும் அனிருத் இருவரும் இணைந்து சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். சிவகார்த்திகேயன் அரங்குக்குள் நுழைவதைப் பார்த்தவுடன் தனுஷ் அரங்கில் இருந்து வெளியேறி விட்டார். இறுதியாக பரிசு கொடுக்கும் போது மட்டும் மேடையேறி சிவகார்த்திகேயனுடன் பரிசு களை வழங்கிவிட்டு வெளியேறிவிட்டார்.

தனுஷ், சிவகார்த்திகேயன் இருவருக்கும் மோதல் இல்லை என்று இருவருக்கும் நெருக்கமானவர்கள் கூறிவருகிறார்கள். தனுஷிடம் பேட்டி எடுக்கச் சென்ற நிருபர் சிவகார்த்திகேயன் தொடர்பான கேள்விகள் கேட்க, அதற்கு தனுஷும் விரிவான பதில்கள் அளித்திருக்கிறார்.

பேட்டி முடிந்து வீட்டிற்கு திரும்புவதற்குள் சிவகார்த்திகேயன் தொடர்பான கேள்விகளும், பதில்களும் எழுத வேண்டாம். மற்றதை எழுதிக் கொள்ளுங்கள் என்று தெரிவித்திருக்கிறார். இந்தச் செயலுக்கு காரணம் என்ன என்பதை அவரே முன்வந்து விளக்கமளிக்காத வரை இந்த சர்ச்சை ஓயப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

## உளவு விண்கலம்

ஜப்பான் புதிய உளவு விண்கல மொன்றை வெற்றிகரமாக ஏவியுள்ளது.

அயல் நாடான வடகொரியா 1998 ஆம் ஆண்டு ஜப்பானிய பிரதான நிலப்பகுதிக்கு மேலாக பசுபிக் சமுத்திரத்தில் மத்திய தர ஏவுகணையை ஏவிப் பரிசோதித்ததையடுத்து ஜப்பான் 2000 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் உளவு செய்மதிகளை செயற்படுத்த ஆரம்பித்தது.

இந்நிலையில் ஜப்பானின் ஜக்ஸா விண்வெளி முகவர் நிலையமும் மிட்சுபிசி நிறுவனமும் தனெக்கஷ ஸ்ரீமா விண்வெளி ஏவுதளத்திலிருந்து மேற்படி புதிய உளவு விண்கலத்தை ஏவியுள்ளன.







ஒருவன்
அடைந்ததைக்
கண்டு பொறாமைப்
படாதீர்கள்.
அவன் அதனை
அடைவதற்காக
இழந்தவை
தெரிந்தால்,
அடையவேண்டும்
என்ற ஆசையே
வராது உங்களுக்கு!

I like

## வெளிநாட்டு நாணயங்களுடன் டுபாய் செல்ல முயன்றவர் கைது


கொழும்பு, பெப்.24

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து டுபாய் செல்லவிருந்த இலங்கைப் பிரஜை ஒருவரின் பயணப் பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 83 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

அவரது பயணப் பொதியில் இருந்து 20 ஆயிரத்து 800 யூரோக்கள், 17 ஆயிரத்து 300 பிரிட்டிஷ் பவுண்ட், 2 லட்சத்து 42 ஆயிரத்து 400 சவூதி ரியால் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றிய பணத்தை அரசுடைமையாக்கிய சுங்கத் திணைக்கள அதிகாரிகள், சந்தேக நபருக்கு 10 லட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளனர்.

இதுதொடர்பாக சுங்கத் திணைக்கள அத்தியட்சகர் எஸ்.பி. பாலசூரிய உள்ளிட்ட சுங்க அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ)



# சிறு துரும்பை என்றாலும் அசைக்கட்டும் பிரதமர் மோடியின் இலங்கைப் பயணம்

## தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் தெரிவிப்பு

சென்னை, பெப்.24

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மார்ச் மாதம் இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ளார். அவரது இலங்கைப் பயணம் தமிழக மீனவர் – ஈழத் தமிழர் பிரச்சினையில் சிறு துரும்பையாவது அசைக்கட்டும். இதுவே தமிழர்களின் எதிர்பார்ப்பு என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி. வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாற்றத்தை உருவாக்கிடுவோம் என்ற வாக்குறுதியோடு இந்தியாவில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியவர் பிரதமர் நரேந்திர மோடி. ஆனால் தமிழக மீனவர் பிரச்சினையிலோ, ஈழத் தமிழர் பிரச்சினையிலோ எந்த ஒரு சிறு துரும்பையும் இந்த 9 மாத ஆட்சிக் காலத்தில் பிரதமர் மோடி அரசு அசைத்துப் போட்டது இல்லை.

தமிழக மீனவர்கள் நாளாந்தம் தாக்கப்படுவதும் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்



கதையாக இருக்கிறது.

ஈழத் தமிழர் பிரச்சினையிலோ அற்றுப் போன 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருப்பதோடு தமிழ்நாட்டில் அடைக்கலமாகியுள்ள ஈழ ஏதிலியரைக் கட்டாயமாக இலங்கைக்கு திருப்பி அனுப்ப இலங்கையோடு கூட்டுச் சதி செய்து கொண்டிருக்கிறது டில்லி.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தில் இலங்கைப் போர்க்குற்ற விசாரணை அறிக்கையை ஒத்திப்போட வைக்க இலங்கையோடு கை கோர்த்துக் கொண்டிருக்கிறது மத்திய அரசு. இவை அனைத்துமே தமிழகம் மற்றும் தமிழீழ மக்களிடத்தில் சொல்லொணா வேதனையையும் துயரத்தையும் ஆறாத வடுவையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் பிரதமர் மோடியின் இலங்கைப் பயணம் தமிழக மீனவர்கள் மற்றும் ஈழத்தமிழர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்துவது இயல்பானது தான்.

ஆனாலும் இதுவரை மோடி அரசின் செயல்பாடுகளால் பெருநம்பிக்கை எதுவும் இல்லாத சூழ்நிலையிலும் 28 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கைக்கு அதிகாரபூர்வமாகச் செல்கின்ற இந்தியப் பிரதமர் என்பதால் அவர் தமிழர் பகுதி களை நிச்சயம் நேரில் பார்வையிட்டு நிலைமையை உணர வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளான வட மாகாண சபை முதல்வர் உள்ளிட்டோரைச் சந்தித்து அங்கு நிறைவேற்றப்பட்ட இனப் படுகொலைத் தீர்மானம் குறித்துக் கேட்டறிந்து கள யதார்த்தத்தை உணர வேண்டும்.

இராணுவத்தின் கெடுபிடிகளுக்கும் ஆக்கிரமிப்புக்கும் மத்தியில் கல்வி கற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களையும் பிரதமர் மோடி சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிய வேண்டும்.

ஜனாதிபதி உள்ளிட்ட தலைவர்களுடனான சந்திப்பின் போது இராணுவத்தை விலக்க வேண்டும், அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.

தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான தாக்குதல்களை நிறுத்தியாக வேண்டும் என்று இலங்கைத் தலைவர்களிடம் உறுதிபட வலியுறுத்த வேண்டும். இத்தகைய கோரிக்கைகளில் ஒன்றையாவது அதாவது ஒரு சிறு துரும்பையாவது பிரதமர் மோடி தனது இலங்கை பயணத்தின் போது அசைத்துவிட்டு வரவேண்டும் என்பதே உலகத் தமிழர்களின் எதிர்பார்ப்பு– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## சட்டவிரோத மின்சாரம்: அறுவர் கைது

அம்பாறை, பெப்.24

அக்கரைப்பற்று பொலிஸாருடன் அம்பாறை மின்சார சபையினரும் இணைந்து மேற் கொண்ட சோதனை நடவடிக்கையில், சட்டவிரோத [illegible] முறையில் மின்சாரத்தைப் பெற்று வந்த 6 பேரை அக்கரைப்பற்று பொலிஸார் சனிக்கிழமை இரவு கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஆலையடிவேம்பு, பனங்காடு, ஆலங்குளம் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களுள் மூன்று பெண்களும் அடங்குவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த ஆறு பேரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ)

## இலங்கைக்கான கனடா தூதர் யாழ். அரச அதிபருடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், பெப்.24

இலங்கைக்கான கனடா தூதர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று திங்கட்கிழமை வருகை தந்து யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. இந்தச் சந்திப்பின் போது, யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், தற்போதைய நிலைமைகளைக் கேட்டறிந்து கொண்டதுடன், கனடா அரசால் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் ஆராய்ந்ததுடன், மேலதிக உதவிகளை வழங்க கனடா் அரசுடன் கலந்தாலோசித்த பின்னர் தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

அதன்பின்னர் யாழ்.மாவட்ட வர்த்தக தொழிற்றுறை மன்றத்துக்கும் சென்று அங்கு கலந்துரையாடினார். (வ–106)

## வேகக்கட்டுப்பாட்டை மீறியதால் தூக்கி வீசப்பட்ட மோ.சைக்கிள்

தென்மராட்சி, பெப். 24

வேகக் கட்டுப்பாட்டை மீறி, வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வைக்கோல் ஏற்றிய டிராக்டரை விலத்திச் செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிளின் சில்லு சறுக்கியதில் தூக்கி வீசப்பட்டதில் அதில் பயணித்த குடும்பஸ்தருக்கு கால் முறிந்தது. மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் சாரதிய அனுமதிப் பத்திரம் இல்லாததால் காயம டைந்தவரை அந்த இடத்தில் விட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளார்.

இந்தச் சம்பவம் சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் நாவற்குழி-- கேரதீவு வீதியில் மறவன்புலோ மத்தியில் இடம்பெற்றது.

சம்பவம் குறித்து அறிந்து பொது மக்கள் வந்து யாழ்.போதனா மருத்துவமனைக்கு அறிவித்து அங்கிருந்து வந்த அம்புலன்ஸ் காயமடைந்தவரை ஏற்றிச் சென்றது.

சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அதை அடுத்து அங்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்த நாவற்குழி கிழக்கைச் சேர்ந்த நாகமணி சுகந்தன் (வயது –17 ) என் பவரை பொலிஸ் நிலையத் துக்கு வருமாறு கூறி விட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதடி நாவற்குழி மேற்கைச் சேர்ந்த குணசிங்கம் பிரசாந் (வயது–43 ) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டவராவார். (வ–9)

## சிற்றூழியர்கள் 7 பேருக்கு நியமனக் கடிதங்கள்



தென்மராட்சி, பெப்.24

சாவகச்சேரி நகரசபையில் அமைய அடிப்படையில் 280 நாள்களுக்கு மேல் கடமையாற்றிய அட்டவணைப் படுத்தப்படாத பதவிகளைச் சேர்ந்த 7 சிற்றூழியர்களுக் கான நியமனக் கடிதங்கள் அண்மையில் நகரசபை கேட்போர் கூடத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டன.

நகர மண்டபக் காப்பாளர், மின்னியலாளர், நூலகத் தொழிலாளி, காவலாளி, வெளிக்கள பணியாளர் என 7 பேருக்கு நகரசபைத் தலைவர் ஐ.தேவசகாயம்பிள்ளை மற்றும் உப தலைவர், உறுப்பினர்கள் நியமனக் கடிதங்களை வழங்கினர். (வ–9)

# முன்னைய அரசால் நிதி ஒதுக்கிய அபிவிருத்தி திட்டங்கள் தொடரும்

## எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விக்கு மீன்பிடித்துறை அமைச்சர் பதில்

கொழும்பு, பெப்.24

முன்னைய அரசால் ஆரம்பிக்கப்பட்டு நிதித்தொகைகள் ஒதுக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அடிப்படை வசதிகளுக்கான திட்டங்கள் மாத்திரம் எந்தவொரு தடங்கல்களும் இன்றி முன்னெடுத்துச் செல்லப்படும் என்று உள்நாட்டு விவகாரங்கள் மற்றும் மீன்பிடித்துறை அமைச்சர் ஜோஸப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் ஆற்றியிருந்த உரை தொடர்பில் பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

மேலும் முன்னைய அரசால் ஆரம்பிக்கப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்கள், அடிப்படை வசதிகளை விரிவுபடுத்தும் திட்டங்கள் தொடர்பாக கடந்த 18 ஆம் திகதியன்று எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வாவின் உரையில் எழுப்பப்பட்டிருந்த கேள்விகளுக்கு மிகச் சுருக்கமான பதில்களை வழங்கியிருந்த அமைச்சர் ஜோஸப் மைக்கல் பெரேரா, முன்னைய அரசின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இது போன்ற மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்திருந்ததது என்றும், அவற்றுடன் சம்பந்தப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படாதுள்ள விடயங்களுக்கு நிதியைச் செலுத்த இயலாது. நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்ட ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ள திட்டங்களுக்கு நிதியை வழங்க முடியும் என்றும் தெரிவித்திருந்தார். (வ–22)

# கண்ணீர் அஞ்சலி



சரசாலை வடக்கு பிரிவு கிராம அலுவலர்
க.முல்லைமாறன் அவர்களின்
அன்புத் தந்தையார்

**நாகலிங்கம் கனகசிங்கம்**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்மா சாந்தியடையவும், பிரார்த்திக்கின்றோம்.

**சரசாலை வடக்கு ஸ்ரீகணேசா வித்தியாலயம்.**

(சி/19278) (4.3.7)

# கண்ணீர் அஞ்சலி

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட 2ஆம் வருட மாணவன்

**பிரான்சிஸ் ரோபட் கிளன்ஸ்ரன் லியோன்**

அவர்கள் 21.02.2015 அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு சக மாணவர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா நித்திய இளைப்பாற்றை அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட**
(57246)(5.7) **ஆசிரியர் சங்கம் (JUSTA)**

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் கலைப்பிரிவு - 2014 மாணவி

**செல்வி உதயகுமார் விபூசனா**

அவர்களின் அகாலமரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதோடு, எமது அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

**யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி**



(C/ 19281)(5.3)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி பத்மாவதி லோறன்ஸ் அவர்களின்
அன்புக் கணவர் அமரர் **வைத்தி.லோறன்ஸ்**
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிகழகம்**
**யா/கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ண வித்தியாசாலை**

(57287)(3.5.7)

# 31ஆம் நாள் நீங்கா நினைவலைகளுடன் அஞ்சலியும் நன்றி நவிலலும்

## திருமதி சிவபாக்கியம் செல்லத்துரை

(கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்க
க/பன்றி கட்டான் முன்னாள் கிளை முகாமையாளரின் துணைவியார்)

| அரும்பு மொட்டாக | வாடிய மலராக |
|---|---|
| 12.10.1942 | 25.01.2015 |

**திதி: பூர்வபக்க சஷ்டி**



மொட்டாக பிறந்தஅன்று தொடக்கம் என் இதயத்தில் இன்று வரை பெட்டொளியாக நான் நினைத்து வாழ்ந்து முடிந்தவரை கரும்புக் கட்டாக நான்கு பெண்மலர்களையும் கடவுள் பெயரால் நான்கு மைந்தர்களையும் ஈன்றெடுத்த தென்பெயரில் கள்ளமிலா இதயம் கொண்டு. அயலவர் போற்ற வாழ்ந்து வெள்ளி, செவ்வாய் விரதமிருந்தெம்மை - என்றென்றும் குறைவிலா செல்வச் செழிப்புடன் உலகமதில் வாழ வழிகாட்டி சடுதியாய் மறைந்ததேனோ? எம் தாயே!

கற்புக்கரசியாய் காலமது எழுபத்துமூன்றுகளில் வாழ்ந்து எழுபத்தாறில் என்னைத் தவிக்கவிட்டு பலன்தருவிருட்சமாய் எட்டுக் கனிகளைக் கொடுத்து மகிழ்ந்து கொஞ்ச பேரன், பேர்த்திகள் பதினைந்துகளையும், பூட்டன் பூட்டி களாக பதினைந்தினையும் வாரியணைத்து மகிழ்ந்து விட்டீர். வாழ்வதனில் இனி எனக்கென்ன குறையென்று நினைத்தா எம்மைத் தவிக்கவிட்டு மறைந்து விட்டீர். உமது மாறாப் புன்னகையுடன் வலம்வரும் காட்சியை நாம் இனி எங்கு காண்போம்.

இன்று (24.02.2015) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து அன்னாரைப் பிரார்த்தித்து தொடர்ந்து நிகழும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

அவரது நோய் வந்தநேரம் தொடக்கம் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனைத்து உதவிகளையும் செய்த அன்புள்ளங்களுக்கும் மற்றும் கண்ணீர்அஞ்சலி வெளியிட்டோருக்கும் உள்நாட்டு, வெளிநாட்டிலிருந்து தொலைபேசி ஊடாக ஆறுதல் கூறியவர்களுக்கும், உடன் வந்து அனைத்து வழிகளிலும் உதவிபுரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஐயா கடையடி, மீசாலை.**


**உங்கள் பிரிவால் துயருறும் செல்லத்துரை குடும்பத்தினர்**

(57011) (45.7.3)

# கிழக்கு மாகாணத்துக்கு 27 பஸ்கள் கையளிப்பு

அரசின் 100 நாள்கள் வேலைத் திட்டத்தின் கீழ் பயணிகளின் போக்குவரத்தை மேம்படுத்தும் பொருட்டு கிழக்கு மாகாண, இலங்கை போக்குவரத்துச் சபை டிப்போக்களுக்கு 27 பஸ்களை கையளிக்கும் நிகழ்வு கிண்ணியா எழிலரங்கு மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

நகர அபிவிருத்தி நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம், காணி அமைச்சர் எம்.கே.டி. எஸ்.குணவர்த்தன, உள்நாட்டுபோக்குவரத்து பிரதி அமைச்சர் எம்.எஸ். தௌபீக், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட் மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜே.எம்.லாஹிர் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (வ)



# எழிலூர் அன்னை வேளாங்கண்ணி முன்பள்ளி, நூலகம் திறந்து வைப்பு

கொழும்புத்துறை,பெப்.24

கொழும்புத்துறை, எழிலூர் அன்னை வேளாங்கண்ணி முன்பள்ளி மற்றும் நூலகம், இரவுப் பாடசாலை என்பன நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் அமைக்கப்பட்ட முன்பள்ளியை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் திறந்து வைத்தார். பாஷையூர் பங்குத் தந்தை அருட்திரு லியோ ஆம்ஸ்ரோங் அடிகள் ஆசியுரை வழங்கினார்.

தியாகி அறக்கொடை நிறுவுநர் வாமதேவா தியாகேந்திரன் நினைவுக்கல்லையும் பெயர்ப் பலகையையும் திரை நீக்கம் செய்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா, யாழ்.மாநகர சபை பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் என்.லோகசிவம் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வர் து.இளங்கோ, தியாகி அறக்கொடை நிறுவனப் பணிப்பாளர் செ.கமலநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் தியாகி அறக் கொடை நிறுவனத்தால் வழங்கப்பட்டன. நிலையத்தால் தியாகி அறக்கொடை நிறுவுநருக்கு வாழ்த்துப் பாமாலை வழங்கப்பட்டது.

(வ-13[illegible])



# அம்பாறைக்கு நேரடி பஸ் சேவை; ஆரம்பிக்குமாறு கோரிக்கை

அம்பாறை,பெப்.24

அக்கரைப்பற்று நகரிலிருந்து காரைதீவு சந்தியூடாக அம் பாறை நகருக்கு நேரடி பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு போக்குவரத்து பிரதி அமைச்சர் எம்.எஸ்.தௌபீக்கிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் மற்றும் நிந்தவூர் ஆகிய பிரதேசங்களிலிருந்து அம் பாறை மற்றும் சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களிலுள்ள மருத்துவமனை, தென்கிழக்கு பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரி, அம்பாறை ஹாடி உயர் தொழில் நுட்ப கல்லூரி மற்றும் அரச நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் உட்பட நாளாந்தம் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இவ்வழியில் பயணிக் கின்றனர்.

அக்கரைப்பற்றிலிருந்து கல் முனைக்கு வரும் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் இவர்கள் அம்பாறைக்குச் செல்வதற்கு காரைதீவு சந்தியில் இறங்கி இரண்டு பஸ்கள் மாறித் தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் இத னால் வீண் பண விரயம் ஏற்படுவதோடு உரிய நேரத்துக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் நோயாளர்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

எனவே, அரசின் 100 நாள்கள் வேலைத் திட்டத்தின் கீழ் அக்க ரைப்பற்று நகரிலிருந்து காரைதீவு ஊடாக பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள் ளனர். (வ)



# சின்ன வெங்காய விலை அம்பாறையில் வீழ்ச்சி



அம்பாறை, பெப்.24

அம்பாறை மாவட்டத்தில் சின்ன வெங்காயத்தின் விலையில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி யாகும் சின்ன வெங்காயம் அங்கு கொண்டு வரப்பட்டு ஒரு கிலோ கிராம் 60 ரூபாவுக்கு நடமாடும் வியாபாரிகளால் விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் சின்ன வெங்காயத்தின் விலை ஒரு கிலோ 80 –90 ரூபா வரை விற்கப்படுவதால் இதற்கான கேள்வி குறைந்து விற்பனை பாதிக்கப்பட்டுள்ளதாக உள்ளூர் வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வெளி மாவட்டங்களிலிருந்து கொண்டுவரப்பட்டு சந்தையில் விலையை குறைத்து விற்பதை போன்று தம்மால் விலையை குறைக்க முடியாதுள்ளதாகவும் அவ்வாறு விற்பனை செய்தால் தாம் பெரிய அளவிலான நட்டத்தை எதிர்நோக்க வேண்டியேற்படும் என்றும் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். (வ)

# இலங்கையில் சிறுவர்களது போஷாக்குக்கு ஐ.நா. உதவி

கொழும்பு, பெப்.24

இலங்கையில் சிறுவர்களது போஷாக்கை மேம்படுத்தல் உட்பட சிறுவர் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக, ஐ.நா. உணவு மற்றும் விவசாய அமைப்பு அனுசரணை வழங் கவுள்ளது.

சிறுவர் விவகார ராஜாங்க அமைச்சர் ரோசி சேனநாயக்க மற்றும் ஐ.நா. அமைப்பின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பிரதிநிதி திருமதி பெத் க்ரோபோர்ட் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதன்போது குழந்தைகளின் போஷணையை மேம்படுத்த நூறு நாள் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கர்ப்பிணித் தாய்மாருக்கு 20 ஆயிரம் ரூபா வழங்கும் நடவடிக்கை தொடர்பில் திருமதி க்ரோபோர்ட்டுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

ஆரம்பப் பருவத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய பாடசாலையை கேந்திரமாகக் கொண்ட உணவு– போஷாக்கு திட்டம் – போஷணை தொடர்பாக தெளிவூட்டும் திட்டம் என்பன தொடர்பிலும் அமைச்சு விசேட கவனம் செலுத்துவதாகவும் அமைச்சர் ரோசி சேனநாயக்க இதன் போது தெரிவித்தார்.

இவ்விடயங்களைக் கேட்டறிந்த திருமதி க்ரோபோர்ட் சிறுவர் போஷாக்கு செயற்றிட்டத்துக்கு ஐ.நா. ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்பதாக உறுதியளித்தார். (வ)

**காணி விற்பனைக்கு**

வட இந்து மகளிர் பாடசாலைக்கும் ஓராங்கட்டைச் சந்திக்கும் இடைப்பட்ட இடத்தில் 3 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 617 2912 (54212)(4.3.7)

**காணி தேவை**

மானிப்பாய் பகுதியில் வெற்றுக்காணி அல்லது நல்ல நிலையில் உள்ள வீட்டுடன் கூடிய காணி தேவை. (57250)(4.3.7)

தொடர்பு: 077 902 5450

**பெயர் மாற்றம்**

சிலாவத்தை முல்லைத்தீவைச் சேர்ந்த நவரத்தினம் றெசினிசா ஆகிய நான் 24.02.2015 இன்றிலிருந்து எனது பெயரை நவரத்தினம் றெஜினிசா என பெயர் மாற்றம் செய்துகொள்கிறேன்

நவரத்தினம் றெஜினிசா

# திருமலை அரச ஊழியர்களுக்கு 2 ஆம் கட்ட மோ.சைக்கிள்கள்



திருகோணமலை, பெப்.24

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த அரச ஊழியர்களுக்கான இரண்டாம் கட்ட மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடை பெற்றது.

மாவட்டத்திலுள்ள அரச அலுவலகங்களில் கடமையாற்றும் 697 அரச ஊழியர்களுக்கு மேற்படி மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை கோட்டை கடற்கரை திறந்தவெளியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் காணி அமைச்சர் எம்.கே.டி.எஸ்.குணவர்த்தனவின் பிரத்தியேகச் செயலாளர் உப்புள் மற்றும் கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

மாவட்டத்தில் ஆண் ஊழியர்களுக்கு மட்டுமே மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டதாகவும், பெண் ஊழியர்களுக்கு விரைவில் அவை வழங்கப்பட வுள்ளதாகவும் மாவட்டச் செயலகத்தினர் தெரிவித்துள்ளனர். (வ–10)

# கழிவுகளைத் தரம் பிரிக்க மட்டு.மாநகர சபை ஏற்பாடு

மட்டக்களப்பு, பெப்.24

மட்டக்களப்பு மாநகரசபை பிரிவில் கழிவுகளை உக்கக் கூடிய கழிவுகள், உக்க முடியாத கழிவுகள் என்று தரம் பிரித்து சேகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் எம்.உதயகுமார் தெரிவித்தார்.

ஐரோப்பிய யூனியனின் மேலதிக நிதியுதவியுடன் யுனெப்ஸ் நிறுவனத்தின் ஊடாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு மட்டக்களப்பு மாநகரசபைப் பிரிவிலுள்ள பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

குறித்த திட்டத்தைப் பரீட்சார்த் தமாக நடைமுறைப்படுத்தும் நோக்கில் மட்டக்களப்பு மாநகர சபை பிரிவுக்கு உட்பட்ட மட்டக்களப்பு, கோட்டமுனைப் பிரதேசத்தில் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அடுத்த கட்டமாக வெட்டுக்காடு பிரதேசத்தில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அவர் கூறினார். இந்தத் திட்டம் தொடர்பில் பிரதேச மக்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (வ)

**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.

ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

S.N குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா, வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

காலை 9 மணி முதல் மாலை 5.00 மணி வரை.

இல.97/8, கன்னகி அம்மன் கோயில் ஒழுங்கை, கோப்பாய் வீதி, உரும்பிராய், யாழ்ப்பாணம். (உரும்பிராய் சந்திக்கு அருகில்) (56945)(4.3.6)

T.P: 072 681 6681, 072 681 6691

# பொத்துவிலில் சொந்தக் காணிக்கு செல்லமுடியாத நிலை தமிழருக்கு

## கூட்டமைப்பின் பொத்துவில் பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் துரைரெத்தினம் கூறுகிறார்

அம்பாறை, பெப்.24

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேசத்தில் 30 வருடங்களுக்குப் பின்னர் தமிழ் மக்கள் தமது சொந்தக் காணிகளுக்குச் சென்று மேட்டுநிலப் பயிர்ச்செய்கை செய்வதற்காக காணிகளை துப்புரவு செய்வத்த இராணுவத்தினரும் பொலிஸாரும் வனபரிபாலன சபையினரும் தடுத்து வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொத்துவில் பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் எம்.துரைரெத்தினம் தெரிவித்தார்.

போர் முடிந்த பின்னரும் பொத்துவில் பிரதேசத்திலுள்ள தமிழ் மக்களுக்கு வாழ்வாதாரமான விவசாயத்தை மேற்கொள்வதற்காக அவர்களது சொந்தக் காணிகளுக்குச் செல்வதை இராணுவத்தினரும் பொலிஸாரும் வனபரிபாலன சபையினரும் தடுத்து வருவதாக குற்றஞ்சாட்டி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

சங்கமம்கண்டி தொடக்கம் பொத்துவில் நகர் வட்டி வெளிவரையுமுள்ள கோமாரி, ஊறணி, றொட்டை, களியாப்பத்தை, தாமரைக்குளம், மணற்சேனை ஆகிய பிரதேசங்களில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மேட்டுநிலப் பயிர் செய்கையை தமது வாழ்வாதாரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்களுக்குச் சொந்தமான அந்தப் பிரதேசங்களில் பயிர்ச் செய்கை செய்வதற்கு போர்க் காலத்தில் படையினர் தடுத்துள்ளனர்.

இதனால் அந்த நிலப் பகுதிகள் பற்றைக் காடாகியுள்ளன. இந்த நிலையில் சுமார் 30 வருடங்களின் பின்னர் தற்போதுள்ள சமாதான சூழ்நிலையில் மீண்டும் சொந்த நிலங்களுக்குச் சென்று மேட்டு நிலப் பயிர்ச்செய்கையை மேற் கொள்வதற்கு நிலங்களை துப்புரவு செய்யச் சென்றால் மீண்டும் இராணுவத்தினரும் பொலிஸாரும் வனபரிபாலன சபையினரும் தமிழ் மக்களைத் தடுத்துவருகின்றனர்.

அதேவேளை பொத்துவில் பிரதேசத்திலுள்ள சிங்களப் பகுதிகளான பாணமை மற்றும் லவ்கலை பிரதேசங்களில் காடுகளை துப்புரவு செய்து பயிர்ச்செய்கை செய்ய ஏற்பாடு செய்துகொடுத்துள்ளனர்.

ஆழிப்பேரலை இடரின்போது கோமாரி பிரதேசம் முற்று முழுதாக அழிந்ததுடன் அவர்களின் ஆவணங்கள் யாவும் இல்லாமல் போயுள்ளன.

ஆழிப் பேரலையின் பின்னர் பொத்துவில் பிரதேச செயலாளர்களாக முஸ்லிம் பிரதேச செயலாளர்கள் நால்வர் சேவையாற்றியுள்ளனர். அவர்கள் அனைவரும் தமிழ் மக்களைப் புறக்கணித்து அவர்களுக்கு ஆவணங்கள் வழங்காது 'இன்று போய் நாளை வா' என்று கூறி அலைக்களித்துக் கொண் டிருக்கின்றனர்.

பொத்துவில் பிரதேச சபையில் பெரிய ஒதுக்கீடுகள் வரும்போது அது ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்கு மாத்திரம் வழங்கப்படுவதோடு, 09 உறுப்பினர்களில் ஒரே ஒரு தமிழ் உறுப்பினரான என்னைப் புறக்கணித்துவிட்டு ஏனைய 8 முஸ்லிம் உறுப்பினர்களுக்கும் மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அந்தப் பிரதேசத்திலுள்ள தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு வரு கின்றனர்.

எனவே, இவ்வாறான செயற்பாடானது தமிழ் மக்கள் மத்தியில் மன வேதனையை ஏற்படுத்தி வருகின்றது–என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. (வ)

**நன்றி கூறுகின்றோம்**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் கடமையிலிருந்து ஓய்வுபெற்ற என்னையும் எனது குடும்பத்தினரையும் மணிவிழாவை நடத்தி கௌரவித்த கல்லூரி சமூகத்தினருக்கும் மணிவிழா குழுவின ருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள் கின்றோம்.

மணிவிழா நிகழ்வில் கலந்து கொண்ட சமயப் பெரியார்கள், நாடாளுமன்ற உறுப்பினர், வடமாகாண சபை உறுப்பினர்கள், பேராசிரியர்கள், கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண கல்வித் திணைக்கள வலயக் கல்வித் திணைக்கள பணிப்பாளர், உத்தியோகத் தர்கள், நிறுவனத் தலைவர்கள், அதிபர்கள், ஆசிரி யர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகள், மாணவர்கள், வணிகர் மன்றத்தினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

திரு திருமதி அருணாசலம் கயிலாயபிள்ளை குடும்பத்தினர்

சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஒய்வுநிலை அதிபர்

(C 19275)

**வியாபார அபிவிருத்தி சேவை வழங்குவதற்கான முன்மொழிவுக்கான கால நீடிப்பு**

08.02.2015 அன்று உதயன் பத்திரிகையில் 17 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட வியாபார அபிவிருத்தி சேவை வழங்குவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதி 27.02.2015 அன்று 9.00 மணிவரை காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை bdsprovision@g.mail.com என்னும் மின்னஞ்சல் முகவரி யில் அல்லது 021 222 2277 என்றும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

(சி/19279)(4.3.7)

# எம்.ஜ.கிறின் மிளகாய் செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபடும் விவசாயிகள்

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்.குடாநாட்டில் எம்.ஜ. கிறின் பச்சை மிளகாய் செய் கையில் கூடு தலான விவ சாயிகள் ஈடுபட்டுள்ள னர்.

எம்.ஜ.கிறின் பச்சைமிளகாய் விதை களை யாழ்.மாவட்ட விதை உற் பத்திக் கூட்டுறவுச் சங்கம் விவ சாயிகளுக்கு தாரா ளமாகத் தொடர்ந் தும் விநியோகித்து வருகின்றது.

இதனை அடுத்து அதிகளவிலான விவசாயிகள் இம் முறை எம்.ஜ. கிறின் பச்சை மிளகாய் இனச் செய் கையில் அதிக ஆர்வம் காட்டியுள் ளனர்.

இந்தச் செய்கையில் போகம் முந்தி பயிரிட்ட எம்.ஜ.கிறின் பச்சை மிள காய்கள் அறுவடை செய்யப்பட்டு சந்தைக்கு எடுத்து வரப்படுகின்றன. பெருமளவு மிளகாய் சந்தைக்கு வரத்தொடங்கியதால் அவற்றின் விலை திடீரெனச் சரிந்தும் காணப்படு கின்றன. குடாநாட்டின் வலி.கிழக்கு மற்றும் மேற்கு, தீவுப்பகுதியில் இந்தச் செய்கையில் கூடுதலான விவ சாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

அதேசமயம் எம்.ஜ.கிறின் பச்சை மிளகாய் செய்கையில் ஈடுபட ஆர்வம் காட்டும் விவ சாயிகளுக்கு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம்



இந்த மிளகாய் விதைகளைப் பெற்று விநியோகிக்கும் என்று சங்கத்தின் பொதுமுகாமையாளர் ரி.ரவி மயூரன் தெரிவித்தார். (வ–17)



அம்பாறை மாவட்டத்தில் வெள்ளத்தால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சின்னப் பால முனைகிராம மக்களுக்கு உலக உணவுதிட்டத்தின் கீழ் நேற்று திங்கட்கிழமை உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. சின்னப்பாலமுனை கிராம சேவை உத்தியோகத்தர். ஏ. பர்வின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், அரிசி, பருப்பு, தேங்காய் எண்ணெய் போன்ற உலர் உணவு பொருள் கள் அடங்கிய பொதிகள் 411 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. (வ)

# மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.24

ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாட சாலையின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று செவ் வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் தி.ஸ்ரீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் ஈ.சரவணபவன் மற்றும் சிறப்பு விருந்தினராக சண்டிலிப் பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜா, கௌரவ விருந் தினராக சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக் கல்வி) செல்வி செ.சுப்பிரமணியம் ஆகி யோர் கலந்து கொள்வர். (வ)

# நீண்டகாலமாக திருத்தப்படாத மாணிக்கபுரம் பிரதான வீதி

வவுனியா, பெப்.24

நாற்பது வருடங்களாக கவனிப் பாரின்றி இருக்கும் மாணிக் கபுரம் பிரதான வீதியைத் திருத்தித் தரு மாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுமார் 450 க்கும் அதிகமான குடும் பங்கள் இவ்வீதியை நாளாந் தம் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பயன்படுத்தி வருவ தாக வும் குறித்த வீதியில் உள்ள மரப்பலகைப் பாலத் தால் பாட சாலை சிறார்கள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குவ தாகவும் அந்தப் பகுதி மக்கள் முறையிட் டுள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:–



விசுவமடு பாரதி வித்தியாலயம் முன்பாக 1/2 ஏக்கர் திட்ட குடி யிருப்புக்கு செல்லும் சுமார் 1/2 கிலோமீற்றர் நீளமான பிரதான வீதி 1977 ஆம் ஆண்டு தொடக்கம் திருத்தம் செய்யப்படாது இருப்ப தாக தெரிவிக்கப்படுகிறது.

2015–02–02 அன்று வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவி கரன் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க குறித்த பகுதியைப் பார் வையிடச்சென்றபோதே மேற்படி முறைப் பாடுகள் முன் வைக்கப்பட் டிருந்தன.

450 இற்கும் அதிகமான குடும்பங்கள் நாளாந்த பாவனையில் உள்ள மேற்படி வீதியை யும் பல வருடங்களாக திருத்த வேலை களுக்கு உட் படுத்தப்படாது உள்ள மரப்பலகையாலான பாலத்தையும் திருத்தித் தருமாறும், இதனால் மழை காலங்களில் மேலும் பல் வேறு இடர் பாடுகளை தாம் எதிர் நோக்குவதாகவும் தெரி வித்திருந்தனர்.

மேலும் ஒரு தடவை மாணவர் ஒருவர் அந்தப் பலகைப் பாலத்தில் இருந்து தவறி வீழ்ந்து காப்பாற்றப் பட்ட சம்பவமும் இடம்பெற்றுள் ளது. இன்றுவரை தமது பிரதான வீதியையும் மழை காலங் களில் ஓடும் வெள்ளத்தால் மேலும் அபா யகரமான பாலமாகக் காணப்படும் மேற்படி பலகைப்பாலத்தையும் சீர் செய்து மக்களின் இயல்பு வாழ்க் கைக்கு உதவுமாறு வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவி கரனிடம் அந்தப் பகுதி மக்கள் கோரியிருந்தனர்.

மேற்படி கோரிக்கை தொடர்பிலான தகவல் களைச் சேகரித்த ரவிகரன், வீதி திருத்தம் தொடர்பிலும் பலகைப் பாலம் சீர் செய்தல் தொடர் பிலும் எடுக் கக்கூடிய நடவடிக்கை களை தாம் எடுப்பதாக, கிராம மக்களிடம் உறு தியளித்திருந்தார். (வ–426)

## விபத்தை பார்க்கச் சென்றவர் காயம்

கைதடிச் சந்திப் பகுதியில் நடைபெற்ற விபத் தொன்றைப் பார்வையிடச் சென்றவர் பாதை யோரம் இருந்த கற்களுக்குள் விழுந்து விபத் துக்குள்ளானார்.

சரவணமுருகன் (வயது–51) என்ப வரே விபத் தைப் பார்வையிடுவதற்காகத் தனது சைக்கிளில் சென்றுள்ளார். செல்லுகையில் பாதையோரத் தில் இருந்த கற்களுக்குள் சைக் கிள் சென்றதால் [illegible] தலையில் பல மாக அடிபட்டார். அதை அடுத்து சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். ([illegible])


## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை கோபாலகிருஷ்ணன்

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் திறைசேரி)



வல்லிபுரக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட வேலுப் பிள்ளை கோபாலகிருஷ் ணன் (22.02.2015) ஞாயிற் றுக்கிழமை மு.ப 11 மணி யளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான வேலுப்பிள்ளை- ஆச்சிமுத்து தம்பதியரின் புத்திரரும், சுமணாவதியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற செல்வவிநாயகம் மற் றும் பத்மாசனி அம்மாள், கம லாசினி அம்மாள் (பிரான்ஸ்), பாக்கியலட்சுமி அம்மாள், புஸ்பராணி (ஆஸ்தி ரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ரவிதாஸ், ஞான குமார் (பிரான்ஸ்), ரவிக்கா, மனோகரி (மிருக வைத்தியர்- பேராதனை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பராணி (பிரான்ஸ்), புவாட் (சிரேஷ்ட ஆணையாளர் வருமானவரி திணைக்களம்-கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2015) செவ் வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப ஒரு மணியளவில் ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

வல்லிபுரம்,
புலோலி.

(C/19280) (10.3)

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்லையா செல்வராசா



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் முருக மூர்த்தி வீதி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா செல்வராசா 22.02.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- பொன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர் களான பொன்னையா- அன்னம்மா தம்பதி யரின் அருமை மருமகனும், வையந்தி மாலாவின் அன்புக்கணவரும், சுகந்தன், சுரேஷ் (நாகபூசணி அம்பாள் ஓட்டோ), சுபாகரன் சுஜீர்வன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவக்கொழுந்து, மங்களம், காலஞ்சென்ற வடிவேலு, இராசரெத்தினம் மற்றும் தவமணி (பிரான்ஸ்), நீலாம்பிகை, தங்கரெத்தினம், காலஞ்சென்ற யோகம்மா மற்றும் தங்க மணி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற ஐயாத்துரை, விசுவலிங் கம், அன்னலெட்சுமி, மங்களம் மற்றும் சோமசுந்தரம், சுந்தரம்பிள்ளை, காலஞ்சென்ற லெட்சுமணன் மற்றும், சுப்பையா, காலஞ்சென்ற சிவஞானம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுபாஜினி, றஞ்சினி, ரூபா ஆகியோ ரின் மாமனாரும், நர்த்தனா, சாயிராதன், பீவிஷணன், பவித்திரன், வைஷ்ணவி, தர்கீசன், தருண் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2015) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்.
முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

077 609 4632,
077 833 2748,
077 123 4608

([illegible])

## மரண அறிவித்தல்



### திருமதி மீனாட்சி கனகரத்தினம்

தோற்றம் 26.04.1926 – மறைவு 19.02.2015

நல்லூரைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை (கும்பழாவளை மேற்கு) வசிப்பிடமாகவும் லண்டனை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சி கனகரத்தினம் 19.02.2015 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி, இராஜேந்திரம், இராஜரத் தினம், காலஞ்சென்ற இராஜகோபால், இராஜலஷ்மி, இராமச்சந்திரன், இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சண்முகநாதன், ஆறுமுகம் (நவாலி), குமாரசாமி (செட்டித்தெரு, நல்லூர்) ஆகியோ ரின் அன்புச் சகோதரியும், இந்திரன், சிவசுப்பிரமணி யம், சுதர்ஷன், சத்தியதேவி, வாசுகி, சிவகுமாரி, மடோனா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹரிநிவிர்த்தி நாத், தனுர்ஜன், பிரஷாந், ஹர்ஜினி, சேந்தன், றமணன், றூபி சிவானி, சிந்தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2015) புதன்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

([illegible])

தகவல்: குடும்பத்தினர்.




இந்த வருடத்திற்கான CES நிகழ்வு தற்போது இடம் பெற்றுக் கொண்டிருக் கின்றது.

இந்த நிகழ்வில் புதிய இலத்திரனியல் சாதனங் கள் பல புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

இதன்போது Egreat i5 mini PC என்ற சிறிய அள விலான கணினியும் அறிமுகம் செய்யப்பட் டுள்ளது.

இந்தக் கணனி Intel Atom Z3735F Bay Trail Processor மற்றும் பிரதான நினைவகமாக 2GB RAM என்பவற்றைக் கொண்டுள்ளது. இவை தவிர 32GB சேமிப்பு நினைவகத்தையும் கொண்டுள்ள இந்தக் கணினியில் விண்டோஸ் 8.1 இயங்குதளம் நிறுவப்பட் டுள்ளது.

மேலும் இந்தக் கணினி யின் விலை 100 டொலர்கள் வரை இருக்கும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

மாபெரும் வாகன ஏல விற்பனை
100இற்கும் மேற்பட்ட டீசல் மற்றும்
பெற்றோல் வாகனங்கள்



- கை உழவு இயந்திரங்கள்
- உழவு இயந்திரங்கள்
- டிமோ பட்டா லொறிகள்
- மோட்டார் சைக்கிள்கள்
- ஓட்டோக்கள்

2015 பெப்ரவரி 25ஆம் திகதி
ரயில்நிலைய வீதி, வைரவப்புளியங்குளம்,
வவுனியா.

பரீட்சித்துப் பார்த்தல் 22,23 மற்றும் 24ஆம் திகதிகளில்

உடனடி அழைப்பு: 011 511 81 81

லங்கா ஒறிக்ஸ் Fினான்ஸ்

NGT GATEWAY
No. 39, College Road, Nettilaipay, Jaffna.
Gateway CfICT



English and Computer Courses @ Low Cost

**Diploma in MS Office**

*Basic Concepts of IT*
*Managing Files*
*Word Processing*
*Spreadsheets*
*Database*
*Presentation*
*E-mail and Internet*

**English and Computer For School Students**

*English and ICT classes for school students as per their syllabus. evening & week end classes can be arrange for students' convenience.*

CISI · Gateway Language Centre · Gateway Kids · IPICT · ICDL · e-Citizen

NEW GATEWAY TECH (PVT) LTD.
No. 39, College Road,
Jaffna.
0215675555

# அம்மாடியோவ் இத்தனை பரிசுகளும் எமக்கா?

# உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10.11.12.13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6. 7. 8. 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3. 4. 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

**உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்**

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம் (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)

பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..........
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..........
கற்கும் பாடசாலை: ..........
தரம்: ..........
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..........
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..........
ஆசிரியரின் பாடத்துறை: ..........

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் .......... இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .......... அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

## ஓவியப்போட்டி

பிரிவு A
தரம் 10,11,12,13 — தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர்

பிரிவு B
தரம் 6. 7. 8. 9 — பனை வளமும் நாமும்

பிரிவு C
தரம் 3. 4. 5 — பண்டிகை நிகழ்வு

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

## மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10.11.12.13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

People's Bank Sisu Udana

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில் , பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

**30 ஆவது அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.

1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

## கட்டுரைப் போட்டி

பிரிவு Aபின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.

1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்

1. எதிரகாலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

30 அகவையில் உதயன்




## 87ஆவது ஒஸ்கார் விருது வழங்கும் விழா

லொஸ்ஏஞ்சல்ஸ், பெப்.24

87ஆவது ஒஸ்கார் விருது வழங்கும் விழா அமெரிக்காவில் உள்ள லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றுள்ளது. அதில் சிறந்த படங்கள், இயக்குநர்கள், நடிகர், நடிகைகள் உட்பட பல்வேறு பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தநிகழ்ச்சியில் கலந்துகொண்ட திரை நட்சத்திரங்களுக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் மறைந்த கலைஞர்களான மெரைல் ஸ்டீரிப், ஜெனிபர் ஹட்சன் போன்றோருக்கு மரியாதை செலுத்தப்பட்டது. கிராண்ட் புடாபெஸ்ஹொட்டேல்என்றபடம்3ஒஸ்கார் விருதுகளைப் பெற்றுள்ளது. சிறந்த படமாக பேர்ட்மேன் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)



ஆஸ்திரேலியாவின் தலைநகரான கான்பெரா பகுதியில் தேசிய வன விலங்கு சரணாலயம் மற்றும் மீன் காட்சி அரங்கம் அமைந்துள்ளன. பச்சைப் பசேல் என்ற இயற்கை எழில் சூழ்ந்த அமைதியுடன் திகழும் அந்தப்பகுதியைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அந்த வளாகத்தினுள் ஜமாலா வைல்ட் லைப் என்ற பெயரில் ஒரு புதிய ஹோட்டல் திறக்கப்பட்டுள்ளது.இந்த ஹோட்டலில் தங்குபவர்கள் கரடிகள் வேடிக்கை பார்க்க உல்லாசக் குளியலில் ஈடுபடுவதும் சிங்கங்கள் அருகிலிருந்து பிரியமான இறைச்சி வகைகளை உண்ணுவதையும் கண்ணாடிகள் இல்லாத ஹோட்டலின் மேல் தளத்தில் நின்றபடி ஒட்டகச் சிவிங்கிகளுடன் கை குலுக்குவதுமான காட்சிகள்.



## எட்வர்ட் ஜென்னர் கண்டுபிடிக்க முன்னரே இந்தியாவில் அம்மை தடுப்பூசி பாவனையில்

டில்லி, பெப்.24

அம்மை நோய்க்கான தடுப்பூசியை எட்வர்ட் ஜென்னர் கண்டுபிடிப்பதற்கு முன்னரே இந்தியர்கள் அம்மைக்கான தடுப்பூசி முறை பற்றி அறிந்திருந்தனர் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஹர்ஷவர்தன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, புதுடில்லியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் தெரிவிக்கையில்:

நவீன மருத்துவம் என்று கூறப்படும் விடயங்களில் பெரும்பாலானவை நமது இந்திய அறிவியலில் இருந்தே பெறப்பட்டவையாகும். அவை கி.பி.9ஆம் நூற்றாண்டில் அரேபிய, பெர்சிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன.

அதிலிருந்து, 17ஆம் நூற்றாண்டில் ஆங்கில மொழிக்கு மாற்றம் செய்யப்பட்டன. தற்போது, அந்த விடயங்கள் நமக்கு அமெரிக்க வழியில் கிடைக்கின்றன.

கடந்த 1798ஆம் ஆண்டில்தான் அம்மைப்பால் தடுப்பூசியை எட்வர்ட் ஜென்னர் கண்டுபிடித்தார். ஆனால் அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, அம்மைக்கான தடுப்பூசி முறையை நாம் பயன்படுத்தி வந்துள்ளோம் என்று அவர் தெரிவித்தார். (ஒ–ரி)



## பங்களாதேஷில் படகு விபத்து; 66 பேர் சாவு

டாக்கா, பெப்.24

பங்காளாதேஷில் இரு படகுகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 69 பேர் உயிரிழந்துள்ளனர். பத்மா ஆற்றில் தவுலத்தியா என்ற இடத்தில் இருந்து பதூரியா பகுதிக்கு பயணிகள் படகு ஒன்று சென்று கொண்டிருந்தது. அதில் 150 பேர் பயணம் செய்தனர், இந்தநிலையில் சரக்குகளை ஏற்றி வந்த மற்றொரு படகொன்று அந்தப் பயணிகள் படகுடன் மோதியதில், பயணிகள் படகு கவிழ்ந்து ஆற்றில் மூழ்கியது. ஆற்றில் தத்தளித்த பயணிகளை மீட்கும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டனர், இருந்தபோதிலும் 66 பேர் தண்ணீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். அவர்களில் பெண்கள், சிறுவர்கள் மற்றும் பச்சிளங்குழந்தைகளும் அடங்குகிறார்கள். அவர்கள் தவிர நீரில் தத்தளித்தபலர் அந்த வழியாகச் சென்ற படகுகள் மூலம் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் 50க்கும் மேற்பட்டோரை தேடும் பணி நடைபெற்று வருகிறது. அந்தப்படகு விபத்து குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக கப்பல் போக்குவரத்து அமைச்சர் ஷாஜகான் தெரிவித்துள்ளார்.(ஒ–ரி)

## மனித வெடிகுண்டாக மாறிய சிறுமி

அபுஜா, பெப். 24

நைஜீரியாவில் வடகிழக்கு பகுதியில் பொடிஸ்கும் என்ற நகரம் அமைந்துள்ளது. அங்குள்ள சந்தைப்பகுதியில் 8 வயதுடைய சிறுமியொருத்தி தனது உடலில் பொருத்தப்பட்டிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்ததில் 5 பேர் சாவடைந்துள்ளனர். அதில் பலர் காயம் அடைந்துள்ளனர். மேலும் அங்கிருந்த கட்டடங்களும் இடிந்து சேதமடைந்துள்ளன.

நைஜீரியாவில் தீவிரவாதிகள் அச்சுறுத்தல் இருப்பதால் பொது இடங்களில் பொதுமக்கள் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

அந்த நடைமுறைக்கு குறித்த அந்தச் சிறுமியை சோதனையிட பாதுகாப்புத்தரப்பினர் முயன்றனர். அந்தச் சிறுமி அதற்கு உடன்பட மறுத்து வாக்குவாதத்தில் ஈடுபட்டாள்.

அந்த வேளையில் அவள் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்க செய்தாள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

# காஷ்மீரில் படையினர் தேடுதல் வேட்டை

### பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதக்குவியல் மீட்பு

டில்லி, பெப்.24

காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தில் உள்ள கஜ்ரியால் காட்டுப்பகுதியில் பாதுகாப்புப் படையினரின் தீவிர தேடுதல் நடவடிக்கையின்போது தீவிரவாதிகளால் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன. அந்தப்பகுதியில் தீவிரவாதிகள் சிலர் பதுங்கியிருப்பதாகப் பாதுகாப்புப் படையினருக்கு நேற்று முன்தினம் இரகசிய தகவலொன்று கிடைத்தது. அதனைத் தொடர்ந்து அவர்கள் அந்தப்பகுதிக்கு விரைந்து சென்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.



எனினும், அந்தவேளையில் அங்கு தீவிரவாதிகள் எவரும் மறைந்திருக்கவில்லை. அங்கு தீவிர சோதனை நடத்தியபோது, ஒரு பெரிய மரத்தின் பொந்துக்குள் ஏராளமான ஆயுதங்களை தீவிரவாதிகள் பதுக்கி வைத்திருந்ததை அவர்கள் கண்டு பிடித்து கைப்பற்றியுள்ளனர். இந்த நடவடிக்கையின் மூலம் தீவிரவாதிகளால் நடத்தப்பட இருந்த மிகப் பெரிய தாக்குதல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது என இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஒ–ரி)



## இந்திய மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார் மோடி

புதுடில்லி, பெப்.24

மன் கி பாத் என்ற பெயரில் வானொலியில் உரையாற்றிய பிரதமர் மோடி, மாணவர்களுக்கு பல அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

பிரதமர் மோடி குறிப்பிட்ட வானொலி நிகழ்ச்சியில் தெரிவிக்கையில், பெற்றோர்களே! உங்களது பிள்ளைகளை, மற்ற மாணவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள். அவ்வாறு செய்வதால், குழந்தைகள் மனதில் அழுத்தம் ஏற்படும்.

மாணவர்களே போர் வீரர்களாக இருங்கள், கவலைப்படுபவர்களாக இருக்க வேண்டாம், கவலை இல்லாமல் பரீட்சை எழுதுங்கள்.

கடின உழைப்புத்தான் வெற்றியைத் தரும், அதற்கு மாற்றாக வேறு எதுவுமே இருக்க முடியாது. உங்கள் மீது நீங்கள் நம்பிக்கை வையுங்கள். பரீட்சையில் வெற்றி பெற்றால் மட்டும் வாழ்க்கையில் வெற்றி பெற்றதாக அர்த்தம் கிடையாது. உங்களது சக்தியை அறிந்து கொள்வதற்கு மட்டுமே பரீட்சை நடத்தப்படுகிறது. ஆகவே வாழ்க்கையிலும் வெற்றி பெறுங்கள். மாணவர்கள் அறிவில் சிறந்து விளங்கினால்தான், நாடு முன்னேறும் என்று தெரிவித்துள்ளார். (ஒ–ரி)

## மன்னிப்பை ஏற்க மறுத்தது எமிரேட்ஸ் விமான நிறுவனம்

வொஷிங்டன், பெப். 24

அமெரிக்காவில் நடந்த இரட்டைக் கோபுர தாக்குதலுக்கு டெல்டா நிறுவனத்தால் குற்றம்சாட்டபட்ட எமிரேட்ஸ் விமான நிறுவனம் தற்போது டெல்டா நிறுவனத்தின் மன்னிப்பை ஏற்க மறுத்துள்ளது.

கடந்த 2001ஆம் ஆண்டு அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள உலக வர்த்தகக் கட்டடத்தின் மீது அல்குவைதா அமைப்பினர் நடத்திய தாக்குதலில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

அந்த தாக்குதலுக்கும் எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்கும் தொடர்புள்ளதாக அந்தநாட்டின் டெல்டா எயார்லைன்ஸ் கடந்த சில தினங்களுக்கு முன்னர் குற்றம்சாட்டியிருந்தது.

இந்தநிலையில் டெல்டா நிறுவனத்தினர் தங்களின் குற்றச்சாட்டு தவறானது என்று தெரிந்தவுடன் மன்னிப்புக் கோரியுள்ளனர்.

ஆனால் அந்தநிறுவனத்தின் மன்னிப்பை ஏற்க எமிரேட்ஸ் நிறுவனம் மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)



24 FEB 2015

# 21 குர்திஷ் போராளிகளை கொன்ற ஐ.எஸ். தீவிரவாதிகள்

## இரும்புக் கூண்டுகளில் சிறை ஊர்வலம்





பக்தாத், பெப்.24

குர்திஷ் போராளிகள் 21 பேரை ஐ.எஸ். தீவிரவாதிகள் கொடூரமாகக் கொலை செய்த வீடியோக் காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

ஈராக்கில் உள்ள முக்கிய நகரங்களைக் கைப்பற்றும் முயற்சியில் ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கும்,குர்திஷ் போராளிகளுக்கும்இடையேமோதல்கள் தொடர்ந்தவண்ணமேஉள்ளன.

குர்திஷ் போராளிகள் 21 பேரை இரும்புக் கூண்டுக்குள் அடைத்து நகர வீதிகளில்ஊர்வலமாகஅழைத்துச்செல்வது போன்ற ஒரு வீடியோவை ஐ.எஸ். தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர்.

பணயக்கைதிகளுக்கு வழங்கப்படும் வழக்கமான ஆடைகளுடன் குர்திஷ் போராளிகளை தெரு வழியாகத் தீவிரவாதிகள் அழைத்துச் செல்லும்காட்சிவெளியிடப்பட்டுள்ளது.

பின்னர், நான்குபுறமும் நெடுஞ்சுவரால் சூழப்பட்ட பரந்த பகுதி ஒன்றில் இரும்புக் கூண்டுக்குள் அவர்களைநிற்கவைத்து, குர்திஷ்போராளிகள் ஒவ்வொருவரிடமும் ஐ.எஸ் அமைப்பை சேர்ந்த தீவிரவாதி ஒருவன் பேட்டி எடுப்பது போன்ற காட்சிகளும் –

சிறிது நேரத்துக்கு பிறகு, கூண்டுக்குள் இருந்த 21போராளிகளையும் வெளியே இழுத்து வந்து மண்டியிட வைத்து அவர்களுக்கு பின்னால் கைத்துப்பாக்கிகளுடன்தீவிரவாதிகள் நிற்கின்ற காட்சியும் வெளியாகியுள்ளது.

மேலும்ஒவ்வொருகுர்திஷ்போராளிகள் பற்றிய தகவல்களும் வீடியோவில் காண்பிக்கப்படுகிறது. 9 நிமிடங்கள் ஒளிபரப்பப்படும் இந்த வீடியோவின் இறுதியில் ஒரு வயதான போராளியின் முகத்தை நோக்கி துப்பாக்கி வெடிப்பது போன்ற காட்சியுடன் வீடியோ வெளியிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் அந்த முதியவர் இறப்பதுடன் எஞ்சிய 20 போராளிகளும் கொடூரமாக கொலை செய்யப்பட்டதை உணர்த்தும் விதமாக அந்த வீடியோ உள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.



## பிரிட்டனில் 9 கோடி ரூபா செலவில் மகாத்மா காந்தியின் வெண்கலச் சிலை

லண்டன், பெப்.24

பிரிட்டனில் 9 கோடி ரூபா செலவில் உருவான மகாத்மா காந்தியின் வெண்கலச் சிலை எதிர்வரும் மார்ச் மாதம் 14 ஆம் திகதியன்று திறந்துவைக்கப்படும்என்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

அந்தச் சிலை வரலாற்று சிறப்புமிக்க பிரிட்டனின் நாடாளுமன்ற சதுக்கத்தில்அமைக்கப்பட்டுள்ளது. 1931ஆம் ஆண்டு பிரிட்டன் வந்த காந்தியின்உருவப்படத்தைவைத்து புகழ்பெற்ற சிற்பக் கலைஞர் பிலிப் ஜாக்சன் அந்தச் சிலையைத் தத்ரூபமாக வடிவமைத்துள்ளார்.

அந்தச்சிலையை அமைப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட அறக்கட்டளைக்கு ஆறே மாதங்களில் 9கோடி இந்திய ரூபா நிதியாக கிடைத்திருந்தது இந்தியா இங்கிலாந்து மட்டுமன்றி உலகம் முழுவதுமுள்ள பல நாடுகளிலும் உள்ளவர்கள் நிதியுதவி அளித்திருந்தனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள சிலை திறப்பு விழாவில் இந்திய மத்திய அமைச்சர் அருண்ஜேட்லிபங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெற்ற பாரம்பரிய 'கரகொல்' கொண்டாட்டக் காட்சி.



## மாலைதீவின் முன்னாள் அதிபர் கைது

மாலே,பெப்.24

மாலைதீவின் முன்னாள் அதிபர் மொஹமட்நஷீட்டை அந்நாட்டுஅதிகாரிகள்பயங்கரவாதகுற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்துள்ளனர்.

மாலைதீவில் ஜனநாயக ரீதியில் தெரிவான முதலாவது அதிபரான மொஹமட் நஷீட், தலைநகரில் அரச எதிர்ப்பு பேரணியொன்றை நடத்த ஏற்பாடு செய்திருந்தார்.

அந்தப் பேரணி நடைபெறுவதற்கு 6 நாள்கள் உள்ள நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அப்துல்லா யமீன் அதிபராக தெரிவானது முதல் கடந்த 15 மாதங்களாக மாலைதீவில் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டவண்ணம் உள்ளன.

அங்கு, முன்னாள் இராணுவ அதிகாரியான பாதுகாப்பு அமைச்சரை அண்மையில் பதவி விலக்கிய அதிபர், இராணுவச் சதிப்புரட்சி ஒன்றுக்கு அவர் திட்டமிட்டதாகக் குற்றஞ்சாட்டி கைதுசெய்துள்ளார்.

மேலும் கடும்போக்குவாதிகளான சன்னி முஸ்லிம்கள் மாலைதீவிலிருந்து வெளியேறி இஸ்லாமிய அரசுஆயுதக்குழுவுடன்இணைவதற்காக அண்மைக்காலங்களில் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ளதாக எதிரணியினர் தெரிவித்துள்ளனர்.

ஆயுதப் போராட்டத்தை அரசு ஊக்குவிப்பதாக எதிரணியினர் குற்றம்சாட்டி வருகின்றனர். ஆனால், அந்தக் குற்றசாட்டை அரசு உறுதியாக மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)



## நீண்ட வாளை விழுங்கி அசத்திய கர்ப்பிணிப் பெண்

வொஷிங்டன்,பெப்.24

அமெரிக்காவில்கர்ப்பிணிப்பெண் ஒருவர் தனது வாயில் வாளை வைத்துச் செய்த சாகசம் அனைவரையும் அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள டலாஸ் பகுதியை சேர்ந்தவெரோனிக்காஹொர்னான்டெஸ் என்ற பெண் தற்போது 9 மாத கர்ப்பிணியாக உள்ளார்.

அவர்14 அங்குலம்கொண்ட நீண்ட வாள் ஒன்றைத் தனது வாயினுள் வைத்து,அதைமுழுவதுமாகவிழுங்கிச் சாதகம் செய்துள்ளார்.

அந்த அபாயகரமான சாகசத்தைப் பார்த்த பார்வையாளர்கள் வாயடைத்துப் போனதுடன் அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலும் ஆழ்ந்துள்ளனர். (ஒ–ரி)

## ஐ.எஸ்.தீவிரவாதிகளுடன் இணையச் சென்ற மாணவிகள்; பிரிட்டன் பொலிஸார் தேடுதல்

லண்டன், பெப். 24

ஐ.எஸ் அமைப்பில் சேருவதற்காக பிரிட்டனிலிருந்து சிரியா சென்ற மூன்று இளம் பெண்களைப் பொலிஸார்தீவிரமாகத் தேடிவருகின்றனர்.

ஈராக், சிரியாவின் பல்வேறு நகரங்களைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கி ஐ.எஸ். தீவிரவாதிகள் பல்வேறு அட்டூழியங்களை அரங்கேற்றி வருகின்றனர்.

உலகம் முழுவதிலும் இருந்து பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இளம் பெண்கள், இளைஞர்கள் இந்த அமைப்பில் சேருவதற்காக படையெடுத்து வருகின்ற நிலையில் ஐ.எஸ். அமைப்பில் சேருவதற்காக பிரிட்டனைச் சேர்ந்த 3 பாடசாலை மாணவிகள் சிரியா சென்றுள்ளனர்.



அதனைத்தொடர்ந்து அவர்களைக்கண்டு பிடிக்கும் பணியில் இங்கிலாந்து பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து தீவிரவாத எதிர்ப்பு தளபதி ரிச்சர்ட் வொல்டன் தெரிவிக்கையில்;

இளம்பெண்கள்பாதுகாப்புக் குறித்து கவலையடைவதாகவும், எவராவது முன்வந்து பொலிஸாருக்குத் தகவல் தரவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் துருக்கிய ஊடகங்களைப் பயன்படுத்தி அந்த இளம்பெண்களைவெளியேகொண்டுவர முயற்சி செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். (ஒ–ரி)

## உக்ரைனில் போர்க் கைதிகள் 191 பேர் விடுதலை

கீவ்,பெப்.24

உக்ரைனில் போர்நிறுத்தத்தை தொடர்ந்து இரு தரப்பினராலும் கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த போர்க் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டனர். அதன்படி 139 இராணுவ வீரர்களும், 52 கிளர்ச்சியாளர்களும் என மொத்தம் 191போர்க் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.அவர்கள்ஷாலோபோக்நகரம்அருகேவிடுதலைசெய்யப்பட்டுள்ளனர். அந்தத் தகவலை உக்ரைன்அதிபர் பெட்ரோ பொரொஷென்கோ தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அதில் இது வரை 5700 பேர் சாவடைந்துள்ளனர். இந்த நிலையில் சண்டையை முடிவுக்குக் கொண்டு வர மின்ஸ் நகரில் போர் நிறுத்தப் பேச்சுக்கள் நடைபெற்றன.

அதில், ரஷ்யா, ஜேர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஈடுபட்டதைத் தொடர்ந்து போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது. எனினும் இராணுவம் மற்றும் கிளர்ச்சியாளர்கள் தரப்பில் போர் நிறுத்தம் மீறப்பட்டது. இருந்த போதிலும் அமெரிக்கத் தலையீட்டின் பேரில் போர்நிறுத்தம் தொடரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)

# பெரன்டினா மற்றும் பாம் இணைந்து களப்பு மீன்பிடித்தலுக்கு ஊக்குவிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலையாண்மையுடன் கூடிய மீன் பிடித்தல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் பெரன்டினா அபிவிருத்தி சேவைகள் மற்றும் பாம் (கிழக்கு) ஆகியன இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த களப்பு பகுதியில் மீன்பிடித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் மீனவர்களுக்கு நிலையான மீன்பிடித்தல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பில் பாம் (கிழக்கு) இனால் முன்னெடுக்கப்பட்டிருந்த ஆய்வின் பெறுபேறாக இந்தத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. மட்டக்களப்பின் களப்பு பகுதியில் மீன்பிடித்தலில் ஈடுபடும் 80 சதவீதமான மீனவர்களால் பயன்படுத்தப்படும் வலைகள் சட்டவிரோதமானவையாக அமைந்துள்ளன. இதன் காரணமாக, இந்த வலைகளின் மூலமாக அளவுக்கதிகமான மீன்கள் பிடிக்கப்பட்டு, இந்த பகுதியின் மீன்பிடித் துறையின் நிலையாண்மைக்கு பங்கம் ஏற்படும் வகையில் அமைந்துள்ளது.

செலவீனம் பகிரப்படும் வகையில் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்துக்கு பாம் (கிழக்கு) மற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பங்காளர் அமைப்புக்கு 1.7 மில்லியன் ரூபாவை பெரன்டினா மையம் வழங்கவுள்ளதுடன், இதில் 50 சதவீதம் பாம் (கிழக்கு) அமைப்பினால் மீள செலுத்தப்படும் என்பதுடன், எஞ்சிய தொகை செயற்பாட்டுச் செலவீனமாகக் கொள்ளப்படும். மாவட்ட மீன்பிடித் திணைக்களம் என்பது இந்த திட்டத்துடன் கைகோர்த்துள்ள மிகவும் முக்கிய பங்காண்மை அமைப்பாகும்.

அத்துடன் பயன்பெறுவோர் தெரிவுக் குழு, வலைகளை கொள்வனவு செய்யும் குழு மற்றும் திட்டத்தை மேற்பார்வை செய்வதற்கான வழிகாட்டல்களை வழங்குவது போன்றன இதன் மூலம் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த மூன்று ஆண்டு திட்டத்தின் முதல் கட்டத்தின் போது, மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த 189 களப்பு மீனவர்களுக்கு, வட்டியில்லாத கடன் அடிப்படையில் சட்டபூர்வமான மீன்பிடி வலைகளையும் மீன்பிடிஉபகரணங்களையும்கொள்வனவு செய்வதற்கான நிதி உதவி வழங்கப்படும். சட்டபூர்வமான மீன்பிடி வலைகளையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்கான உதவிக்கு மேலதிகமாக மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பின்தங்கிய மீன்பிடி அமைப்புகளுக்கு கொள்வனவு பயிற்சிகளை முன்னெடுப்பதற்கான உதவிகளையும் வழங்குவதுடன், மீன்பிடி சமூகத்துக்கு சட்டவிரோதமான மீன்பிடித்தல் செயற்பாடுகளின் காரணமாக நீண்டகால அடிப்படையில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் பற்றிய விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

இந்த திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தின் மன்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மண்முனை மேற்கு பகுதியிலிருந்து முதற் கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. காத்தான்குடி, மண்முனைபற்று, பட்டிபொல, வெள்ளவெளி, களுவாஞ்சிக்குடி, மண்முனை வடக்கு –2 மற்றும் செங்கலடி போன்ற பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 3000 மீனவர்களை 2017 ஆம் ஆண்டின் மத்திய காலப் பகுதியினுள் இந்தத் திட்டத்தின் மூலம் உள்வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (த)

## பட்டியலிடப்பட்ட தொகுதிக் கடன்களில் கபிட்டல் அலையன்ஸ் முன்னிலை

இலங்கையின் முன்னணி நிறை சேவை முதலீட்டு வங்கியான கபிட்டல் அலையன்ஸ் பட்டியலிடப்பட்டுள்ள தொகுதிக் கடன்களில் ஏனைய போட்டியாளர்களை விட உன்னத விளைவுகளை அளித்தவாறு சந்தை முதல்வன் என்ற தகைமையுடன் 2014 ஆம் வருடத்தை நிறைவு செய்துள்ளது.

கடந்த ஆண்டில் நிறுவனமானது 18 பில்லியன் ரூபா என்ற மொத்த பெறுமானம் கொண்ட ஐந்து தொகுதிக் கடன் வழங்கல்கள் குறித்து தனது வாடிக்கையாளர்களுக்கு ஆலோசனையளித்துள்ளது.

இதில் ரூ. 10 பில்லியன் டிசம்பர் மாதத்தில் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். நிறுவனத்தின் வாடிக்கையாளர் தொகுப்பில் இலங்கையின் வர்த்தக வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் பெரு நிறுவனங்கள் ஆகியன உள்ளடங்கியுள்ளன.

கபிட்டல் அலையன்ஸ் ஆனது, மேற்குறிப்பிடப்பட்டுள்ள 18 பில்லியன் ரூபா பெறுமதியை தனியிலக்க வட்டி விகிதங்களில் பெற்றுக்கொண்டமையானது, தற்போதைய சந்தைச்சூழலில் நிலவும் மிகக்குறைந்த வட்டி வீதங்களுக்கு மத்தியிலும் நீண்ட நாள் நிதியீட்டத்தினைப் பெற்றுக் கொள்ளத்தக்க நிறுவனத்தின் வல்லமையை வெளிப்படுத்துகின்றது.

2014 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட கெபிட்டல் அலையன்ஸின் குறிப்பிடத்தக்க ஒப்பந்தங்களில் நாட்டின் முதலாவது தனியிலக்க வட்டி விகிதத்தினைக் கொண்ட தொகுதிக்கடன், 8.5 என்ற வட்டி வீதத்துடன் DFCC வங்கிக்கு அளிக்கப்பட்ட ரூ. 5 பில்லியன் வழங்கல், வருடத்தின் மிகப்பெரும் தனியார் துறை தொகுதிக்கடன் வழங்கலாக திகழும் 8.25 என்ற வட்டி வீதத்துடன் சம்பத் வங்கிக்கு அளிக்கப்பட்ட ரூ. 7 பில்லியன் ரூபா வழங்கல் ஆகியவற்றை எடுத்துக்காட்டலாம்.

இந்த தொகுதிக்கடன்களுக்கான முதலீட்டாளர்களாக, நாட்டின் முன்னணி காப்புறுதி நிறுவனங்கள், ஓய்வூதிய நிதியங்கள், வர்த்தக வங்கிகள், பரஸ்பர நிதியங்கள், நிதித்துறை சாரா நிறுவனங்கள் மற்றும் உயர் நிகர பெறுமானம் கொண்ட தனிநபர்கள் போன்றோர் விளங்கினர்.

நிறுவனத்தின் செயற் திறன் குறித்துத் தனது கருத்தைத் தெரிவித்த கப்பிட்டல் அலையன்ஸ் முதலீட்டு வங்கியியல் தலைமை அதிகாரி டேஷான் புஷ்பராஜா,

கடன் நிதியீட்டத்தினை பெற்றுக்கொள்வதில் நாட்டின் முதன்மை நிறுவனங்கள் பலவற்றின் நம்பிக்கையை பெற்றுள்ளமை குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம். சொத்து வகுப்புகளாக இனம்காணப்பட்டுள்ள பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்களின் ஈடுபாடானது கடந்த இரண்டு வருடங்களில் ரூ. 100 பில்லியனுக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

இந்த சந்தையானது நாட்டில் தற்போது வளர்ந்துவரும் நிலையில், முதலீட்டாளர்கள் மற்றும் வழங்குநர்களை உள்ளடக்கிய எமது வாடிக்கையாளர்களுக்கிடையில் சந்தையுடனான அர்த்தமுள்ள, நீண்டகால உறவுமுறையொன்றை உருவாக்கி அதன்மூலம் நிதியீட்டத்தினை உயர்த்தி முதலீடு செய்வதற்கான களத்தை உருவாக்குவதில் எம்மாலியன்ற உதவிகளைச் செய்ய முடியும் என நாம் நம்புகின்றோம் என்றார்.

2014 ஆம் ஆண்டில் கெபிட்டல் அலையன்ஸ் நிறுவனத்தின் வெற்றியானது மிகச்சிறந்த தரம் கொண்ட கட்டமைத்தல், முன்னெப்போதுமற்ற வகையிலான எண்ணிக்கை மிகு முதலீட்டாளர்களிடையேயான உறவுமுறைகளைப் பயன்படுத்துதல் மற்றும் பரிவர்த்தனைக்குப் பின்னரும் தொடர்ச்சியான ஆதரவை வழங்குதல் ஆகிய முழுமையான அதன் மும்முனை அணுகுமுறையின் காரணமாகவே நிகழ்ந்தது.

நிறுவனத்தின் உள்ளக நிலையான வருமான வர்த்தக மையமானது (நிறுவன தொகுதிக்கடன்களின் மிகப்பெரும் வர்த்தகர்) தொடர்ந்தும் சந்தை ஒன்றினை உருவாக்கியவாறு' முதலீட்டாளர்களுக்கு அவர்களின் தொகுதிக்கடன்களுக்கான தயார்நிலையில் திரவத்தன்மை மற்றும் தொடர்ச்சியான சந்தையை அளித்தவாறுள்ளது.

இந்த நடைமுறையானது வாடிக்கையாளர்கள் அடுத்தடுத்த சுற்றுகளில் போட்டித்தன்மையுடன் கூடிய வட்டிவீதத்தில் குறிப்பிடத்தக்க நிதியைத் திரட்டுவதற்கு வழி சமைக்கிறது. (த)

# தேவன்அணைக்கட்டும் யாழ்.குடாநாட்டுக்கான குடிதண்ணீர்த் திட்டமும்

விசுவ.ஜெகநாதன்



கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தின் வன்னேரிக்குளம், தேவன் குளம், பன்றிவெட்டிக்குளம், கரியாலை நாகபடுவான் குளம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக வன்னேரி, ஐயனார்புரத்தில் ஆரம்பித்து கரியாலை நாகபடுவான் மன்னார் சங்குபிட்டி வீதி வரை நீண்ட சுமார் 20 கிலோ மீற்றர் நீளமான அணைக்கட்டை நிர்மாணிப்பதன் மூலமாக எண்ணற்ற பயன்களைப் பெற முடியும். இதன் மூலமாக இந்தப் பகுதியில் நீர்ப்பாசன வசதி கிடைப்பதுடன், இருபோகங்களுக்கும் நெல் வேளாண்மையும் உப உணவுப் பயிர்களைப் பயிரிடவும் வசதிகள் ஏற்படும். இந்த நீர்த்தேக்கத்தின் மூலம் பூநகரி நெல் வயல்களுக்கும் நீர்ப்பாசனம் செய்யக் கூடியதாக இருக்கும்.

மேலும் முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்தின் அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டிய குளம், தேவன் அணை ஆகியவற்றின் பின்புறத்தில் காடு சார்ந்த பெரிய நிலப் பரப்புக் காணப்படுகின்றது. இங்கு நீரை அதிகளவில் தேக்கமுடியும். அத்துடன் பாலியாற்றிலிருந்து கடலில் கலக்கும் நீரை திசை திருப்புவதன் மூலமும் நீரின் கொள்ளளவைக் கூட்ட முடியும்.

இந்தத் திட்டத்தைச் செயல் வடிவம் கொடுப்பதற்குப் பெரியளவில் நிதி தேவைப்படும். உலக வங்கியின் உதவியையும் பொருளாதார வளமிக்க நாடுகளான இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளின் நிதி உதவிகளைப் பெற்றுக் கொண்டால் திட்டத்தைச் செயற்படுத்த முடியும். அணையின் திட்ட வரைவுகள் மேற்கொண்டு ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்வதுடன் நீர்ப்பாசன வல்லுநர்கள், புத்திஜீவிகள், வடமாகாண சபையினர், வடமாகாண நாடாளு மன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட வேண்டும்.

இரணைமடுக் குளத்தில் இருந்து யாழ்.குடாநாட்டுக்கு குடிதண்ணீர் வழங்கலுக்கான திட்டம் இரணைமடுக்குள விவசாயிகளின் மற்றும் மக்களின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது.

தேவன் அணைத்திட்டம் அவ்வாறு இல்லை. இரணைமடுக் குளத்தை விடவும் இரு மடங்கு நீர் கொள்ளளவைக் கொண்டதாக இந்த அணைக்கட்டு அமையும். இதனால் யாழ்.குடாநாட்டுக்குத் தங்குதடங்கலின்றி குடிதண்ணீரை வழங்க முடியும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும் பட்சத்தில் ஏராளமான விளைநிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைப்பதுடன் வடமாகாணம் நெற் களஞ்சியமாக மாற்றமடையும். யாழ்.குடாநாட்டுக்கான குடிதண்ணீர் வசதி மட்டுமல்லாது பூநகரி விவசாயிகளும் நன்மையடைய வாய்ப்புக்கள் உள்ளன. இந்தத் திட்டம் செயல்வடிவம் பெறுவதற்கு விடா முயற்சி அவசியமாகும்.

# வாசகர் திருமுகம்

## ஆக்கபூர்வமாகச் செயற்படுவார்களா?

தற்போது யாழ்.குடாநாடு முழுவதும் தண்ணீர் மாசடைந்து வருகின்றது. கழிவு ஒயில் பிரச்சினை சுன்னாகத்துடன் நின்றுவிடாமல் ஏனைய பகுதிகளுக்கும் வேகமாகப் பரவி வருகின்றது.
மனிதர்கள் உயிர்வாழ்வதற்கு மிகவும் அவசியமானது குடிதண்ணீர் என்பதை அனைவரும் அறிவார்கள். உணவு இல்லாமற் கூட சில நாள்கள் உயிர் வாழலாம். ஆனால் நீர் அருந்தாமல் ஒரு நாள் இருப்பதே முடியாத காரியமாகும். இந்த நிலையில் ஏற்கனவே இரசாயனக்கழிவுகளால் நிறைந்து மாசடைந்த குடாநாட்டின் நிலத்தடி நீர், தற்போது கழிவு ஒயிலும் நிறைந்து பயன்படுத்த முடியாத அளவுக்கு மாசடைந்துள்ளது.
பொதுமக்களின் குடிதண்ணீர்த் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு ஆங்காங்கே நீர்த் தொட்டிகளை வைத்து நீரை வழங்குவது சிறந்த சேவையாகும். இதற்காக உரியவர்களைப் பாராட்டலாம்.
ஆனால் குடாநாடு முழுவதும் நீர் மாசடைந்தால் சுத்தமான நீரை எங்கிருந்து பெறுவது என்பதுதான் தற்போதுள்ள பிரச்சினையாகும். கடல்நீரை சுத்தப்படுத்திக் குடிதண்ணீராக மாற்றும் திட்டம் தொடர்பாகப் பேசப்பட்டது. ஆனால் இதுதொடர்பாக எவரும் கதைப்பதாகத் தெரியவில்லை. இரணைமடுக்குளத் திட்டமும் பிசுபிசுத்துப் போய்விட்டது. தவித்த வாய்க்கு நீரைத்தருவதற்குக் கூட சிலர் விரும்பவில்லை.
ஆகவே வெறுமனே பேசிக் கொண்டிருப்பதை விடுத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து, குடாநாட்டு மக்களின் தண்ணீர்த் தேவைகள் நிறைவேற்றி வைக்கப்படல் வேண்டும். அரசியல்வாதிகள், புத்திஜீவிகள்,வர்த்தக சமூகத்தினர், மதத்துடன் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்கள், பொதுமக்கள் அனைவரும் இணைந்து செயற்படுவதன் மூலமாகவே இதற்கொரு தீர்வைக் காண முடியும். செய்வார்களா?

*சுமதி,உடுவில்.*

## வடமராட்சி மினிபஸ் சங்கத்தின் கவனத்துக்கு

நேற்றுமுன்தினம் 22ஆம் திகதி நண்பகல் வேளையில் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் 750 ஆம் இலக்க மினிபஸ்ஸில் நெல்லியடியிலிருந்து யாழ்ப்பாணம் வரை பிரயாணம் செய்தேன்.
புறாப் பொறுக்கி ஆலடியைத் தாண்டியதும் அந்த பஸ் அதிவேகமாகச் செல்ல ஆரம்பித்தது. வளைவுகளில் கூட அதன்வேகம் குறையவில்லை. வல்லைப் பாலத்தின் மீது செல்லும் போதும் கடுகதி வேகத்தில் பறந்து சென்றது. அந்த வாகனத்துக்கு ஏதாவது நடந்தால் அதில் பயணம் செய்த பிரயாணிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. ஆகவே மினிபஸ் சாரதிகள் வேகத்தைக் குறைந்து விவேகமாக நடந்தால் நல்லது.
அதேவேளை, இந்த மினிபஸ்ஸில் அதிக சத்தத்துடன் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டதால் பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். அளவான சத்தத்துடன் பாடல்களை ஒலிப்பரப்பினால் பயணிகள் அதை ரசிப்பார்கள். ஆனால் அதிக சத்தம் அவர்களை அவதிப்படவே வைக்கும்.
வடமராட்சி மினிபஸ் சங்கத்தினர் இதில் கவனமெடுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

*ம.ஷர்மிலா,நெல்லியடி.*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# உரிமைக்காக அணி திரள்க

இறுதிப்போரில் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பிலான ஐ.நாவின் விசாரணை அறிக்கையை ஏற்கனவே திட்டமிட்டவாறு எதிர்வரும் மார்ச் மாதம் வெளியிடுமாறு கோரியும், அறிக்கையை ஒத்திவைத்தமைக்கும் எதிர்ப்புத் தெரிவித்தும் இன்று யாழ்ப்பாணத்தில் மாபெரும் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை யாழ்.பல்கலைக் கழகச் சமூகம் மேற்கொண்டுள்ளது.
மிக நீண்டகாலத்தின் பின்னர், யாழ் பல்கலைக்கழகச் சமூகத்தினால் பெரும் எடுப்பில் சுதந்திரமாக ஏற்பாடு செய்யப்பட்டு, நடத்தப்படும் பேரணி இது. 2005ஆம் ஆண்டு பொங்கு தமிழ் நிகழ்வுக்குப் பின்னர், யாழ்.பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்துள்ள மிகப்பெரும் நிகழ்வாக இது பார்க்கப்படுகின்றது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில், இராணுவ –அரச அடக்குமுறையினால் முடக்கப்பட்டிருந்த யாழ்.பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகள் இப்போது மீண்டும் புதுத் துளிர்விட ஆரம்பித்துள்ளன. பல்கலைக்கழக மாணவர்கள் மீதும், ஆசிரியர்கள் மீதும் அடக்குமுறைகளைப் பிரயோகித்தும் இராணுவப் பலத்தை உபயோகித்தும் கடந்த காலத்தில் மஹிந்த அரசு, பெரும் நெருக்குதல்களையும் கெடுபிடிகளையும் கட்டவிழ்த்து விட்டிருந்தது. மாணவர்களும் ஆசிரியர்களும் சுதந்திரமாகச் செயற்பட முடியாதவாறு அச்சுறுத்தப்பட்டனர்– கட்டுப்படுத்தப்பட்டனர்– தாக்கப்பட்டனர். அத்துடன் பல்கலைக் கழகத்தில் படைப் புலனாய்வாளர்கள் விதைக்கப்பட்டு, அங்கு நடைபெறும் செயற்பாடுகள் அனைத்தும் மிகத் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டன. தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவாகச் செயற்படுபவர்கள் நன்கு அவதானிக்கப்பட்டு, அவர்கள்மீது பழிவாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. போதாக்குறைக்கு யாழ்ப்பாணத்தில் தியேட்டரில் இருந்த அமைச்சர் ஐயா தன் பங்குக்கும் தனது சகாக்களை பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளுக்குள்ளும் புகுத்தி, அட்டகாசம் புரிந்து வந்தார்.
ஆட்சி மாற்றத்துடன் இவையெல்லாம் முடிவுக்கு வந்த பின்னர், இப்போது யாழ்.பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளில் ஓரளவு சுதந்திரம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தநிலையில் பல்கலைக்கழகச் சமூகம் இன்று ஏற்பாடு செய்துள்ள இந்த மாபெரும் பேரணி முக்கியத்துவம் பெறுகின்றது.
யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து, நல்லூரில் முடிவடையவிருக்கும் இந்த பேரணி தமிழ் அரசியல் கட்சிகளும், சமூக அமைப்புக்களும் தமது ஆதரவை வெளியிட்டுள்ளன.
ஏற்கனவே திட்டமிட்டவாறு ஐ.நா. அறிக்கையை எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் வெளியிட வேண்டும் என்று கோரி நடைபெறவுள்ள இந்தப் பேரணிக்கு நாம் அனைவரும் திரண்டு வலுச்சேர்க்க வேண்டிய தேவை உள்ளது. மிக நீண்டகாலத்தின் பின்னர் அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பேரணிக்கு கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என பலரும் எதிர்பார்க்கிறார்கள். தமிழர்களின் குரலை மீண்டும் ஒருமுறை ஒருமித்து சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வாக– எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதிகோரும் இடமாக இந்தப் பேரணியை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.
அரசு நடத்தும் உள்ளக விசாரணையில் நம்பிக்கைகொள்ள முடியாது என்று தமிழர் தரப்புக்கள் பலவும் தொடர்ந்தும் குரல் எழுப்பி வருகின்றன. புதிய அரசு நடத்தும் உள்ளக விசாரணை என்பது உண்மையைக் கண்டறிவதற்கு அல்ல. அது உண்மையை மறைப்பதற்கான ஏற்பாடாகும். இதற்காகவே இலங்கை அரசுஓடி ஓடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது என்று மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை குற்றம் சாட்டியிருக்கிறார்.
அத்துடன் ஐ.நா.விசாணையை பிற்போட்டதைக் கண்டித்தும் சர்வதேச விசாணையே நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியும் தமிழ் சிவில் சமூக அமையத்தால், இன்று ஆரம்பிக்கப்படும் கையெழுத்து வேட்டையை மன்னார் ஆயர் தொடக்கி வைக்கிறார். இவ்வாறானதொரு நிலையில் இன்று யாழ்.பல்கலைக்கழகம் நடத்தும் இந்த மாபெரும் பேரணியானது தமிழர்களின் அபிலாஷைகளையும், உரிமைகளையும் ஒருங்கே வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வாக அமையும் என எதிர்பார்க்கப்படுவதால், அனைவரும் அணிதிரண்டு இதில் பங்கேற்பதன் மூலம் எமது உரிமைப் போராட்டத்துக்கு வலுவூட்டுவோம்.

பத்தி எழுத்து

**உதயன்**

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மனித உரிமைகள் சபையின் போக்கு எவரது நலன்களை நாடுகிறது...?

இலங்கையின் மஹிந்த ராஜபக்ஷ அரசின் நேரடியான எதிர்ப்புகளுக்கும், அதன் நட்பு நாடுகளின் மறைமுகமான நெருக்குதல்களுக்கு முகம்கொடுத்தும், பெரும் சவால்களுக்கு மத்தியிலேயே, ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கை மீதான போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டது.

இப்பொழுது, அந்த விசாரணையின் பெறுபேறுகள் அடங்கிய அறிக்கை மனித உரிமைகள் சபையில் வரும் மார்ச்சில் சமர்ப்பிக்கப்படுவதை, இலங்கையின் புதிய அரசு பெரும்பாடுபட்டு, விசாரணைக்கு அடிகோலிய அமெரிக்காவினது, காலைப் பிடித்தும் கையைப்பிடித்தும் பின்போடச் செய்வதில் வெற்றி கண்டுள்ளது.

ஐ.நா.விசாரணையை ராஜபக்ஷ அரசு எதிர்த்ததற்கும், முட்டுக்கட்டைகளை போட்டமைக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்திருந்த விடயம், போரின்போதும், அதன் பிறகும் தாங்கள் மேற்கொண்டிருந்த நடவடிக்கைகளின் பொட்டுக்கேடு வெளிவந்து விடும் என்பதே. அதன் பேரில் சர்வதேச விசாரணை ஒன்றுக்கு நேரடியாக முகம் கொடுக்க நேரும். சிலவேளை தண்டனைகளையும் எதிர்கொள்ள நேரலாம் என்ற அச்சமாக இருந்திருக்கும்.

ஆனால் அந்த விசாரணையை சிறிசேன- ரணில் கூட்டாட்சியினர் ஏன் எதிர்க்கிறார்கள்? அறிக்கையை ஏன் பிற்போடச் செய்தார்கள் என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை பெரிய மர்மமாகவே உள்ளது.

இத்தனைக்கும் இந்த ஆட்சியாளர்களை ஆட்சி பீடத்தில் அமர்த்தியதில் தமிழ் மக்கள் மிகப் பெரும் பங்கை வகித்துள்ளார்கள். அப்படியிருக்க, அந்த மக்களின் விருப்பத்தை அல்லது கோரிக்கையை உதாசீனம் செய்து ராஜபக்ஷாக்களை இவர்களும் காப்பாற்ற முனைகிறார்களா? போர்முனையில் போர்க்குற்றங்களைப் புரிந்தவர்களாகக் கருதப்படக் கூடிய இராணுவத்தினர் சர்வதேச மட்டத்தில் விசாரணைக்குட்படுத்தப்படுவதைத் தவிர்த்து, அவர்களைக் காப்பாற்ற விரும்புகிறார்களா? தமிழ் மக்கள் சார்பில் முன்வைக்கப்படும் பிரதான கேள்விகள் இவையே.

ராஜபக்ஷவினர் புரிந்துள்ள லஞ்ச ஊழல் மோசடிகள் பற்றிப் பெரிதாகப் பேசப்பட்டது. அவை குறித்து ஆராயவும், நடவடிக்கைகள் எடுக்கவும் புதிய அரசு ஏதேதோ செய்துவருவதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. அவை எல்லாவற்றையும் விட போரின் போது ஒரு மக்கள் சமுதாயத்துக்கு இழைக்கப்பட்ட கொடுமை, மனித குலத்துக்கு மாறான குற்றங்கள் குறைத்து மதிப்பிடத்தக்கவையா? என்று தமிழ் மக்கள் கேட்பதில் என்ன தவறு இருக்க முடியும்?

தேர்தல் பரப்புரைகளின்போது பேசப்பட்ட விடயங்கள் பலவும் இப்போது ஓரங்கட்டப்படுவது போல் உணரப்படுகிறது. அதே போல் மனித உரிமைகள் சபையின் விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டதன் பின்னர் இந்த அரசு அந்த அறிக்கையை முற்றாகவே கிடப்பில் போடும்படி செய்ய முயற்சிகள் மேற்கொள்ள மாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?


உண்மையைச் சொல்லப் புகின், ராஜபக்ஷ குழுவினரைவிடப் போர்க் கால குற்றம் புரிந்தவர்களான இராணுவத்தினரைப் பாதுகாக்கவே புதிய அரசு எத்தனிப்பது வெளிச்சமாகப் புலப்படுகிறது அல்லவா....? மொத்தத்தில் அவர்கள் அனைவருமே பெரும்பான்மை இனத்தவர்கள். அவர்கள் மீதான சர்வதேச குற்றச்சாட்டு, தங்களையும் அதே இனத்தவர்கள் என்ற முறையில் பாதிக்கும். அது சர்வதேச மட்டத்தில் ஒரு சாபக்கேடாக, இலங்கையர் என்றாலே, அதுவும் இலங்கையின் பெரும்பான்மையினர் என்றாலே, கொடுமையானவர்கள் என்ற நிலைக்கு இட்டுச் சென்று முகம் சுளித்துப் பார்ப்பதாக அமைந்துவிடும்.

அதனைத் தவிர்ப்பதற்குத்தான் இந்த அரசும் படாதபாடுபடுகிறது. அது எதுவானாலும், இலங்கையில் நடந்துள்ள இன அழிப்புத் தொடர்பான சர்வதேச விசாரணை தொடரவேண்டும். உண்மைகள் சர்வதேசத்தின் முன் வைக்கப்பட்டு நியாயம் வழங்கப்படவேண்டும். இன்று பல்கலைக்கழக சமூகம் நடத்துகின்ற ஆர்ப்பாட்டப் பேரணி இந்த நிலைப்பாட்டையே வற்புறுத்துகிறது, பிரதிபலிக்கிறது.

சர்வதேசத்தின் கண்களை இந்தப் பேரணி திறப்பதாக அமையட்டும்; அமையும் என்று நம்புவோம்.

# மைத்திரி– ரணில்

## திருமண பந்தம் நிலைக்குமா?



சிங்களமூலம்–(மவ்பிம)
உபுல் யோசெப் பெர்னாண்டோ
தமிழில்–வீ.எஸ்.ரீ

மைத்திரி–ரணில் திருமண பந்தம் நீண்ட நாள்களுக்கு நிலைக்குமா? அண்மைய நாள்களாக பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகள் பொது மக்கள் தரப்பில் மேற்கண்ட சந்தேகத்தை உருவாக்கி வருகின்றன. மாலைதீவில் நஷீட்டுக்கும், வஹீட்டுக்கும் ஏற்பட்ட கதிதான் இவர்களுக்கும் ஏற்படக்கூடுமா? என வெளிநாட்டு ஊடகவியலாளரொருவர் கூட சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

மாலைதீவின் தற்போதைய ஜனாதிபதி யமின் அப்துல்லா, மாலைதீவை 30 ஆண்டுகளாக நிர்வகித்த அப்துல் கயூமின் இளைய சகோதரரே. நஷீட்டும் வஹீட்டும் பெரும் சிரமப்பட்டு கயூமைப் பதவியிலிருந்து அகற்றிய போதிலும், பின்னர் தமக்குள் மோதிக்கொண்டனர். அவர்கள் இருவருக்கும் இடையிலான கூட்டணியும் உடைய நேர்ந்தது. அதனைப் பயன்படுத்தி, அப்துல் கயூம் தமது சகோதரரான யமின். அப்துல்லாவை ஜனாதிபதியாக்குவதில் வெற்றி கண்டார்.

அந்த வெளிநாட்டு ஊடகவியலாளரது சந்தேகம் நியாயமானதொன்றே. மாலைதீவின் இன்றைய ஜனாதிபதியின் அண்ணனும், முப்பது ஆண்டுகளாக தொடர்ச்சியாக மாலைதீவு ஜனாதிபதியாக இருந்தவருமான அப்துல் கயூம் தமது ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சிகளைக் கடும் நலிவு நிலைக்கு உட்படுத்தி வைத்தார். எதிர்க்கட்சித் தலைவர் நஷீட்டைச் சிறையில் தள்ளினார். சிறையிலிருந்து விடுதலைபெற்ற நஷீட் நாட்டைவிட்டு வெளியேறி இலங்கையில் தங்கியிருந்தவாறே மாலைதீவின் அரசியலில் தம்மை ஈடுபடுத்தி வந்தார். அப்துல் கயூமை பதவியிலிருந்து அகற்றி மாலைதீவில் ஜனநாயகத்தை நிலைநிறுத்த அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் போன்றே, இந்தியாவும் இலங்கையும் கூட ஒன்றிணைந்து செயற்பட்டன.

இந்த நாடுகளது தலையீட்டால், நஷீட்டுடன் மாலைதீவின் ஏனைய எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்தன. ஒருபோதுமே தோற்கடிக்கப்பட இயலாதவர் எனக் கூறப்பட்ட அப்துல் கயூமை இந்தத் தரப்பினர் தோற்கடித்தனர். அதன் காரணமாக மாலைதீவின் ஜனாதிபதியாக நஷீட் பதவியேற்று சிறியகால இடைவெளிக்குள்ளேயே அவருடன் இணைந்து அப்துல் கயூமைப் பதவியிலிருந்து அகற்றிய கட்சிகளுக்கும் நஷீட்டுக்கும் இடையே கருத்து மோதல்கள் உருவாகின. நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தங்களும் சத்தியாக்கிரகப் போராட்டங்களும் தலையெடுத்தன. முடிவில் நஷீட் ஜனாதிபதிப் பதவியினின்று வெளியேற்றப்பட்டார். உப ஜனாதிபதியாகவிருந்த வஹீட் இடைக்கால ஜனாதிபதியாகப் பதவியேற்றபோதிலும் அவராலும் அந்தப் பதவியில் தொடர்ந்திருக்க முடியவில்லை. கடைசியில் 2013 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் அப்துல் கயூமின் சகோதரரான யமின் அப்துல்லா தமது சகோதரரால் 2011ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட பி.பி.எம்.கட்சியின் சார்பாகப் போட்டியிட்டு வென்று மாலைதீவின் ஜனாதிபதியானார். அப்துல் கயூமோ தாம் பதவியிழந்ததன் பின்னர் உருவாக்கிய டி.ஆர்.பி. கட்சியின் தலைமைத்துவத்தைக் காப்பாற்றிக்கொள்ள முயன்றபோதிலும் அது இயலாது போய்விட்டது. பின்னர் ஓய்வுபெற்ற உயர் தலைவராகக் கட்சியில் நியமிக்கப்பட்டபோதிலும் கட்சிக்குள் அவரது அந்த நியமனத்துக்கு எதிராகத் தலைதூக்கிய எதிர்ப்பால் அவர் கட்சியின் ஓய்வுபெற்ற உயர் தலைவர் என்ற பதவியையும் இழக்க நேர்ந்தது. அந்தக் கட்சியிலிருப்போர் மோசடிக்காரர்கள் எனக்கூறி புதிய கட்சியொன்றை ஆரம்பித்து அதன் தலைவராகச் செயற்பட்டு 2013ஆம் ஆண்டில் தமது சகோதரர் யமின் அப்துல்லாவை நாட்டின் ஜனாதிபதியாக்கிக்காட்டினார் அப்துல்கயூம். நஷீட்டும் சரி, வஹீட்டும் சரி அரசியலில் புறக்கணிக்கப்பட்டு ஆட்சி அதிகாரத்தை இழக்க நேர்ந்தது. தாமிருவரும் ஒன்றிணைந்து பதவியினின்றும் வெளியேற்றிய அப்துல் கயூமே சதிசெய்து தம்மைப் பிரித்து இவ்விதம் மாலைதீவின் அரசியலரங்கில் இருந்து தம்மை வெளியேற்றியவர் என்பதை பின்னர் அவர்கள் உணர்ந்து கொண்டனர். அவ்விதம் அப்துல்கயூமின் அரசியல் சித்து விளையாட்டை அவர்கள் புரிந்து கொண்ட வேளை காலம் தாமதமாகிவிட்டது. பஸ்ஸைத் தவறவிட்ட பயணிகள் நிலையில் இன்று அவர்களது வாழ்வு.

மாலைதீவின் இந்த அரசியல் வரலாறு, மைத்திரிபாலவும், ரணிலும் அவ்விருவரையும் சூழ்ந்திருப்போரும் கற்றுக்கொள்ள வேண்டியதொரு பாடமாகும். மைத்திரிபாலவும் ரணிலும் ஒன்றிணைந்து ஏனைய தரப்புக்களையும் ஒன்றிணைத்துக்கொண்டு மேற்கொண்ட புரட்சி சாதாரணமான ஒன்றல்ல. சோதிடவிற்பன்னர்களது கிரகக் கணிப்புக்களையே பொய்யாக்கிவைத்ததொரு பெரும் புரட்சியே அது.

சுதந்திரக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரான மைத்திரிபால தமது பரம எதிரியான ஐ.தே.கட்சியின் ஆதரவு வாக்குகளால் வெற்றி பெற வேண்டுமென விதி அமைந்தது. 2010ஆம் ஆண்டுத் தேர்தலில் தோல்வியுற்ற கட்சியொன்றின் சின்னத்திலேயே அவர் போட்டியிட வேண்டி நேர்ந்தது. பல வழிகளிலும் பின்னடைவு எனக் கருதப்பட்ட நிலையில் மைத்திரிபால, சகல சவால்களுக்கு மத்தியிலும், எவராலும் தோற்கடிக்க இயலாதவராகப் பேசப்பட்ட மஹிந்தவைத் தேர்தலில் தோற்கடித்தார்.

மைத்திரிபாலவின் வெற்றியின் நிழலாக அமைந்தது ஐ.தே.கட்சிக்கான ஆதரவு வாக்குகளே. தேர்தலில் அவர் பெற்ற வாக்குகளின் அடிப்படையை நோக்கினால், அதில் சுதந்திரக்கட்சி மற்றும் ஹெலஉறுமய கட்சியின் ஆதரவு வாக்குகளில் பெரும் அதிகரிப்பு இருந்ததாகக் கூற இயலாது. இவ்விரு கட்சிகளும் பெரும் பிரபல்யம் பெற்றிருந்த மாவட்டங்களில் ஐ.ம.சு.கூட்டணி மாகாணசபைத் தேர்தல்களில் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையை விட அண்மைய ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த பெருமளவிலான மேலதிக வாக்குகளைப் பெற்றிருந்தார்.

இன்று மைத்திரிபாலவும் ரணிலும் தத்தமக்கு தலைமைத்துவத்தை வழங்கியுள்ள கட்சிகள் குறித்துச் சிந்திப்பதை விடுத்து தமக்காக வாக்களித்த 62 லட்சம் வாக்காளர்களது எதிர்பார்ப்புக் குறித்து சிந்தித்தாக வேண்டும்.

அதைவிடுத்து தம்மை ஜனாதிபதியாகப் பதவியில் இருத்திய வாக்காளர்களது எதிர்பார்ப்புக்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்து சுதந்திரக் கட்சிக்காரர்களதும் தம்மைச் சுற்றிச் சூழ்ந்திருப்போர்களதும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முன்னுரிமை வழங்க மைத்திரிபால முயல்வாரானால் மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கயூம் தமது தம்பியை அரசியலில் அதிகாரத்துக்குக் கொண்டு வந்தமை போன்றே மஹிந்தவும் தம்மால் இயலாது போனால் தமது தம்பியையாவது அதிகாரத்துக்குக் கொண்டுவர முயலக் கூடும். அத்தகையதொரு நிலை ஏற்படுமானால் ரணிலுக்கு என்ன ஆகுமோ தெரியாது. மைத்திரிபால நிச்சயம் சிக்கலை எதிர்நோக்க நேரிடும்.



# உள்ளக விசாரணை

## உலகை ஏமாற்றும் இலங்கையின் இன்னொரு தந்திரோபாயம்

சேரலாதன்

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, சர்வதேச விசாரணை இடம்பெறக் கூடாது. அதற்குப் பதிலாக உள்ளக விசாரணை இடம்பெறுவதே நாட்டின் இறைமைக்கும், ஜனநாயகத்துக்கும் வலுச்சேர்க்கும் என்பதே, பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் மட்டுமல்லாது படித்தவர்கள், பொது மக்கள் ஆகியோரின் கருத்தாக இருப்பதைப் பார்க்க முடிகின்றது.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்வும் இங்கு நீதித்துறைக் கட்டமைப்பு சிறப்பாகக் காணப்படுவதாகவும் இதனால் உள்ளக விசாரணை இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு எனவும், நீதித்துறைக் கட்டமைப்பு சிறப்பாக இருப்பதாகவும் கூறப்படுவதைக் கேட்கும்போது நகைப்புத்தான் ஏற்படுகின்றது. ஜனநாயக விழுமியங்கள் கடைப்பிடிக்கப்பட்டு, நீதித்துறையும் சிறப்பாகச் செயற்பட்டிருக்குமாயின், சர்வதேச விசாரணையோ அல்லது இலங்கைக்கு எதிரான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானமோ தேவையில்லாமல் போயிருக்கும். இலங்கையில் ஆட்சி புரிந்த அரசுத் தலைவர்கள், சிறுபான்மையின மக்களைப் பொறுத்தவரையில் விரோதமான மனப்போக்கை உடையவர்களாகவே இருந்து வந்துள்ளனர்.

சிறுபான்மையினரின் உரிமைகளும், அபிலாசைகளும் இவர்களால் துச்சமாகவே மதிக்கப்பட்டன. நீதித்துறைகூட, பாரபட்சமான வகையில் இயங்கி வந்ததையே காணமுடிந்தது.

இலங்கையின் இறைமை தொடர்பாகக் கூக்குரல் இடுபவர்கள் புலிகளை அழிக்கும் நோக்கத்துடன் இந்தியப் படைகள் இங்கு காலூன்றி நின்றபோது பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. பெரும்பாலானவர்கள் இந்தியப் படைகளை வரவேற்கவே செய்தனர்.

புலிகள் இந்தியர்களால் அழிக்கப்பட்டு விடுவார்கள் என்ற நம்பிக்கையே இதற்கான பிரதான காரணமாகும்.

அப்போதெல்லாம் இலங்கையின் ஜனநாயகமும், இறைமையும் எங்கே போய்விட்டன என்பது தெரியவில்லை.

இனக்கலவரங்கள் ஏற்படுத்தப்பட்டு தமிழர்கள் அழிக்கப்படுவது இந்த நாட்டில் வழமையான நிகழ்வாகும். இந்த நாடு சுதந்திரம் அடைந்த பிறகு 1958, 1977,1983 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற மிகமோசமான இனக்கலவரங்களால் தமிழர்கள் வகைதொகையின்றி அழிக்கப்பட்டனர். அப்போதைய அரசுகளின் ஆசீர்வாதத்துடன் இவை இடம்பெற்றதால் இனவெறியர்களும், சமூகவிரோதிகளும் தமிழர்களுக்கு எதிராகத் தமது இஷ்டம்போல அட்டூழியங்களைப் புரிந்தனர். இனக்கலவரங்கள் தொடர்பாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும், அதனால் எவ்வித பயன்களும் கிடைக்கவில்லை.

வெறும் கண்துடைப்புக்காகவே ஆணைக்குழுக்கள் அமைக்கப்படுவது இந்த நாட்டில் வாடிக்கையானதொரு விடயமாக மாறி விட்டது.

இறுதிப் போரின்போது இடம்பெற்ற மனித குலத்துக்கே விரோதமான சம்பவங்கள் இலங்கை எத்தகையதொரு நாடு என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டிவிட்டன. புலிகளை அழிக்கின்றோம் எனக் கூறிக்கொண்டு பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொன்றொழிக்கப்பட்டமை கூட மனிதநேயமான நடவடிக்கை எனக் கூறப்பட்டது. இங்கு இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேசம் நன்றாக அறிந்து கொண்டதன் பின்னரே இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் அமெரிக்கா முக்கிய பங்கையும் வகித்தது.

சர்வதேச விசாரணைகளிலிருந்து தப்பிக்கும் பொருட்டு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரித்தறியும் ஆணைக்குழு என்பன இதுவரை எதனையும் உருப்படியாகச் செய்து முடித்ததாகத் தெரியவில்லை.



இந்த ஆணைக்குழுக்களின் முன்பாகத் தோன்றிச் சாட்சியமளித்தவர்களில் சிலர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜனநாயகம் என்பது ஒரு நாட்டின் மக்கள் அனைவருக்கும் பொதுவானது. ஆனால் இந்த நாட்டைப் பொறுத்தவரையில் சிறுபான்மையின மக்கள் தமது ஜனநாயக உரிமைகளை அனுபவிப்பதாகத் தெரியவில்லை.

அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத்தடைச்சட்டம் ஆகியவற்றின் ஊடாக அவர்களின் ஜன நாயக உரிமைகள் மட்டுமல்ல, இயல்பு வாழ்க்கைகூட சிதைக்கப்பட்டது.

நீதிமன்றங்கள்கூட கடந்த ஆட்சிக் காலத்தில் நிறைவேற்று அதிகாரங்களுக்குக் கட்டுப்படவேண்டிய இக்கட்டானதொரு நிலையை எதிர் கொண்டன.

அதிகாரத்தைக் கையில் வைத்திருந்தவர்களின் விருப்பங்களையே நீதிமன்றங்கள் நிறைவேற்றி வந்தமை ஒன்றும் புதிதான செய்தி யல்ல.

நீதித்துறை சுயமாகச் செயற்பட்டிருந்தால், வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இரண்டாகப் பிரிந்திருக்க மாட்டா.

சம்பூர் மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்ந்திருப்பார்கள். சுனாமி ஏற்பட்டபோது அமைக்கப்பட்ட சுனாமிக் கட்டமைப்பில் புலிகளும் அங்கம் வகித்திருப்பார்கள்.

இதனால் அரசுக்கும், புலிகளுக்குமிடையே நல்லெண்ணம் தோன்றுவதற்குரிய சூழ்நிலையொன்று தோன்றியிருக்கும்.

இறுதிப்போர் முடிவடைந்து ஆறு ஆண்டுகள் முடிவடையப் போகின்றன. பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இலங்கை அரசு இதுவரை ஏதாவது நீதி வழங்கியதா? இடம்பெயர்ந்த தமிழர்கள் அனைவரும் மீள்குடியமர்ந்து விட்டனரா இந்தக் கேள்விகளுக்கு இலங்கையின் ஆட்சியாளர்கள் என்ன பதிலைக் கூறப் போகின்றார்கள்?

ஆகவே ஜனநாயகம், இறைமை எனப் புலம்புவதை விடுத்து சர்வதேச விசாரணைகளுக்கு ஒத்துழைப்பதே இலங்கையின் எதிர்காலத்துக்கு நல்லது. தவறினால் இந்த நாட்டின் ஐக்கியம் நீடித்து நிலைக்குமா என்பது சந்தேகமே.

> இறுதிப் போரின்போது இடம்பெற்ற மனித குலத்துக்கே விரோதமான சம்பவங்கள் இலங்கை எத்தகையதொரு நாடு என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டி விட்டன. புலிகளை அழிக்கின்றோம் எனக் கூறிக் கொண்டு பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொது மக்கள் கொன்றொழிக்கப்பட்டமை கூட மனித நேயமான நடவடிக்கை எனக் கூறப்பட்டது. ❞

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 30 | 40 | 60 | 20 | 40 | 50 | 20 |
| கத்தரி | 200 | 120 | 110 | 140 | 80 | 120 | 130 | 60 |
| கரட் | 100 | 200 | 100 | 200 | 120 | 240 | 200 | 150 |
| மரவள்ளி | 40 | 40 | 60 | 60 | 40 | 60 | 70 | 35 |
| புடலை | 140 | 120 | 120 | 140 | 120 | 200 | 110 | 130 |
| பாகல் | 100 | 100 | 100 | 120 | 100 | 140 | 110 | 110 |
| கருணைக்கிழங்கு | 50 | 50 | 100 | 80 | 40 | 80 | 70 | 40 |
| பெ.வெங்காயம் | 100 | 80 | 90 | 90 | 80 | 100 | 100 | 70 |
| சி.வெங்காயம் | 50 | 60 | 100 | 90 | 80 | 70 | 100 | 60 |
| பூசணி | 80 | 120 | 90 | 120 | 100 | 140 | 70 | 100 |
| தக்காளி | 180 | 160 | 150 | 120 | 140 | 200 | 220 | 120 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 100 | 60 | 80 | 70 | 65 |
| கீரை | 15 | 30 | 20 | 10 | 20 | 20 | 30 | 10 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 40 | 40 | 30 | 20 | 20 | 15 |
| பச்சை மிளகாய் | 120 | 120 | 130 | 120 | 120 | 200 | 220 | 120 |
| புடோல் | 70 | 80 | 70 | 80 | 80 | 100 | 80 | 80 |
| கோவா | 80 | 80 | 90 | 120 | 80 | 120 | 130 | 70 |
| வெண்டி | 100 | 80 | 80 | 120 | 80 | 80 | 60 | 60 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 220 | 200 | 160 | 250 | 220 |
| லீக்ஸ் | 200 | 150 | 150 | 200 | 200 | 200 | 260 | 170 |
| தேங்காய் | 55 | 60 | 45 | 50 | 50 | 60 | 50 | 45 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 80 | 80 | 80 | 90 | 100 | 70 |
| தேசிக்காய் | 40 | 50 | 40 | 40 | 40 | 60 | 40 | 25 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 10 | 30 | 10 | 20 | 10 |
| கறிமிளகாய் | 200 | 150 | 160 | 200 | 180 | 160 | 230 | 220 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 120 | 100 | 120 | 90 | 80 |
| பனங்கிழங்கு | 05 | 05 | 01 | 05 | 03 | 04 | 05 | 03 |

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 5 | 7 | 8 | | 4 |
| 8 | | 7 | | 3 | | 5 | | |
| | | | | 1 | 4 | | 2 | 7 |
| | | | | | 8 | 2 | | 9 |
| | 1 | 3 | | | | 6 | 4 | |
| 2 | | 4 | 9 | | | | | |
| 3 | 6 | | 7 | 9 | | | | |
| | | 8 | | 2 | | 1 | | 3 |
| 4 | | 5 | 3 | 8 | | | | 6 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 2 | 8 | 6 | 7 | 3 | 4 | 9 |
| 4 | 6 | 8 | 9 | 1 | 3 | 2 | 5 | 7 |
| 7 | 9 | 3 | 4 | 5 | 2 | 1 | 6 | 8 |
| 3 | 7 | 9 | 2 | 8 | 4 | 5 | 1 | 6 |
| 2 | 4 | 6 | 5 | 7 | 1 | 8 | 9 | 3 |
| 8 | 1 | 5 | 6 | 3 | 9 | 7 | 2 | 4 |
| 6 | 2 | 7 | 1 | 9 | 8 | 4 | 3 | 5 |
| 5 | 8 | 4 | 3 | 2 | 6 | 9 | 7 | 1 |
| 9 | 3 | 1 | 7 | 4 | 5 | 6 | 8 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# தவக்காலச் சிந்தனை



## ஆன்மிகத்தை ஆழப்படுத்தி அன்புறவைப் பலமாக்குவோம்

சவால் நிறைந்த உலகில் சாதனைகள் படைக்கும் முயற்சிகளும் தினம் செய்திகளாகின்றன. சவால்கள் இன்று பல வடிவங்களில் எல்லாத் தரப்பினருக்கும் ஏற்படுகின்றன. அவற்றை வெல்ல ஆன்மிக சக்தி முக்கியம். இறையேசுவும் தனது தவப் பயணத்துக்கு ஆயத்தமாகப் பாலை நிலத்தில் நாற்பது நாள்கள் தவமிருந்தபோது சாத்தானால் சோதிக்கப்பட்டார். சாத்தானின் வாக்குறுதிகள், அலங்கார வார்த்தைகள் கேட்டுத் தனது தவப்பயணத்தை அவர் இடைநிறுத்தவில்லை. அதுவே தவத்தின் வெற்றியாகப் போற்றப்படுகின்றது. 'காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்' என அழைப்பு விடுக்கிறது இறைவார்த்தை. ஒருவர் தனது ஆன்மிக தவமுயற்சிகளில் ஈடுபடும் வேளையில், அதனை முறியடிக்க ஏற்படும் சவால்களே சாத்தானின் செயல்களாகின்றன.

நான் பாவி, இயேசுவே என்வாழ்வை நல்வழிப்படுத்தும் என எமது தவறுகளுக்காக இயேசுவை வேண்டி மன்னிப்புக் கோருவதும், பிறர் தவறை மன்னித்து அவர்களுடன் முன்னர் போல் உறவாடுவதும் தவக்காலத்தின் புனிதமான செயலாகும்.

அன்றாட உணவுக்காக அலையும் ஒரு கூட்டம், உண்ட உணவு சீரணிக்கவில்லையே என்ற நிலையில் அல்லலுறுவோரும், வீண் குரோத உணர்வில் பகைமையில் வாழ்வோரும் இந்தத் தவக் காலத்தில் தமது நிலைகளை மறந்து, மற்றவர்களது பசியைப் போக்க உதவி பகைமையை மறந்து அன்புடன் அவர்களை அரவணைத்து, தீய செயல்களால் தாம் விட்ட தவறுகளைத் திருத்தி தவவாழ்வுக்கு தம்மை அர்ப்பணிக்க தம்மைப் புடமிட்டு ஆன்மிக வழியில் தம்மை அர்ப்பணித்து மனமாற்றத்துடன் வாழ அழைக்கிறது. இந்தத் தவக்காலம். எமது தவ தியான தியாக வாழ்வால் சவால்களை எதிர்கொண்டு ஆன்மிகப்பயணத்தைத் தொடர்வோம்.

செ.யோசப்பால்ரா

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## வாழ்க்கையின் அனுபவங்கள் சிறந்தவை

உலகத்தைத் துறக்காதே. உலகத்திலேயே வாழ். அது தரும் அனுபவங்களை உன்னால் முடிந்த அளவு உன் மனதில் படிய வைத்துக்கொள். ஆனால் அந்தச் செயல்கள் எல்லாம் உன்னுடைய இன்பத்துக்காக என்றால் அவற்றைச் செய்யாதே. அனுபவிப்பது வாழ்க்கையின் இலட்சியமாக இருக்கக் கூடாது. முதலில் நான் என்பதைக் கொன்று விடு. பின்னர் நீயே உலகம் முழுவதுமாக ஆகிவிடு.

# நாளை

**மாசி-13**
**புதன்கிழமை**
**25.02.2015**

திதி:ஸப்தமி: மா.05,05 வரை
நட்சத்திரம்: கார்த்திகை பி.இ.11.23
சுபநேரம்: 04.59-06.29 வரை
இராகுகாலம்: 12.29-01.59 வரை
கார்த்திகை விரதம்

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 800 | 700 | 600 | 450 |
| நண்டு | 300 | 300 | 400 | 300 | 200 | 300 |
| கணவாய் | 500 | 500 | 550 | 600 | 500 | – |
| பாரை | 500 | 400 | 500 | 500 | 500 | 380 |
| சுறா | 550 | 500 | 600 | 600 | 500 | 450 |
| சீலா | 300 | 400 | 380 | 400 | 400 | 300 |
| விளை | 550 | 300 | 450 | 450 | 400 | 320 |
| முரல் | 250 | 300 | 350 | 300 | 300 | – |
| கும்பிளா | 400 | 250 | 450 | 400 | 200 | 270 |
| கிழாக்கன் | 300 | 500 | 350 | 400 | 300 | – |
| ஒரா | 400 | 300 | 350 | 300 | 300 | – |
| திரளி | 250 | 200 | 300 | 200 | 200 | – |
| நகரை | 150 | 200 | 100 | 300 | 200 | 250 |
| சூடை | 100 | 100 | 150 | 100 | 100 | 60 |
| ஒட்டி | 150 | 150 | 180 | 200 | 200 | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | 200 | 200 | 140 |
| பாலை | 400 | 250 | 400 | 350 | 200 | – |
| வாழை | 100 | 100 | 200 | 300 | 200 | 250 |
| கொய் | 100 | 100 | 80 | 80 | 50 | – |
| மதனம் | 150 | 250 | 200 | 220 | 300 | 250 |

# பிரசவத்துக்குப் பின் உண்ணக்கூடாத சில உணவுகள்

குழந்தைக்கு தாய்ப்பால் என்பது மிக மிக முக்கியம். தாய்ப் பாலை மட்டுமே உணவாக அருந்தும் குழந்தைக்கு அந்தப் பாலை தூய்மையானதாகக் கொடுக்க வேண்டும். பல நோய்களுக்கு எதிர்ப்புச் சக்தியாக தாய்ப்பால் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்தகைய மருத்துவத் தன்மைக் கொண்ட தாய்ப்பாலை தூய்மையாக கொடுக்க வேண்டும். இந்தப் பாலின் தன்மை வெளி உணவுகளால் கெடாமல் பார்த்து கொள்வது தாயின் கடமையாகும். ஒவ்வாமை ஏற்படுத்தும் சில உணவுகலளத் தாய் உட்கொள்வதால், அது குழந்தையின் பா்லில் கலந்து குழந்தைக்குப் பா்திப்பை ஏற்படுத்துகின்றது என்பது மறுக்க முடியாத ஒன்று. ஆகவே அந்த உணவுகள் எது என்று ஆராய்ந்து அவற்லறத் தவிர்க்க வேண்டும். இந்தக் கடமையைச் செய்தாலே ஆரோக்கியமான உடலையும், வலிமையையும் குழந்தைக்கு கொடுக்க முடியும். பெற்றோர்களுக்கு இருக்கும் ஒவ்வாமை குழந்தைகளுக்கும் வர வாய்ப்புள்ளது என்று வல்லுநர்கள் கூறுகின்றனர். குழந்தைக்கு உணவில் ஒவ்வாமை இருக்குமெனில் ஒவ்வாமையைத் தரும் உணவுகளைத் தவிர்த்து விடுங்கள். இதில் பால் உணவு, சோயா, முட்டையின் வெள்ளைக் கரு, வேர்க்கடலை, கோதுமை போன்றவை அடங்கும். உணவில் பூண்டு சேர்த்துக் கொள்வதால் குழந்தையின் பாலில் அதன் வாசம் வரக் கூடும். அதுவும் உணவு உண்ட அடுத்த இரண்டு மணிநேரத்தில் இந்த வாசனையை பாலில் காண முடியும். சில குழந்தைகளுக்கு இந்த வாசனை ஒத்துக் கொள்ளாதிருக்குமானால் தவிர்த்து விடுங்கள். ஆகவே தோடம்பழம், எலுமிச்சை போன்றவற்றைத் தவிர்த்து, பப்பாளி மற்றும் மாங்காய் போன்றவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். பாலாடைக் கட்டி, தயிர், ஐஸ்கிரீம் போன்றவற்றை உட்கொண்டால் சில நேரங்களில் அவை பாலுடன் கலந்து குழந்தைக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும் என்பதால் கவனமாக இருக்க வேண்டும். உணவில் அதிக அளவில் மசாலா மற்றும் காரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அதிக மசாலா மற்றும் காரம் குழந்தைக்கு ஒவ்வாமை எரிச்சல் போன்றவற்றை ஏற்படுத்தும். ஆகவே காரம் அதிகம் உள்ள மிளகு, இஞ்சி, எலுமிச்சம்சாறு போன்றவற்றைத் தவிர்ப்பது நல்லது.



# உங்கள் பெயருக்கு பின்னால் இருக்கும் இரகசியம் தெரியுமா?

**A** A என்பது குறிப்பிடத்தக்க எழுத்தாகும். உங்கள் பெயர் A என்ற எழுத்தில் ஆரம்பித்தால், நீங்கள் உறுதியான ஒரு நபராக இருப்பீர்கள். அதிகார தோரணையுடன் பிறரை வழி நடத்துவீர்கள். மேலும் தீரச்செயல் புரிய தொடர்ந்து முயற்சிப்பீர்கள். வாழ்க்கையின் மீது வலுவான ஈடுபாடு இருக்கும். அதே போல் எவரையும் சாராமல் இருப்பீர்கள். உங்களது துணிவு, நேர்மை மற்றும் உடல் அம்சம் ஈர்க்கும் வகையில் அமையும்.

**B** உங்கள் பெயர் B என்ற எழுத்தில் தொடங்கினால், நீங்கள் உணர்ச்சிபூர்வமானவர்களாக இருப்பீர்கள். நீங்கள் தைரியசாலி யாகவும், அன்பு உள்ளவராகவும் இருப்பீர்கள். உங்கள் காதலரின் அன்பின் வெளிப்பாடாக கிடைக்கும் பரிசுகளை சந்தோஷத்துடன்பெற்றுக்கொள்வீர்கள். உங்கள் மீது மற்றவர்கள் அன்பு கொள்ள வேண்டும் என நினைப்பீர்கள். அதே போல் உங்களது துணையை எப்படி அன்பாக நடத்துவது என்பதும் உங்களுக்கு தெரிந்திருக்கும்.

**C** உங்கள் பெயர் C என்ற எழுத்தில் தொடங்கினால், பல்துறை அறிவு வாய்ந்த, தகுதி வாய்ந்த, திறமைசாலியாக இருப்பீர்கள். மென்மையானவராக இருந்தாலும், பணத்தைத் தண்ணீராகச் செலவழிப்பீர்கள். இயற்கை மற்றும் பிறவி பேச்சாளராக இருக்கும் நீங்கள், சொல்வன்மை பேச்சாற்றலுடன் விளங்குவீர்கள்.

**D** உங்கள் பெயர் D என்ற எழுத்தில் தொடங்கினால், அளவுக்கு அதிகமான மனத் திண்மை, வர்த்தக அறிவு, ஆளுமை போன்ற குணங்களைக் கொண்டிருப்பீர்கள். தொழில் புரியப் பிறந்தவர் நீங்கள். சுத்தத்தின் மீது அதிகமாக கவனம் செலுத்துவீர்கள். நம்பிக்கை மிக்கவராக விளங்கும் நீங்கள் பிறருக்கு உதவிடும் குணத்தைக் கொண்டிருப்பீர்கள்.

**E** உங்கள் பெயர் E என்ற எழுத்தில் தொடங்கினால், பிறரிடம் தொடர்பு கொள்வதில் வலிமை மிக்கவராக இருப்பீர்கள். மென்மை மிக்கவ ரான நீங்கள் உங்கள் சுதந்திரத்தை விரும்புவீர்கள். காந்த ஆளுமை கொண்டவரான நீங்கள் நண்பர்களை சுலபமாக பெறுவீர்கள். காதல் என்று வரும் போது நீங்கள் அவ்வளவு உண்மையாக இருப்பதில்லை.

**F** உங்கள் பெயர் F என்ற எழுத்தில் தொடங்கினால், திட்டமிடுவதில் நீங்கள் சிறந்தவராகவும், நம்பிக்கை மிக்கவராகவும் விளங்குவீர்கள். பிறர் மீது அக்கறை கொள்வதிலும், உங்களைச் சுற்றியுள்ள வர்களை சந்தோஷமாக வைத்திருப்பதிலும், நீங்கள் வல்லவராக இருப்பீர்கள். நன்னம்பிக்கையாளரான நீங்கள் சிறந்த நகைச்சுவை உணர்வுடன் விளங்குவீர்கள்.

**G** உங்கள் பெயர் G என்ற எழுத்தில் தொடங்கினால், நோக்கத்துடனான நபராக இருப்பீர்கள் நீங்கள். புதுமை இயல்பு மற்றும் தத்துவம் மிக்கவராக இருப்பீர்கள். வரலாற்றைப் படிக்கவும், பயணம் செய்யவும் விரும்புவீர்கள். மதத்தின் மீது அதிக ஈர்ப்புடன் இருப்பீர்கள். உங்கள் போக்கில் வாழவே விரும்புவீர்கள். உங்கள் விடயத்தில் அடுத்தவர்களின் அறிவுரைகள் மற்றும் தலையீட்டை நீங்கள் விரும்ப மாட்டீர்கள்.




**H** உங்கள் பெயர் H என்ற எழுத்தில் தொடங்கினால், நீங்கள் பணத்தைச் சேர்ப்பவராக இருப்பீர்கள். இந்த எழுத்து புதுமையான சக்தியைக் குறிக்கும். சுயமாக ஊக்குவித்து பிறரை சிறப்பான முறையில் கட்டுப்படுத்துவீர்கள்.

**I** உங்கள் பெயர் I என்ற எழுத்தில் தொடங்கினால், நல்லது எதுவோ அதற்காக வாழ்பவர் நீங்கள். மேலும் தைரியசாலியாகவும் திகழ்வீர்கள்.



# மனைவியையும் கொஞ்சம் கவனியுங்கள்...




"உன்னுடைய ஆசைகள் எல்லாவற்றையும் நான் நிறைவேற்றி விட்டேனா? நிறைவேறாத ஆசைகள் இருந்தால் சொல். அதை நான் நிறைவேற்றுகிறேன்" என்று அவ்வப்போது மனைவியிடம் சொல்லிப் பாருங்கள்.

நீங்கள் வேலைக்குச் செல்பவர் என்றாலும் சரி, சுயமாகத் தொழில் செய்பவர் என்றாலும் சரி, தினமும் 1–2 மணி நேரத்தை மனைவியுடன் மகிழ்ச்சியாக செலவிடுவதற்காக ஒதுக்குங்கள். வேலை முடிந்து களைப்பாக வீடு திரும்பினால் ரி.வி.யும், ரிமோட்டு மாக இருந்து விடாதீர்கள். மனைவியை அருகே அழைத்து, அன்று வீட்டில் நடந்த விஷயங்களைப் பற்றிக் கேளுங்கள். அரட்டை அடித்துப் பேசுங்கள். இருவரும் ஒன்றாக ரி.வி. பார்த்துக்கொண் டிருந்தால், அதில் வரும் கதாபாத்திரங்களிலேயே மூழ்கிவிடாமல் பக்கத்தில் மனைவி இருக்கிறாள் என்பதை மனதில் வைத்துக் கொண்டு அவளிடமும் கலகலப்பாகப் பேசுங்கள்.

உங்கள் குடும்பத்துக்கு தேவையான நல்ல விஷயங்களை ஆரோக் கியமாக விவாதியுங்கள். இந்த விவாதத்தில் உங்கள் குடும்பப் பிரச்சினைகள் பலவற்றுக்குத் தீர்வு கிடைக்கலாம். உங்கள் மனை வியை எப்போதும் காதலியாக, தோழியாகவே நினைத்திருங்கள். ஒரு காதலன் காதலியிடம் எப்படி அன்பாக நடந்து கொள்வானோ, அதே போன்று நடந்து கொள்ளுங்கள். இல்லையென்றால், அப்படி நடக்க முயற்சியாவது செய்யுங்கள்.

உன்னுடைய ஆசைகள் எல்லாவற்றையும் நான் நிறைவேற்றி விட்டேனா? நிறைவேறாத ஆசைகள் இருந்தால் சொல். அதை நான் நிறைவேற்றுகிறேன்' என்று அவ்வப்போது மனைவியிடம் சொல்லிப்பாருங்கள். நீங்கள் இப்படிக் கேட்ட மாத்திரத்திலேயே உள்ளம் குளிர்ந்து போவாள் உங்களவள். மனைவி கஷ்டப்பட்டு சில வேலைகளைச் செய்யும்போது, அதில் நீங்களும் பங்கெடுத்துப் பாருங்கள். அந்தநேரம், அவள் மனதுக் குள் ஆனந்த மழைச் சாரலே பொழியும். மொத்தத்தில், நீங்கள் மனைவியிடம் எந்த அளவுக்கு அன்பாக இருக்கிறீர்களோ, அந்த அளவுக்கு அவளும் உங்களிடம் அன்பாக இருப்பாள். நீங்கள் அவுளிடம் ஒரு காதல னாகப் பழகும்போது அவளும் உங்கள் காதலியாய் மாறிவிடுவாள்! அதனால் காதலியுங்கள், மனைவியை.

திருமண வாழ்க்கையில் ஆண்களின் வயதும், தம்பதிகளுக்கு இடையேயான வயது வித்தியாச மும் ஒரு முக்கிய காரணியாக இனங் காணப்பட்டுள்ளது. 25 வயதுக்கு முன்னர் திருமணம் செய்த ஆணொருவரின் குடும்ப வாழ்வு விரைவிலேயே முடிவுக்கு வந்துவிடு கிறதாம். மனைவியை விட கணவனுக்கு 9 அல்லது அதற்கு மேற்பட்ட வயது இடைவெளியும் திருமண முறிவுக்குக் காரணமாகச் சொல்லப்படுகிறது. திருமணத்துக்கு முன்பே இதே துணை அல்லது வேறு துணை மூலம் குழந்தைகள் இருந்தால் மணமுறிவுக்கான வாய்ப்பு மிக அதிகமாகும். கணவனை விட அதிகமாகக் குழந்தை வேண்டும் என மனைவி ஆசைப்பட்டாலும் பிரிவு ஏற்பட வாய்ப்பு அதிகம் என ஆய்வுகள் கூறுகிறது. தம்பதிகளின் பெற்றோரின் வாழ்க்கை முறையும் திருமண வாழ்வைப் பாதிக்கிறது. தம்பதிகளில் எவர் ஒருவரின் பெற்றோர்கள் பிரிந்து வாழ்ந்தால் அல்லது விவாகரத்துப் பெற்றிருந்தால் மணமுறிவுக்கு வாய்ப்பு அதிகமாகிறதாம். முதல் திருமணத்தை விட இரண்டாவது அல்லது மூன்றாவது முறையாகத் திருமணம் செய்தவர்களின் மணவாழ்க்கை முறிவதற்கான வாய்ப்புக்கள் 90 சதவிகிதம் அதிகம் எனச் சொல்கிறது ஆய்வு.

பணத்துக்கும் திருமண உறவு நீடிப்பதற்கும் நிறையத் தொடர்பு இருக்கிறது. வறுமையில் இருப்பவர்கள், பொருளாதார ரீதியாக பலமான நிலையில் இருப்பவர்களை விட அதிகமாகப் பிரிய நேர்கிறதாம். அதே போல கணவன் வேலைவாய்ப்பு இன்றி இருந்தாலும், மணமுறிவு அதிகம். ஆனால் மனைவி வேலைவாய்ப்பு இன்றி இருந்தால் அவ்வாறு பிரிவு ஏற்படுவதில்லை என்பது கவனிப்புக்கு உரியதாகும். குடும்ப ஒற்றுமைக்கு அன்பும், விட்டுக்கொடுக்கும் பண்பும் இருந்தாலே போதும், எந்தப் பிரச்சினையையும் தூசி போல் ஊதி விடலாம்.



# திருமண வாழ்க்கை நீடிக்க...

# பூவா, தலையா




ஒரு முறை ராஜா எதிரிகளைத் தாக்க ஓர் இராணுவப் படை ஒன்றை தயார் செய்து போருக்கு தயாரானார். அவர் 'எப்படியும் இந்த போரில் வெற்றி பெறுவோம்' என்ற நம்பிக்கையுடன் இருந்தார். ஆனால் அந்தப் படையினரோ பெரும் சந்தேகத்துடனேயே இருந்தனர்.

அனைவரும் சோர்ந்து போய் நம்பிக்கையின்றி இருந்தார்கள். இதனால் அந்த ராஜா தன் படை வீரர்களுக்குத் தைரியத்தை வரவழைக்க என்ன செய்யலாம் என்று ஒரு துறவியைச் சந்தித்து, கேட்கச் சென்றார். அப்போது அந்தத் துறவி ராஜாவிடம், ஒரு யோசனையை சொன்னார். அதே போல் ராஜாவும் செய்தார். அது என்னவென்றால், அந்த ராஜா போருக்கு செல்லும் வழியில், அவர்கள் குல தெய்வ கோவிலில் நிறுத்தி பிரார்த்தனை செய்து விட்டு ஒரு நாணயத்தை எடுத்து வீரர்களின் முன் காண்பித்து 'நான் இப்போது இந்த நாணயத்தை சுழற்றி விடுவேன், தலை விழுந்தால் நாம் வெற்றி பெறுவோம் இல்லையேல் போரில் தோற்போம்' என்று துறவி சொன்னதைச் சொன்னார், வீரர்களிடம் 'நம் தலை விதியை இந்த நாணயம் நிர்ணயிக்கட்டும்' என்று கூறி நாணயத்தை சுழற்றினார்.

அனைவரும் அதைக் கூர்ந்து கவனித்தனர். அப்போது தலை விழுந்தது. அதனால் அந்த வீரர்கள் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடனும் சந்தோசத்துடனும் எதிரிகளை தாக்கத் தயாரானார்கள். போரில்; வெற்றியும் பெற்றனர். போருக்குப் பின்னர், துணை மந்திரி 'விதியை யாராலும் மாற்ற முடியாது.' என்று ராஜாவிடம் சொல்ல 'ஆம், என்று ராஜா சொல்லி அந்த நாணயத்தின் இரு பக்கத்திலும் தலை இருப்பதை' காண்பித்தார். நம்பிக்கையுடன் செயல்பட்டால் எத்தகைய காரியத்தையும் எளிதில் வெல்லலாம், விதியையும் மாற்றி அமைக்கலாம்.

# வர்ணம் தீட்டலாம் வாங்க...





## மனக்கணக்கு

ராமு, சோமு இரண்டு பேரிடமும் கொஞ்சம் பணம் இருந்தது. அப்போது ராமு, 'நீ எனக்கு ஒரு ரூபாய் தந்தால், நம் இருவரின் பணமும் சரிசமமாகிவிடும். ஒரு ரூபாய் தா' என்று சோமுவிடம் கூறினான். அதற்கு சோமு, 'இல்லை ராமு, நீ எனக்கு ஒரு ரூபாய் தா. அப்போது உன்னைப் போல் என்னிடம் இரண்டு மடங்கு பணம் இருக்கும்' என்றான். அப்படியானால் ராமுவிடமும் சோமுவிடமும் எவ்வளவு பணம் இருந்தது என்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

**விடை:**

*ராமுவிடம் ஐந்து ரூபாய், சோமுவிடம் ஏழு ரூபா*

## விடுகதை

அந்தி சாயும் நேரம். அவள் வரும் நேரம். அது என்ன? நிலா

மண்ணுக்குள் இருக்கும். மங்கைக்கு அழகு தரும். அது என்ன? மஞ்சள்

இரவு பகல் பாராமல் உழைக்கும். படுத்தால் எழுப்ப ஆள் இல்லை. அது என்ன? இதயம்

உடம்பெல்லாம் சிவப்பு. குடுமி மட்டும் பச்சை. அது என்ன? தக்காளி

ஓயாமல் இரையும், உருண்டோடிவரும். சில சமயம் சீறவும் செய்யும். அது என்ன? கடல்

சிறு தூசி விழுந்தால் குளமே கலங்கிவிடும். அது என்ன? கண்





## அணில்

சின்ன அணில் தத்தித்
தத்தி அருகில் வந்தது:
சிறிதுகூட அச்சமின்றி
என் கைக்கு வந்தது:
தங்கை கையில்
நிலக்கடலை
ஒன்றைப் பார்த்தது
தாவிச் சென்று வாயில்
கவ்வி பல்லால் கொறிக்குது!
மூன்று பட்டை முதுகைப்
பார்க்க
ஆசை வந்தது!
முயன்று தடவச் சென்றபோது
கையைக் கடித்தது!
சிவப்புக் குச்சி
நாக்கை நீட்டித்
தண்ணீர் குடித்தது!
திரும்பத் திரும்ப
கடலை எங்கே
என்று கேட்குது!

# தனிமையுணர்வு

## ஏற்படக் காரணம்

பாரம்பரிய அம்சங்கள் முக்கிய காரணமாக இருக்கலாம் என்று எண்ணப்படுகிறது. பல குடும்பங்களில் ஒருவரோடு ஒருவர் மனம் விட்டுக் கதைப்பதில்லை. மற்றவர்களிடம் இருந்து ஒதுங்கி வாழும். பழக்கம் உடையவர்களாகவும் இருக்கிறார்கள். சூழலில் ஏற்படும் மாற்றங்களும் நிறையவே காரணமாகின்றன. முற்றிலும் புதிய சூழலுக்கு இடம் மாறுதல் முக்கியமானது. சொந்த வீடு, சொந்த மக்கள், சொந்தமொழி, சொந்த உறவுகள் என வாழ்ந்தவர்கள் திடீரென புலம் பெயர்ந்து சென்று அந்நிய தேசத்தில் வாழும்போது தனிமையுணர்வு பலருக்கும் ஏற்படுகிறது. புதிய தொழிலில் இணையும்போதும் இந்த உணர்வு ஏற்படலாம். ஒரு சிலருக்கு சுற்றிவர நண்பர்கள், குடும்ப உறவினர் இருந்தும் தனிமையுணர்வு ஏற்படக்கூடும்.



அவர்களில் ஓரிருவராவது நம்பிக்கைக்கு உரியவர்களாக இல்லாதபோதே தனிமை உணர்வு ஏற்பட வாய்ப்பு அதிகமாகிறது. மணமுறிவு, விவாகரத்து, துணைவரின் சாவு போன்ற குடும்பப் பிரிவுகள் தனிமையை ஏற்படுத்தவே செய்யும். நெருங்கிய நண்பரின், உறவினரின் பிரிவு, சாவு போன்றவையும் அவ்வாறே தனிமை உணர்வுக்குக் காரண மாகலாம். ஒவ்வொருவருக்கும் தன்னைப் பற்றிய சுயமதிப்பு உயர்வாக இருக்க வேண்டும். அவ் வாறில்லாமல் தமது உடலைப் பற்றி, அழகைப் பற்றி, தொழிலைப் பற்றி அல்லது வேறு ஏதாவது விடயம் பற்றிய தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களும் சற்று ஒதுங்கியிருக்க முயல்வார்கள். இதனால் தனிமை உணர்வும் ஏற்படலாம். வேறு உள நோய் களும் காரணமாவதுண்டு.

தனிமையுணர்வால் தமது வாழ்க்கையில் என்ன பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையிட்டு சிந்திக்க வேண்டும். பாதிப்புக்கள் உள நலம் சார்ந்ததாகவோ உடல் ஆரோக்கியம் கெடுவதாகவோ இருக்கலாம். உங்களோடு ஒத்த சிந்தனைகளும் உணர்வுகளும் உள்ளவர்களோடு உறவுகளை ஏற்படுத்துங்கள். ஏற்கனவே உள்ளவற்றை வலுப்படுத்துங்கள். உங்களைப் பற்றிய சிந்தனைகளுக்கு அப்பால் மற்றவர்களது துன்பங்களையும் போதாமைகளையும் கவனத்தில் எடுங்கள். அவர்களுக்கு உதவும் ஏதாவது சமூக சேவையில் ஈடுபடுவதன் மூலம் உங்கள் மனம் விரிவடையும். சமூக ஊடாட்டம் அதிகரிக்கும். நல்லது நடக்கும் என நம்புங்கள். தாங்கள் மற்றவர்களால் நிராகரிக்கப்பட்டதான உணர்வு பாதிப்பை ஏற்படுத்தும். மாறாக நேர்மறை எண்ணங்களை வளர்ப்பதன் மூலம் சுற்றுச் சூழலில் உள்ளவர்களுடன் உறவை வளர்த்துக் கொள்ள முடியும். உடல் ரீதியான தனிமை தவிர்க்க முடியாதிருந்தால் தொலைபேசி, இணையம், ஸ்கைப், பேஸ்புக் போன்ற இன் றைய நவீன வசதிகளைப் பயன்படுத்தி வெறு மையிலிருந்து விடுபடுங்கள்.

# தேர்தலில் போட்டியிடார் மஹிந்த

## பிரதமர் ரணில் நம்பிக்கை

கொழும்பு, பெப்.24
மஹிந்த ராஜப்க்ஷவை தான் நன்கு அறிந்து வைத்துள்ளேன். அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிட வரமாட்டார் என்றே நினைக்கின்றேன்– இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
நியூயோர்க் டைம்ஸ் ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகளுடன் உறவை மீள வலுப்படுத்திக் கொள்ள நான் வழியேற்படுத்தியுள்ளேன். நான் 1990 மற்றும் 2000 ஆண்டுகளில் பிரதமராக இருந்த போது மேற்குலக நாடுகளுடன் சிறந்த உறவை பலப்படுத்தியிருந்தேன். அமெரிக்கா, சீனா, இந்தியாவுடன் நல்ல உறவு காணப்பட்டது. ஆனால் ராஜபக்ஷ அரசு அதனை நிர்மூலமாக்கியுள்ளது. அவர்கள் மேற்குலகை பகைத்துக் கொண்டுள்ளனர். இந்தியாவிடம் இருந்து விலகிச் சென்றனர். சீனா அவர்களைப் பாதுகாக்கும் என்று நினைத்தனர். ஆனால் சீனா இலங்கையில் செய்யும் வீதி, துறைமுகம் போன்ற அபிவிருத்தி திட்டங்கள் பெரிய வட்டிக் கடன் அடிப்படையிலானது. சீனாவின் ஆயுதக் கப்பல் இரண்டு தடவை இலங்கைக்கு வந்து சென்றது இந்திய பாதுகாப்புத் தரப்பினரை ஆத்திரமடையச் செய்தது."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
"நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகளை விடுதலை செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. போர்க் காலத்தில் சுவீகரிக்கப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகளை மீண்டும் தமிழ் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கைதிகளின் விவரம் திரட்டப்பட்டு வருகிறது. பதவிக் காலம் முடிவதற்கு முன்னர் கைதிகளின் எண்ணிக்கை குறித்த சரியான விவரத்தை அறிவிக்க எதிர்பார்த்துள்ளேன்."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
"மார்ச் மாதம் அதனை வெளியிட முடியும். இரகசிய முகாம்கள் இருப்பின் அதில் உள்ளவர்களை வெளியில் எடுத்து முகாமை மூடிவிட முடியும். காணாமல் போனவர்கள் ஆயிரக்கணக்கில் இல்லை. நான் நினைக்கிறேன் நூற்றுக் கணக்கில் இருப்பர். காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டு பெயர் கண்டுபிடிக்க முடியாதவர்கள் இறந்திருக்கக்கூடும் அல்லது வெளிநாடு சென்றிருக்கக் கூடும்"– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் காணிகள் விடுவிப்பு தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட வடமாகாண முதல்வர் க.வி. விக்னேஸ்வரன், எதிர்வரும் பொதுத் தேர்தல் வரைக்கும் சிங்கள மக்களை பகைத்துக் கொள்ளாதிருக்கவே கைதிகள் விடுதலை விடயத்தில் பிரதமர் காலம் கடத்துவதாக தெரிவித்துள்ளமை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்த பிரதமர் "நான் வரலாற்றைப் பற்றி கதைக்கிறேன். எதிர்கால இருப்பு பற்றி பேசவில்லை"– என்றார். (ற)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நேற்று கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் தங்கத்தில் செய்யப்பட்ட ஆறு அங்குலம் உயரமான திரிசூலம் ஒன்றில் வெள்ளி காசு ஒன்றைகட்டி தனது வேண்டுதலை நிறைவேற்றியுள்ளார்.
நேற்றுமுன்தினம் கதிர்காமம் சென்றிருந்த மஹிந்த 84 ஆயிரம் விளக்குகளை ஏற்றி வழிபாட்டில் ஈடுபட்டதுடன் கிரிவேஹேர விகாரையில் இரவு தர்ம உபதேசத்திலும் கலந்து கொண்டார்.
அவருடன் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ, புதல்வர்களான நாமல் ராஜபக்ஷ, யோஷித்த ராஜபக்ஷ, அண்ணன் மகனான ஷசீந்திர ராஜபக்ஷ, உதய கம்மன்பில, முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகே ஆகியோரும் சென்றிருந்தனர். (ற)



84ஆயிரம் விளக்குள் ஏற்றும் பூசையில் நாமல் ராஜபக்ஷ

# கதிரியக்கக் கழிவுகளை இங்கு குவிக்க முடியாது

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, பெப்.24
இலங்கையில் கதிரியக்க கழிவுப் பொருள்களை இந்தியா குவிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க.
"இந்தியா – இலங்கை இடையேயான அணுசக்தி ஒப்பந்தம், அண்மையில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி முன்னிலையில் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தப்படி, இந்திய அணு மின் நிலையங்களின் கதிரியக்க கழிவுகளை, இலங்கையில் குவிக்க முடியாது. இந்தியாவுக்கு இதற்கான அனுமதியை, கதிரியக்க கழிவு மேலாண்மை வழங்கவில்லை."– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
"அணுசக்தியை அமைதியான முறையில், ஆக்கபூர்வ பயன்பாட்டுக்கு பயன்படுத்தவே, இந்தியாவும்– இலங்கையும் ஒப்பந்தம் செய்துள்ளன. அதன்படி, அணு தொழில்நுட்ப அறிவாற்றல் மற்றும் வளங்களை பகிர்ந்து கொள்ளவும், பயிற்சி தரவும், உற்பத்தித் திறனை உயர்த்தவுமே ஒப்பந்தம் வகை செய்கிறது.
கதிரியக்க கழிவுகளை இலங்கையில் கொட்டுவதற்கு அல்ல. இலங்கை, விரைவில் பாகிஸ்தானுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொள்ள உள்ளது "– என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ற)

# மோடியின் வருகையை சரியாக பயன்படுத்துக

## மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா தெரிவிப்பு

அச்சுவேலி,பெப்.23
பாதுகாப்பு தரப்பினரின் பயன்பாட்டில் உள்ள காணிகளில் குறிப்பிடத்தக்களவை காணி உரிமையாளர்களிடம் மீளக் கையளிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அதனை நடைமுறைப் படுத்துவதில் தாமதம் நிலவுகின்றது. இந்த விடயத்தில் பொது மக்களும் தமது உணர்வுகளை வெளிப்படுத்தி வலியுறுத்த வேண்டும். இந்தியப் பிரதமரின் இலங்கை வருகையை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும்."– இவ்வாறு தெரிவித்தார் மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன்.
ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலயத்தின் சிறுவர் விளையாட்டு அரங்கின் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் தொடர்ந்து கூறியதாவது:–
"பாதுகாப்பு தரப்பின் பயன்பாட்டில் உள்ள காணிகளில் அடையாளம் காணப்பட்ட காணிகளை உரிமையாளர்களிடம் கையளிப்பது என தீர்மானிக்கப்பட்ட போதிலும் செய்முறைப் படுத்துவதில் தாமதம், தடங்கல்கள் நிலவுகின்றன. இந்த விடயத்தில் பொது மக்களும் தமது உணர்வுகளை வலியுறுத்த முன்வர வேண்டும். இந்தியப் பிரதமரின் இலங்கைப் பயணத்தை பொருத்தமான முறையில் கையாள முற்படவேண்டும்.
பாடசாலைச் சமூகத்தின் ஒன்றுபட்ட ஒத்துழைப்பு பாடசாலைச் செயற்பாட்டுக்கு உறுதுணையாக அமையும். அதனை ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலயச் சமூகத்தில் காணக்கூடியதாக உள்ளது. இது மகிழ்ச்சியை தருகின்றது. இந்தப் பாடசாலையை 'தரம் 1 சி' பாடசாலையாக தரம் உயர்த்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இந்த வருடம் இரண்டாம் தவணையில் இருந்து தரம் உயர்த்தப்படும்."– என்று தெரிவித்தார்.
பாடசாலை அதிபர் எஸ்.சத்தியவரதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி ஏ.எஸ்.சற்குணராசா உட்படப் பலர் உரையாற்றினர்.(ற–11)

# இரண்டாக உடைந்துள்ளது சுதந்திர கட்சி

## - பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, பெப்.24
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இணைந்து தன்னை முதலமைச்சர் பதவியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுத்து வருவதாக மேல் மாகாண சபையின் முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.
இதனை முன்னெடுப்போரில் அரசில் உள்ள அமைச்சர் ஒருவரும் அடங்குகின்றார். சுதந்திரக் கட்சி தற்போது இரண்டாக உடைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# தேசிய அரசுக்கு ஆதரவு; சுதந்திரக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, பெப்.24
தேசிய அரசுக்கு ஆதரவளிப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது. கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நீர்கொழும்பில் சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயலமர்வு ஒன்றை நடத்தியிருந்தது. ஐந்து முக்கிய விடயங்கள் தொடர்பில் இந்த செயலமர்வின் போது இணக்கம் காணப்பட்டுள்ளது.
கடந்த 18ஆம் திகதி நுகேகொடையில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக் காற்று நடவடிக்கை எடுப்ப தில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேசிய அரசில் அங்கம் வகிப்பதே சிறந் தது என ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன வலியுறுத்தியுள்ளார். இந்த யோசனையை கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.
அதன்படி, அமைச்சுப் பதவிகள் மற்றும் அரசின் பொறுப்புக்களை எவ்வாறு பகிர்ந்து கொள்வது என்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு நடத்தப்பட உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்தியன் பின்னரே பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற)

ශ්‍රී ලංකා නිදහස් පක්ෂය
இலங்கை சுதந்திரக் கட்சி
SRI LANKA FREEDOM PARTY

# கல்வி அமைச்சர் பதவிக்கு அகிலவிராஜ் தகுதியில்லை

## ஜே.வி.பி. சாடுகின்றது

கொழும்பு, பெப்.24
கல்வி அமைச்சர் பதவியை வகிக்க அகிலவிராஜ் காரியவசத்துக்கு தகுதி கிடையாது என ஜே.வி.பி கட்சி தெரிவித்துள்ளது.
தகுதியான திறமையானவர்களிடம் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட வேண்டியது அவசியமானது என ஊவா மாகாணசபை உறுப்பினர் சமந்த வித்தியாரட்ன தெரிவித்துள்ளார். உரியவர்கள் உரிய பதவிகளில் அமர்த்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.
கல்வி அமைச்சில் மட்டுமன்றி வேறும் பல நிறுவனங்களிலும் தகுதியானவர்கள் நியமிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். அனுபவமற்றவர்களிடம் முக்கிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.
நல்லாட்சி பிழையான வழியில் செல்வதாகவே தென்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். இந்த பிழைகள் திருத்திக் கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# மிதிவெடி மீட்பு



கொழும்பு, பெப்.24
மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறில் உள்ள விளையாட்டு மைதானத்துக்கு அருகில் உள்ள பற்றைக்காட்டுக்குள் இருந்து மிதி வெடியொன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் இதனைக் கண்டு வழங்கிய தகவலின் அடிப்படையில் இந்த மிதிவெடி மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மிதிவெடி அவ்விடத்தில் கொண்டுவரப்பட்டு போடப்பட்டுள்ளதாக தெரிவித்த களுவாஞ்சிக்குடி பொலிஸார் அது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (ந)


**காணி விற்பனைக்கு**

**இணுவில் ஸ்ரேசனுக்கு முன்பாக 5 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு.**

**தொடர்பு: 077 034 4731**

(56437)(4.3.7)



**தேவை**

எமது இல்லத்தின் பாவனைக்கு ஒவ்செற் கலப்பை தேவையாக உள்ளது. எனவே பழைய மொடல் ஒவ் செற் கலப்பையினை வைத்துள்ள விற்க விரும்புபவர்கள் விலை, விலாசம், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அனுப்பவேண்டிய முகவரி:
தி.இராசநாயகம்
தலைவர், மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
தொலைபேசி : 077 0604950, 021 4923118
மின்னஞ்சல்: rasa46@yahoo.com (C/19285)(10)


# தனது நலன்களுக்காக ஆஸ்திரேலியா மஹிந்த அட்டூழியத்தை அனுமதித்தது

## கடுமையாகச் சாடுகின்றார் பிரதமர் ரணில்

கொழும்பு, பெப். 24
முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுடன் தொடர்புடையவர்களால் – அவரது ஆட்சியில் இருந்தவர்களாலேயே ஆள் கடத்தல்கள் மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஆஸ்திரேலிய அரசு மஹிந்த இலங்கையில் ஜனநாயகத்தை மிதித்துக் கொண்டிருந்த போது அது இலங்கை விவகாரம் என்று வாய்மூடிப் பேசாமல் இருந்தது என்றும் கடுமையாகச் சாடியுள்ளார்.

'த ஆஸ்திரேலியன்' ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

"தஞ்சம் கோரி வருவோரின் படகுகளைத் தடுப்பதற்கு ராஜபக்ஷ அரசின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கான விலையாக, இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆஸ்திரேலியா அமைதியாக இருந்தது. ஆள் கடத்தல் நடவடிக்கைகளில் முன்னைய அரசில் இருந்தவர்கள் தொடர்புபட்டிருந்தனர் என்பது உறுதியாகியுள்ளது. ராஜபக்ஷவுடன் தொடர்புடையவர்களாலேயே இந்த ஆட்கடத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"ஒரு கட்டத்தில் இது ஆஸ்திரேலியாவுக்கும் ராஜபக்ஷ அரசுக்கும் இடையிலான உடன்பாடாக மாறியது. மனித உரிமைகள் விடயத்தில் ஆஸ்திரேலியா வேறு வழியைப் பார்த்துக் கொண்ட பின்னர், அப்போதைய பாதுகாப்புச் செயலர் கடற்படையின் ரோந்தை அனுமதித்தார். பொலிஸார் அல்லது கடற்படையின் பாதுகாப்பு முறையைத் தாண்டி எவரும் வெளியே செல்லக் கூடிய நிலை இருந்திருக்கவில்லை. எமது அரசு ஆள்கடத்தல்காரர்கள் புறப்படுவதைத் தொடர்ந்து தடுக்கும். எந்த வழியிலாவது ராஜபக்ஷ அரசு ஆள் கடத்தல்களைத் தடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அவர்களுக்குத் தேவைப்பட்டது, ஒரு பேரம் பேசும் இணக்கப்பாடு தான்."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"முன்னாள் குடியவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன், கடைசியாக இலங்கைக்கு வந்திருந்த போது, அப்போது எதிரணியில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல்வாதிகளைச் சந்திக்க மறுத்ததன் மூலம், இராஜதந்திர நெறிமுறையை மீறிவிட்டார். இதன் விளைவாக, புதிய குடிவரவு அமைச்சரவை தற்போது கூட்டணி அரசின் முக்கிய அங்கமாக உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருந்து உணர்வுபூர்வமற்ற வரவேற்பே கிடைக்கக் கூடும்.

இது ஆஸ்திரேலியாவின் பக்கத்தில் உள்ள ஒரு ஓட்டை. நான் ஆஸ்திரேலிய அரசுக்கு எதிரானவன் அல்ல. ஆனால், நீங்கள் உங்களின் அனுபவங்களில் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். ராஜபக்ஷ ஆட்சிக்கு முழு ஆதரவை வழங்கிய ஏனைய சில நாடுகளுக்கும் கூட இது பொருந்தும். ராஜபக்ஷ அரசு மனித உரிமைகளை மிதித்த போது – ஜனநாயகம் ஆபத்தில் இருந்த போது, இந்த நாடுகள் அது இலங்கையின் விவகாரம் என்று அமைதியாக இருந்தன."– என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சாடியுள்ளார். (ந-5)


உசன் சிறிமுருகன் விளையாட்டுக் கழகத்தின்
55 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு
யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான
மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி
(Set –up game)
இரவு பகல் முழுநாளும் நடைபெறும்
விண்ணப்ப முடிவு திகதி 05.03.2015
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி :
தலைவர், உசன் சிறிமுருகன் விளையாட்டுக் கழகம்,
உசன் மிருசுவில்
தொடர்புகளுக்கு: 077 727 6189 077 657 8032 077 412 9348
"விளையாட்டினூடே வீரியம் பெறுவோம்"
சிறிமுருகன் விளையாட்டுக் கழகம்
உசன் மிருசுவில்


# பசுந்தளிர் நூல் வெளியீடு இன்று

கிளிநொச்சி, பெப்.24
கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தால் பசுந்துளிர் நூல் வெளியீடும் பிரதேசக் கலைஞர்கள் கௌரவிப்பும் இன்று செவ்வாய்க் கிழமை பிரதேச செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற அரசாங்க அதிபர் தி. இராசநாயகம், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் உஷா சிவலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பசுந்துளிர் நூல் வெளியீட்டுரையை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் நிகழ்த்துவார். தொடர்ந்து பிரதேசத்தின் 10 கலைஞர்களுக்கு கலைத் தென்றல் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. (ந-426)




ரூபா 25.00

பாடசாலைகள் ரூபா 20.00 க்கு (விலைக்கழிவுடன்) புலமைச்சுடரை பெற்றுக்கொள்ளமுடியும்.

தரம் 4,3 மாணவர்களை சிறப்பாக வழிகாட்ட வேண்டிய தேவையை உணர்ந்து பெரும்பாலான பாடசாலைகள், பெற்றோர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க புலமைச்சுடரானது இவர்களுக்காக புதிதாக பெப்.28ஆம் திகதியிலிருந்து வெளிவரவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

உங்கள் பிரதிகளைப் பெற 27ஆம் திகதிக்கு முன்னர் புலமைச்சுடர் விற்பனை முகவர்களிடம் முற்பதிவு செய்துகொள்ளுங்கள்.
(முற்பதிவு செய்பவர்கள் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்)

தொடர்புகளுக்கு : 0716850005, 0115737593, 0714273035


வடமாகாண தொடர்புகளுக்கு : 0776569617 வடமராட்சி தொடர்புகளுக்கு : 0773920632

# இனவாதத்தைத் தூண்ட சில ஊடகங்கள் முயற்சி

## அழைத்துப் பேசவுள்ளதாக பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 24

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் தலையெடுக்கப் போகின்றார்கள் என்று சில சிங்கள அச்சு ஊடகங்கள் செய்திகளையும் – கட்டுரைகளையும் வெளியிடுகின்றன. இதன் மூலம் நாட்டில் இனவாதத்தை தூண்டுவதற்கு அவர்கள் முயற்சிக்கின்றனர். அதனால் சகல



அச்சு ஊடகங்களின் உரிமையாளர்களையும் அழைத்துப் பேசவுள்ளேன் – என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்த பொதுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"நாட்டில் இன நல்லுறவைக் கெடுக்கும் முயற்சிகள் தொடர்பாக எச்சரிக்கை விடுப்பதற்காக, உள்ளூர் அச்சு ஊடகங்களின் உரிமையாளர்களை அழைத்துப் பேசத் திட்டமிட்டுள்ளேன். ஊடக உரிமையாளர்கள் குறித்து கவலை எழுப்பக் கூடிய ஊடக உரிமை அமைப்புகளையும், அந்தக் கூட்டத்துக்கு அழைக்கவுள்ளேன். எந்தவொரு ஊடக உரிமையாளரேனும், கலந்து கொள்ளாவிடின் அதை நாம் கவனத்தில் கொள்வோம்.

மீண்டும் விடுதலைப் புலிகள் தலையெடுப்பதற்கு இடமளிக்கும் வகையில் புதிய அரசு செயற்படுகின்றது என்று சிங்கள நாளிதழ்கள் சிலவற்றில் செய்திகள் வெளியிடப்படுகின்றன."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"இந்த ஊடகங்களின் சில தலைவர்களும், பல ஊடகவியலாளர்களும், முன்னைய ஆட்சியாளர்களிடம் பணம் பெற்று வந்தவர்கள்.

தற்போது அவர்கள் நாட்டில் இனவாதத்தை தூண்டிவிட முனைகிறார்கள். சில நாளிதழ் உரிமையாளர்கள், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்தனர். இப்போது அவர்கள் புதிய அரசின் பெயரைக் கெடுக்க முனைகிறார்கள். இத்தகைய எந்த முயற்சியையும், எந்த அச்சமும் இன்றி எதிர்கொள்ள அரசு தயாராக இருக்கிறது.

சில நாளிதழ்கள் என்னை அரசியலில் இருந்து அகற்ற முனைந்தன. ஆனால் கடந்த பத்து ஆண்டுகளில் அது நடக்கவில்லை. இறுதியாக, கடந்த மாதம் நடந்த தேர்தலில் மஹிந்தவின் வெற்றியை உறுதிப்படுத்த முனைந்தன. ஆனால் அதிலும் தோல்வி கண்டன.

அடுத்த தேர்தலில் எந்த நாளிதழும், மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பது குறித்து எனக்குப் பிரச்சினையில்லை. ஆனால், இனநல்லுறவைக் கெடுக்கும் முயற்சியில் எவரேனும் ஈடுபட்டால் அதனை கடுமையான விவகாரமாக எடுத்துக் கொள்வேன்."– என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ற–5)


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராக (J/317) கடமையாற்றும் **க. முல்லை மாறன்** அவர்களின் அன்புத் தந்தை

**நாகலிங்கம் கனகலிங்கம்**


அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம்**
(C/19292) (10) **தென்மராட்சி**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் **பழனிவேல்ஆசாரி முருகப் பெருமாள்**

தோற்றம்
22.04.1947



மறைவு
25.01.2015

**மாத்தளையைப் பிறப்பிடமாகவும் நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட பழனிவேல் ஆசாரி முருகப் பெருமாள் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு அனைத்து வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு**

**அன்னாரின் இல்லத்தில் இன்று 24.02.2015 செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**


*(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)*

நாகலிங்க சுவாமிகள் வீதி,
சங்கானை (57252)(5.7)

குடும்பத்தினர்
புதிய வினோ நகைமாடம்
மொபைல் பிளாசா
077 935 2902

## மரண அறிவித்தல்

### சுபஹரி சோதிலிங்கம்



யாழ். வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சுபஹரி சோதிலிங்கம் நேற்று முன்தினம் (22.02.2015) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் அகால மரணமடைந்தார்.

அன்னார் அரசகேசரி-திருமகள் தம்பதியரின் அன்பு மகளும், செல்லத்துரை-பத்மாவதி தம்பதியரின் மருமகளும், புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த சோதிலிங்கத்தின் (சோதி) அன்பு மனைவியும், வசந்த், ஹம்சனா ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு,**
**கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.** (57256) (10)

தகவல்:
**செ.சூரியன்,**
**சு.சுரேஷ்.**

## மரண அறிவித்தல்கள்

### கிறிஸ்சோஸ்ரொம் யோசவ் (அன்ரன்)



(நியூ சிற்றி றேடர்ஸ்-யாழ்ப்பாணம்)

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், அச்சுக்கூட வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்சோஸ்ரொம் யோசவ் 22.02.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்சோஸ்ரொம் பொன்ராஜா-எலிசபெத் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை பிரான்சிஸ்-மல்லிப்பூ தம்பதியரின் அன்பு மருமகனும், ஆன் கிறேஸ் தரளத்தின் அன்புக் கணவரும், யூலியற், கிளிநெற், ஜெயராஜா (கல்யாணி பன்சி,யாழ்ப்பாணம்) தேவராஜா (ஜேர்மனி), அருள்ராஜ் (ஜேர்மனி), ஆன் திருநெற் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,, ஜீன் ஜீவிதா (மு/யோகபுரம் மகா வித்தியாலயம்), யூஜின், ஜொவித்தா (லண்டன்), ஐரின் யுலிற்றா (4ஆம் வருடம் முகாமைத்துவ பீடம்,யாழ்ப்பாணம்), யஸ்ரின் சாந்தன் (3ஆம் வருடம் முகாமைத்துவ பீடம்,யாழ்ப்பாணம்), அன்று வசந்தன் (முதலாம் வருடம் மருத்துவ பீடம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிறேசியன் மொறிஸ், சிவானந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும், தனியாவின் அன்புப் பேரனும், சிறில் பெனடிக்ற் (லைடன் ரெக்ஸ்ரைல், யாழ்ப்பாணம்), கிளறன்ஸ், றதி, விஜி (ஜேர்மனி), எல்சி (ஜேர்மனி), பௌஸ்ரின் (லண்டன்), அருமைநாயகம், செல்வநாயகம் (புருனை) போசியா மரியநாயகம் (ஆசிரியர்-வவுனியா) ராஜநாயகம் (சுவிஸ்), ஜீவநாயகம், சுகிர்தசீலி (ஆசிரியர்), புனிதம் (தாதி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 25.02.2015 புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு 32/8, அச்சுக்கூட வீதியில் உள்ள அவரின் இல்லத்திலிருந்து சில்லாலை கதிரைமாதா ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**32/8, அச்சுக்கூட வீதி,**
**யாழ்ப்பாணம்.** (57257) (10)

தகவல்: **குடும்பத்தினர்.**
**0778956612**

### ஆறுமுகம் பொன்னம்பலம்



யாழ். சாவகச்சேரி, மடத்தடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பொன்னம்பலம் நேற்று முன்தினம் (22.02.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்-நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரமாலாவின் பாசமிகு கணவரும் சுபந்தினி (UK), தயாழினி (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதாகரன் (UK), சிறிதரன் (UK) ஆகியோரின் அன்பு மாமனும், குஷ்மிகா, சியாகன், அபிசானி ஆகியோரின் அன்புப் பேரனும், யோகநாதன், செல்வமலர், செல்வராசா, ஜெயம், நவநீதன், காலஞ்சென்ற நீலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரசேகரம், சந்திரகுமார், ஸ்ரீகாந்தன், வாசுதேவன், சந்திரகலா, சந்திரமலர், சந்திரலீலா மற்றும் காலஞ்சென்ற சந்திரலிங்கம், சந்திரஜெயம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2015) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**மடத்தடி,**
**சாவகச்சேரி.** (C/19293) (10)

தகவல்:
**குடும்பத்தினர்.**

### கந்தசாமி அருளானந்தம் (அருள் மாமா)

(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்)



இல. 325, பருத்தித்துறை வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி தெற்கு, அடுவம் பற்றை வசிப்பிடமாகவும், தற்போது சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி அருளானந்தம் நேற்று (23.02.2015) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மக னும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் பாசமிகு கணவரும், புவனேஸ்வரி (உருத்திரபுரம்), காலஞ்சென்றவர்களான சதானந்தம், நித்தியானந்தம், பரமானந்தம் மற்றும் குணரத்தினம் (கனடா), செல்வரெத்தினம் (கனடா), ராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வச்செந்தி (டென்மார்க்),பவானி (கனடா), காலஞ்சென்ற றமணி மற்றும் செல்வகுமார் (லண்டன்), ரசனி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிரிதரன் (டென்மார்க்), காலஞ்சென்ற சுரேஸ் மற்றும் ஜெயகுமார் (பண்டத்தரிப்பு), சுகந்தா (லண்டன்), புஸ்பகுமார் (டென்மார்க்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸ்லாந்தில் நடைபெறும். இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**இல. 325, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர்.**
**தொடர்பு. 0041554408326**
**0212220253** (57255) (10)

தகவல்:
**தி. பகீரதன், தி.ஜெயகுமார்**
**(மருமக்கள்)**

## ஐ.நாவிடம்

பேரணி முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பிரதான வளாகத்தில் இருந்து ஆரம்பமாகும். சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கை அங்கு அமைந்துள்ள ஆசிரியர் சங்கக் காரியாலயத்தில் காலை 8.30 மணி முதல் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும். அதில் ஒவ்வொரு பொது அமைப்பின் சார்பாகவும் ஒவ்வொருவர் ஒப்பமிட முடியும். உங்களிடம் இறப்பர் முத்திரை இருந்தால் கொண்டு வருதல் சிறந்தது.

முதலில் பரமேஸ்வரன் கோவிலுக்கு முன்னாலுள்ள வெளியில் அனைவரும் ஒன்றுகூடுவர். அதனைத் தொடர்ந்து மதத் தலைவர்கள் பேரணியினை வழி நடத்தித் செல்வார்கள். – என்று ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

மதத் தலைவர்களின் பின்னால் பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள், பொது அமைப்புக்கள் என்ற ஒழுங்கில் இருவர் இருவராகச் செல்வார்கள். பேரணியின்ஆரம்பத்தில் மட்டும் ஒரேயொரு பதாகை (பனர்) கொண்டு செல்லப்படும். அதைத் தவிர பேரணியில் வேறெந்தப் பதாகைகளும் ஏந்துவதற்கு அனுமதிக்கப்படாது.– என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சுலோக அட்டைகள் ஒழுங்கமைப்பாளர்களால் எழுதப்பட்டவை மட்டுமே கொண்டு செல்லப்படும். வேறெந்தச் சுலோக அட்டைகளும் அனுமதிக்கப்பட மாட்டாது. பேரணியின் போது துண்டுப்பிரசுரம் விநியோகிப்பதற்கு எவருக்கும் அனுமதி அளிக்கப்பட மாட்டாது. கட்சிக் கொடிகள், பொது அமைப்புக்களின் பதாகைகள், அடையாளங்கள் போன்றவைக்கும் அனுமதியில்லை.– என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பேரணி இராமநாதன் வீதியூடாக பலாலி வீதியை அடைந்து கந்தர்மடம் சந்தியில் திரும்பி நல்லூர் கோவிலின் வடக்கு வீதியை அடையும். அங்கு அமைப்புக் குழுவின் தலைவர் மட்டும் சிற்றுரை ஆற்றிய பின்னர் மனு கையளிக்கப்படும். பின்னர் மனிதஉரிமை ஆர்வலர்களும் அனைவரும்அமைதியாகக்கலைந்து செல்வார்கள். – என்று ஏற்பாட்டுக் குழுவினர் மேலும் தெரிவித்தனர்.

இவை பற்றிய தொடர்புகளுக்கு கலாநிதி எஸ்.சந்திரசேகரம் 0779676783, அ. இராசகுமாரன் 0777062493 ஆகியோருடன் தொடர்புகொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–4)

## தமிழ்க்

நீதியமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

"2012 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலை கலவரத்தின் போது 27 சிறைக் கைதிகள் கொல்லப்பட்டமை தொடர்பாக ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையிலான குழுவினரால் நீதி விசாரணை மேற்கொள்வதற்கு எடுத்த முடிவை மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

உண்மையைக் கண்டறியவும் – நீதியை நிலைநாட்டவும், ஒரு விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தமை வரவேற்புக்குரியது மட்டுமல்ல, இலங்கையின் நீதித்துறையின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வாய்ப்பை உருவாக்குவதற்கான ஒரு நன்முயற்சியுமாகும்."– என்று அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"சிறைகளில் கொல்லப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாகவும் – படுகொலைகள் தொடர்பாகவும் நீதியான விசாரணைகளை நடத்துவதன் மூலம் அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டும். இந்த நோக்கத்தை மேலும் உறுதிப்படுத்துமாறு கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

வவுனியாவில் அடைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் அனுராதபுரம் சிறைக்கு மாற்றப்படுவதை எதிர்த்து உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினர். எனினும் அவர்கள் பலவந்தமாக அனுராதபுரம் சிறைக்கு மாற்றப்பட்டு அங்கு கடுமையான முறையில் தாக்கப்பட்டனர். அவர்களின் டெல்றொக்ஷன் என்றொரு கைதி கோமா நிலைக்குச் சென்று உயிரிழந்தார். இவர் கோமா நிலையில் இருந்தபோது கூட கட்டிலுடன் விலங்கால் அவரின் கைகளும், கால்களும் பிணைக்கப்பட்டிருந்தது என்று அவரைப் பார்வையிடச் சென்ற பெற்றோர் தெரிவித்திருந்தனர். இதே போன்று நிமலரூபன் என்ற ஓர் அரசியல் கைதியும் சிறைக்காவலர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்தார்."– என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"இப்படியான படுகொலைகள் தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்படவுமில்லை. இந்தச் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக உரியவர்கள் இனங்காணப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவுமில்லை.

அதேபோன்று பிந்துனுவெல புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 20 இளைஞர்களை சிறை அதிகாரிகளின் அனுசரணையுடன் அடித்தும் – வெட்டியும், முகாமுக்குள் வைத்தே அங்கு உட்புகுந்த கிராமவாசிகளால் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக நடைபெற்ற வழக்கில் இருவருக்கு தூக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அவர்கள் மேன்முறையீட்டின் பேரில் விடுதலை செய்யப்பட்டனர்.

இப்படியாக அரச பாதுகாப்பில் உள்ள சிறைகளில் தமிழ் அரசியல் கைதிகள் தாக்கப்படுவதும் – கொல்லப்படுவதும் பலமுறை இடம்பெற்று வந்துள்ளன. ஆனால் அவை முறையாக விசாரிக்கப்பட்டு அதற்கான நீதிவழங்கப்படவில்லை."– என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

"1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் வெலிக்கடைச் சிறையில் 56 தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டமை சர்வதேச அரங்கில் இலங்கைக்குப் பெரும் அவப்பெயரை ஏற்படுத்தியமை இங்கு நினைவு கூர விரும்புகிறேன். ஒரு நல்லாட்சியை உருவாக்கும் வாக்குறுதியுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள இந்த அரசு, வெலிக்கடையில் 2012ஆம் ஆண்டு இடம்பெற்ற படுகொலைகளை விசாரணை செய்வதைப்போன்று, தமிழ்க்கைதிகள் சிறையில் தாக்கப்பட்டமை – கொல்லப்பட்டமை தொடர்பாகவும் விசாரணை மேற்கொண்டு நீதி வழங்கும் என்று எதிர்பார்க்கின்றேன்.

இன மதபேதமின்றி நீதி வழங்கப்படும் போது இயல்பாகவே ஒரு நல்லாட்சி உதயமாகும் என நான் திடமாக நம்புகின்றேன்"– என்று அவர் அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற–5)

## அல்லைப்பிட்டியில்

கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் வீட்டுக்குச் சென்ற குறித்த குடும்பஸ்தர் அங்கு தகராறில் ஈடுபட்டுள்ளார். அதனையடுத்து சந்தேக நபர் அருகில் இருந்த அலவாங்கால் தலையில் அடித்துள்ளார். அதனால் அந்தக் குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது. அவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அதே இடத்தைச் சேர்ந்த குறித்த சந்தேக நபர் தானாகவே பொலிஸில் சரணடைந்தார். அவரை விளக்க மறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ற–4)

## ஆதரவு

மேற்படி போராட்டத்தில் கட்சி உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரையும் கலந்து கொண்டு தமிழ் மக்களது உள்ளக்கிடக்கையை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்த அணிதிரளுமாறு அறைகூவல் விடுக்கின்றோம்." – என்றுள்ளது.

சைவ மகாசபை வெளியிட்டுள்ள அறிக்கையில் – "இழப்புக்களுடன் வாழ்கின்ற மக்களுக்கு உடனடியாக நீதி கிடைப்பது அவசியம். காலம் பிந்திய நீதி மறுக்கப்பட்ட நீதியே. தமிழர் பிரதேசத்தில் போரில் கொல்லப்பட்டோர், அங்கவீனமாக்கப்பட்டோர், காணாமற்போனோருக்கு நீதி வழங்கப்படவேண்டும். இவர்களுக்கு உரிய காலத்தில் நீதி கிடைக்கவில்லையென்றால் அது மறுக்கப்பட்ட நீதியாகவே அமையும். இலங்கையில் நடந்த போர் தொடர்பாக ஐ.நா. சபையின் மனித உரிமைகள் சபையினால் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையை எதிர்வரும் மார்ச் மாதம் வெளியிடுவதே உசிதமானது. அந்த விசாரணை அறிக்கையின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மைகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

எனவே, மேற்படி விசாரணை அறிக்கையை எதிர்வரும் மார்ச் மாதம் வெளியிடக் கோரி யாழ். பல்கலைக் கழக சமூகத்தால் நடத்தப்படவுள்ள பேரணிக்கு எமது சபை பூரண ஆதரவை வெளிப்படுத்துகின்றது. இந்தப் பேரணியில் சைவத் – தமிழ் மக்கள் அனைவரையும் பங்கெடுக்குமாறும் சைவ மகா சபை கோரிக்கை விடுக்கின்றது" – என்றுள்ளது.

வலி.தெற்கு வர்த்தக சம்மேளனத் தலைவர் சி.ஹரிகரன் விடுத்துள்ள அறிக்கையில் – "தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் போர்க்குற்ற விசாரணை அறிக்கை மார்சில் வெளியிடப்பட வேண்டும், மக்களின் பூர்வீக நிலங்களிலிலிருந்து இராணுவம் உடனே வெளியேற்றப்பட வேண்டும். காணாமற் போனோர் தொடர்பான உண்மையான தகவல்கள் வெளியிடப்பட வேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்பிலுள்ள கைதிகள் உடன் விடுவிக்கப்பட வேண்டும் போன்றவற்றை வலியுறுத்தி பல்கலைக் கழக சமூகம் முன்னெடுக்கும் போராட்டத்துக்கு வர்த்தகர்களாகிய நாமும் எமது ஆதரவை வழங்குவதுடன், அனைத்து மக்களும் அலையலையாகத் திரண்டு எமது இன அழிப்புக்கு எதிராகக் குரல் கொடுப்போம் வாரீர்." – என்றுள்ளது.

வடமராட்சி கிறிஸ்தவ ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் – "ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இலங்கை குறித்த விசாரணை அறிக்கையினை வெளியிடுவதில் ஏற்பட்டுள்ள 6 மாத கால தாமதம், போரால் இழப்புக்களைச் சந்தித்து வேதனையுடன் வாழும் அனைவருக்கும் வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கால தாமதத்துக்கான அங்கீகரிப்பை மேற்கொண்ட அனைவரையும் வடமராட்சி கிறிஸ்தவ ஒன்றியம் வருத்தத்துடன் கண்டிக்கின்றது."– என்று தெரிவித்துள்ளது. (ற–5)

## கோத்தா

"நான் அறிந்த வகையில் திருகோணமலை கடற்படை முகாமில் 35 குடும்பங்களோ அல்லது 700 தமிழர்களோ தடுப்பில் இல்லை. ஏனெனில் தற்போது கடற்படையின் தடுப்பில் எந்தவொரு நபரும் இல்லை. அத்துடன் 700 பேரை தடுத்துவைப்பதற்குரிய வசதிகளும் அங்கு இல்லை.

திருகோணமலை கடற்படை முகாமில் 'கோத்தா' என்ற பெயரில் இடம் ஒன்று இருப்பதனை நான் அறியவில்லை. கோத்தபய என்ற பெயரில் எமது கடற்படை முகாம் ஒன்று முல்லைத்தீவில் மட்டுமே உள்ளது. அங்கு 700 பேரையோ அல்லது 35 குடும்பங்களையோ கடற்படையினர் தடுப்பில் வைத்திருக்கவில்லை" – என்று அவர் தெரிவித்துள்ளார். (ற–5)

## இராணுவ

கடந்த சில ஆண்டுகளில், இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பற்றாலியன்களின் எண்ணிக்கை, ஒன்றில் இருந்து 7 ஆக அதிகரித்துள்ளது. வடக்கில், இராணுவப் புலனாய்வுப் பிரிவு பல்வேறு சர்ச்சைகளின் மையமாக இருந்து வருகிறது.

நாட்டின் பிரதான புலனாய்வுச் சேவையான அரச புலனாய்வுச் சேவைக்கு நிகராகச் செயற்படுவதாக இதன் மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. தற்போதும் இராணுவப் புலனாய்வுப் பிரிவு, அரச புலனாய்வுச் சேவையை விஞ்சி நிற்கிறது. அதனால் பொலிஸாரைக் கொண்ட, அரச புலனாய்வுச் சேவை இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்று குறித்த ஆங்கில ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது. (5)

## மீள்குடியமர்வு

"இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள காணிகள் தவிர ஏனைய காணிகள் விடுவிக்கப்படும்' என்று புதிய அரசின் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் குறிப்பிட்டுள்ளார். இதனை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள் அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டும். அந்தக் காணிகளை இராணுவம் பிடித்து வைத்திருந்தால் என்ன, கடற்படையினர் பிடித்து வைத்திருந்தால் என்ன சகல காணிகளும் மக்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும்." – என்று அவர் தெரிவித்தார்.

"தமிழ் மக்கள் முழுமையாக மீள்குடியமர்வு செய்யப்பட வேண்டும். கடந்த காலங்களைப் போன்று, மீள்குடியமர்வு தொடர்பான பிரச்சினை தொடர்ந்து நீண்டு கொண்டே போகக் கூடாது. எனவே இந்த விடயத்தில் புதிய அரசு அரசியல் ரீதியாக முடிவு எடுத்தே ஆக வேண்டும். அதுவும் விரைந்து எடுக்க வேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் எல்லோரும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும் என்று உறுதியான முடிவு எடுக்கப்பட வேண்டும்"– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"கடந்த அரசு செய்த விடயங்களையே புதிய அரசும் செய்யத் தொடங்கியிருக்கின்றது. மன்னார் – வவுனியா மாவட்டங்களில் சிங்கள அரச அதிபர்கள் நியமிக்கப்பட்டார்கள். இதனை நாம் எதிர்திருந்தோம். தமிழ் மக்கள் அதிக பெரும்பான்மையாக வாழும் மாவட்டங்களில் சிங்கள அரச அதிபர்கள் எதற்கு ? இந்த நிலையில் புதிய அரசு நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஓர் கிராம சேவையாளர் பிரிவில் சிங்கள கிராம உத்தியோகத்தரை நியமித்துள்ளது. நெடுங்கேணியின் ஒரு பகுதியை இணைத்து முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு சில கிராமங்களையும் இணைத்து, வெலி ஓயா பிரதேச செயலாளர் பிரிவை வலுப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்."– என்றும் அவர் தெரிவித்தார்.

"திருகோணமலை இ.போ.ச. சாலை ஊழியர்கள் கடந்த சில நாள்களாக போராட்டம் நடத்தி வருகின்றனர். அங்கு சாலை மேலாளராக சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். பின்னர் தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் அந்தப் பதவிக்கு தகுதியானவர். இந்த நிலையில், புதிய அரசின் திருகோணமலை மாவட்ட அமைச்சராக இருக்கின்ற குணரட்ண, தற்போது எந்தத் தகுதியும் இல்லாத பஸ் சாரதி ஒருவரை மேலாளராக நியமித்துள்ளார். இது ஏற்றுக் கொள்ள முடியாதது. தமிழ் அதிகாரிகள் இவ்வாறு உயர் பதவிக்கு வரக் கூடாதென்பதும், அவ்வாறு வந்தாலும் நிலைக்கக் கூடாது என்பதற்காகவுமே இவ்வாறு செய்திருக்கின்றனர். புதிய அரசுக்கும், பழைய அரசுக்கும் எந்த மாற்றமும் தெரியவில்லை."– என்றும் அவர் தெரிவித்தார். (ற–5)

## தமிழர் தீர்வுக்கு

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கும், அரசுக்கும் இடையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுக் காண்பதற்கு பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு இந்திய நடுவுநிலைமை வகிக்க வேண்டும். இலங்கைப் பயணத்தின் போது இந்தியப் பிரதமர் இதனைச் செய்ய வேண்டும் – இவ்வாறு கோரியுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அதன் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், இந்தியப் பிரதமரை, இலங்கைப் பயணத்தின் போது நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தும் போதும் இந்த விடயத்தை வலியுறுத்தவுள்ளதாகத் தெரிவித்தார்.

நீர்வேலியிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்தியப் பிரதமர் ஒருவர் முதன் முறையாக யாழ்ப்பாணத்துக்கு வருகின்றார். அவரை நாங்கள் வரவேற்கின்றோம். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பயணத்தின் மூலம் தமிழ் மக்களது அன்றாட – நிரந்தரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கு புதிய வழி பிறக்க வேண்டும்."– என்று அவர் கூறினார்.

"வடக்கு – கிழக்கில் இதுவரை முழுமையான மீள்குடியேற்றம் இடம்பெறவில்லை. மக்கள் முழுமையாக மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும். இதற்கு இந்தியப் பிரதமர் தனது பயணத்தின் ஊடாக அழுத்தம் கொடுக்க வேண்டும். தமிழக அகதிகள் இலங்கைக்கு திரும்புவதை வரவேற்கின்றோம். ஆனால் அதற்கு முன்னதாக, இங்கு தமிழர்கள் குடியமர்த்தப்பட வேண்டும்.

அற்ப காரணங்களுக்காக இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். இதற்காக இந்தியப் பிரதமர் தனது வருகையைப் பயன்படுத்த வேண்டும். காணாமற் போனோர் விடயத்தில் இதுவரை எதுவும் நடக்கவில்லை. ஆணைக்குழுக்கள் நியமிக்கப் பட்டாலும், அதனூடாக எதுவும் செய்யப்படவில்லை." – என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"சரணடைந்து – கைது செய்யப்பட்டு – கடத்தப்பட்டு காணாமற் போனோருக்கு என்ன நடந்தது என்பதை இந்த அரசு சொல்ல வேண்டும். இதற்கான பதிலை, புதிய அரசிடமிருந்து இந்தியப் பிரதமர் பெற்றுத் தர வேண்டும்.

மிக முக்கியமாக இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு எட்டப்பட வேண்டும். அரசுகள் விரும்பினால் கொடுக்கலாம், இல்லையெனில் பறிக்கலாம் என்ற நிலை இருக்கக்கூடாது. உரிமை என்பது இரக்கப்பட்டு கொடுக்கப்படுவது அல்ல. எமக்கு வழங்கப்பட வேண்டியது வழங்கப்பட்டே ஆக வேண்டும். அதனை வைத்து நாம் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் வாழ்வைத் திட்டமிடக்க கூடியதாக இருக்க வேண்டும்.

இந்தியாவுக்குத்தான் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் அகல – ஆழம் எல்லாம் தெரியும். இந்திய இராணுவத்தையே இங்கு அனுப்பும் அளவுக்கு எமது பிரச்சினையுடன் இரண்டறக் கலந்தவர்கள் அவர்கள். எனவே இந்தியா தனது மத்தியஸ்தத்துடன் இலங்கை அரசுக்கும் எங்களுக்கும் இடையில் பேச்சை ஆரம்பிக்கலாம். இல்லையெனில், இந்தியா, ஐ.நா. போன்ற அமைப்புக்களை மத்தியஸ்தம் வகிக்கச் செய்யலாம். இது தொடர்பில் இந்தியப் பிரதமர் தனது இலங்கைப் பயணத்தின் போது இதனை ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும்"– என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற–5)

24 FEB 2015

# கறுவாச்சோலை கிராம மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்குக

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் துரைரெட்ணம் வேண்டுகோள்

மட்டக்களப்பு, பெப்.24

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கெவுளியாமடு, கறுவாச்சோலை கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமரத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அத்துமீறிய பயிர்ச் செய்கைகளை தடுக்குமாறும் வேண்டுகோள் விடுக்கவுள்ளதாக கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சரிடம் தான் வேண்டுகோள் விடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் ஞாயிற்றுக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

"மட்டக்களப்பு மாவட்டத்தின்; மண்முனை தென்மேற்கு (பட்டிப்பளை) பிரதேச செயலாளர் பிரிவில் கெவிளியாமடுவிலுள்ள கறுவாச்சோலை கிராமத்தில் 104 தமிழ்க் குடும்பங்கள் வாழ்ந்துள்ளன.

1986ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரம் காரணமாக அங்கு வாழ்ந்த 104 குடும்பங்கள் இடம்பெயர்ந்து மாவடி முன் மாரியில் இரண்டுவருடங்களும் களுதாவளை, தேத்தாத்தீவு கிராமங்களில் ஐந்து வருடங்களும் ஏனைய காலப்பகுதியில் அவர்களின் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் வசித்து வந்துள்ளனர்.

மீண்டும் 2011 ஆம் ஆண்டு மீளக் குடியமர வந்தபோது, 40 குடும்பங்களின் காணிகள் ஏனைய சமூகத்தைச் சேர்ந்தவர்களால் விவசாயச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. இந்தக் காரணத்தால் முழுமையாக இந்தக் குடும்பங்களை மீள்குடியேற்ற முடியாமல் போனது. இந்த நிலையில், அண்ணளவாக 25 குடும்பங்கள் மட்டுமே மீளக் குடியமர்த்தப்பட்டன.

> கெவுளியாமடுவுக்கு அருகில் உள்ள பெரும்பான்மை இன மக்களுக்கு அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ் மக்களின் காணிகள் அத்துமீறிய விதத்தில் கைப்பற்றப்பட்டு வருகின்றன.

மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்குமட்டும் ஒருலட்சம்ரூபா பெறுமதியான தற்காலிக வீடுகளும் விவசாயம் செய்வதற்கான விதை நெல்லும் மேட்டுப்பயிர் செய்வதற்காக உழுந்து, பயறு, கௌப்பியும் வேலி அமைப்பதற்குரிய முட்கம்பிகளும் வழங்கப்பட்டிருந்தன.

இந்தச் சூழ்நிலையில் தமிழ் மக்களின் ஏனைய காணிகளில் அத்துமீறி விவசாயம் செய்து வந்தவர்கள், மீண்டும் காணிகளை மீள ஒப்படைக்காத நிலையிலும் வீதி அமைப்பு, மின்சார வசதி, நிரந்தர வீடு, காட்டு யானைகளின் நெருக்கடி, போக்குவரத்து வசதி யின்மை போன்ற பல்வேறு காரணங்களால் மீண்டும் 2013ஆம் ஆண்டு இடம் பெயர்ந்தனர். தற்போது இரண்டு குடும்பங்களே அங்கு வசிக்கின்றன. ஏனைய குடும்பங்கள் மீளக்குடியமர ஆர்வமாக உள்ளன.

எனினும், கெவுளியாமடுவுக்கு அருகில் உள்ள பெரும்பான்மையின மக்களுக்கு அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ் மக்களின் காணிகள் அத்துமீறிய விதத்தில் கைப்பற்றப்பட்டு வருகின்றன.

எனவே கெவுளியாமடு, கறுவாச்சோலை கிராமத்தில் மீண்டும் இந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு அவர்களுடைய காணிகளை பிடித்தவர்களிடமிருந்து மீண்டும் உரிமையாளர்களுக்கு காணிகளை பெற்றுக் கொடுத்தல்.

யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்கு மின்சாரவேலி அமைத்தல், போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல், வீதிகளை அமைத்துக் கொடுத்தல், வாய்க்கால்களுக்கு சிறு பாலங்களை அமைத்தல், மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல், நிரந்தர வீட்டுத் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

குடி தண்ணீர் வசதியை ஏற்படுத்தும் முகமாக கிணறுகளை அமைத்துக்கொடுத்தல், ஆறு மாதங்களுக்கான உலருணவு வசதியை வழங்குதல், நிரந்தரமாக விவசாயம் செய்வதற்கான உதவிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் . போன்ற விடயங்களைத் திட்டமிட்டு முன்னிலைப்படுத்தி அவர்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)



## அதிபர் இடமாற்றத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, பெப்.24

மட்டக்களப்பு மண்முனை வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தின் அதிபர் இடமாற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பாடசாலையில் கல்விபயிலும் மாணவரின் பெற்றோர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலைக்கு முன்பாக நேற்றுக் காலை 7 மணியளவில் ஒன்று திரண்ட பெற்றோர்கள் கைகளில் பதாகைகளை ஏந்தியவாறு இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசாவும் ஆர்ப்பாட்டத்தில்கலந்துகொண்டனர்.

குறித்த பாடசாலையின் அதிபர் திடீரென மட்டக்களப்பு வலய கல்விப் பணிமனைக்கு இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதனால் பாடசாலையின் நிர்வாகம் சீர்குலைந்துள்ளதுடன் இம்முறை புலமைப் பரிசில் பரீட்சைக்குத்தோற்றும் மாணவர்களும் பாதிக்கப்பட் டுள்ளதாக பெற்றோர்கள் தெரிவித் தனர்.

இதுதொடர்பாக வலயக் கல்வி பணிப்பாளருடன் பேச்சு நடத்தவுள்ளதாக மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார். (வ)

## போதைப்பொருள் விற்பனையாளர் திருமலையில் கைது

திருகோணமலை, பெப்.24

திருகோணமலை ரொட்டவெவ பகுதியில் போதைப்பொருள் விற்பனையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் நேற்று முன்தினம் மாலை ஆறு மணியளவில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கஞ்சா விற்பனை தொடர்பில் ஏற்கனவே பல தடவைகள் குறித்த நபர் கைது செய்யப்பட்டு, விடுதலைசெய்யப் பட்டவர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சந்தேகநபரை பொலிஸார் திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளனர்.

இது தொடர்பில் மொறவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ)



யாழ்.முனீஸ்வரன் வீதியில் புல்லுக்குளத்துக்குச் செல்லும் வடிகால்வாயில் கழிவு நீர் தேங்கி துர்நாற்றம் வீசுவதால் வீதியால் செல்லும் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். யாழ்.நகரில் இருந்து கந்தப்பசேகரம் வீதியூடாக புல்லுக்குளத்துக்குச் செல்லும் வடிகால் வாயிலேயே கழிவு நீர்தேங்கிக் காணப்படுகின்றது. (வ–17)

## டைனமைட் பயன்படுத்தி மீன்பிடித்த 7 பேர் கைது



மட்டக்களப்பு, பெப்.24

வாகரைக் கடலில் சட்டவிரோதமான முறையில் டைனமைட் மூலம் மீன்பிடியில் ஈடுபட்ட ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஏ.ஏ.பரீத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த கடலில் சட்டவிரோதமான முறையில் டைனமைட்டைப் பயன்படுத்தி மீன்பிடித்துவிட்டு, பிடிக்கப்பட்ட மீன்களை ஏற்றிவரும்போது, கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் பொலிஸாரின் உதவியுடன் சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர்.

மேலும் பெருமளவிலான மீன்களை ஏற்றிவந்த வாகனம், சட்டவிரோத வலைகள், டைனமைட் உட்பட மீன்பிடி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள்மற்றும்கைப்பற்றப்பட்ட பொருள்கள் வாழைச்சேனை நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (வ)

## யாழ். நகர் உணவகங்களில் சுகாதாரப் பகுதியினர் சல்லடை

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். நகரப் பகுதியில் உள்ள உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் தேநீர் விற்பனை நிலையங்கள் மீது சுகாதாரப் பகுதியினர் திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

திடீர் சோதனையின்போது ஆறு உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக சுகாதாரப் பகுதியின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போதிய சுகாதார வசதிகள் இன்றி செயற்பட்ட காரணத்தாலும் தொற்று நோய்கள் பரவக்கூடிய வகையில் அந்த நிலையங்கள் இயங்கியமையாலும் இந்த நிலையங்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அதனை விடமேலும் ஓர் உணவு கையாளும் நிலையம் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கியமையால் அந்த நிலையம் சுகாதாரப் பகுதியினரால் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.

சகல உணவு கையாளும் நிலையங்கள், தேநீர்க் கடைகள் போன்றவை சுகாதார விதி முறைகளை முழுமையாக பின்பற்றிச் செயற்பட வேண்டும் எனவும் மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

இவ்வாறு செயற்படாத நிலையங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அத்துடன் சகல நிலையங்களிலும் பணியாற்றும் பணியாளர்கள் சுகாதார பகுதியினரின் மருத்துவச் சான்றிதழ், அடையாள அட்டை போன்றவற்றை வைத்திருக்க வேண்டும்.

பணியின் போது பணியாளர்கள் சீருடை மற்றும் தலைக்குத் தொப்பி போன்றவற்றை கட்டாயம் அணிவது முக்கியமானது. இவற்றை உடனடியாக அவர்கள் செயற்படுத்த வேண்டும்.

அதனை விட உணவு கையாளும் நிலையங்களில் உணவுப் பொருள்களை மிகவும் பாதுகாப்பான முறையில் வைத்திருக்க வேண்டும்.

இந்தத் திடீர் சோதனை நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (வ–17)

# மீனவர்கள் பேச்சு ஏப்ரலில்

## 100 நாள் திட்டத்தால் ஒத்திவைக்கப்பட்டதாம்

யாழ்ப்பாணம், பெப். 24

இலங்கையின் புதிய அரசினால் 100 நாள் வேலைத்திட்டம் வேகமாகமுன்னெடுக்கப்பட்டுவருவதால் இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையில் நடைபெறவிருந்த பேச்சு பிற்போடப்பட்டுள்ளது.

குறித்த பேச்சு எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குப் பின்னரே நடைபெறும் என கடற்றொழில் அமைச்சு வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்தலை தடுக்குமாறு இலங்கை மீனவர்கள் கோரியுள்ள நிலையில் இந்திய மீனவர்கள் வாரத்தில் 3 நாள்கள் மீன்பிடிப்பதற்கு அனு மதி கோரியுள்ளனர். இதனை இலங்கை மீனவர்கள் ஏற்றுக்கொள்ளாத நிலையில் தொடர்ச்சியாக 3 பேச்சுக்கள் மீனவர்களுக்கு இடையில் நடைபெற்றுள்ளன.

எனினும் மீண்டும் அத்துமீறல் அதிகரித்துள்ளதால் இவற்றுக்குத் தீர்வு காண பேச்சு நடத்துவதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ள இந்திய மீனவர்கள் கோரியிருந்தனர். இதற்கமைவாக எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி சென்னையில் அல்லது கொழும்பில் பேச்சு நடத்துவதற்கு ஒழுங்கு கள் மேற்கொள்ளப்படுவதாகக் கடற்றொழில் அமைச்சு ஏற்கனவே தெரிவித்திருந்தது.

இலங்கையில் புதிய அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளதை அடுத்து எல்லை தாண்டும் மீனவர்கள் கைது செய்யப்படவில்லை. கடற்படையினர் இதில் இருந்து விலகி இருப்பதாகவும் உள்ளூர் மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்த நிலையில் இலங்கையில் தற்போது 100 நாள் வேலைத்திட்டத்துக்கு அதிமுக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதால் அவற்றை அவசரமாக நடைமுறைப்படுத்த வேண்டியிருப்பதால் மீனவர்களுக்கிடையிலான பேச்சு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என கடற்றொழில் அமைச்சின் செயலாளர் நிமால் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புதிய அரசு வந்த பின்னர் இந்திய மீனவர்களின் அத்துமீறல் கடலில் அதிகரித்துள்ளதாகவும், இதற்குக் கடுமையான கண்டனம் தெரிவிப்பதாகவும் வட இலங்கை மீனவர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்தியப் பயணத்தின்போது பிரதமர் நரேந்திர மோடியுடன் மீனவர்களின் பிரச்சினை விரிவாக ஆராயப்பட்டுள்ளது. நரேந்திர மோடியின் இலங்கைக்கான பயணத்தின் போது இது குறித்து சாதகமான முடிவுகள் எட்டப்படும் என கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. (த-14)



மன்னார் புனித லூசியா மகா வித்தியாலயத்தில் இருந்து இம்முறை உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களில் மாவட்ட மட்டத்தில் முதல் 3 இடங்களுக்குள் வருபவர்களுக்கு ஒரு லட்சம் ருபா வழங்கப்டும் என உறுதி அளித்தார் வடக்கு மாகாண சபை மீன்பிடி அமைச்சர் பா. டெனீஸ்வரன். தனது பிரமாண அடிப்படையிலான நிதியிலிருந்து மடிக்கணினி, பல்லூடகக் கருவி, அதற்கான திரை என்பவற்றையும் அவர் பாடசாலை அதிபர் கலாதரன் பிகராடோவிடம் கையளித்தார். (த-21)

# வீடுகள் அமைக்க உதவ வேண்டும்

## கனடா தூதுவரிடம் யாழ். அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். மாவட்ட மக்களின் முக்கிய தேவையாகவுள்ள வாழ்விடங்களை அமைத்துக் கொடுக்க கனடா அரசு முன் வரவேண்டும். அத்துடன் வேலை வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.



கனடா துதுவர் ஸெலி விற்றிங் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொண்டிருந்த போது யாழ். மாவட்ட அரச அதிபருடன் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்துள்ள கனடா தூதுவர் மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகளை அறிந்து கொள்ள வந்தார். தங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய உதவிகளையும், எதிர்பார்ப்புக்களையும் கேட்டறிந்தார்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது ஏற்பட்ட முன்னேற்றங்களின் அடிப்படையில் முன்னேற்றம் தொடர்பான சுட்டிகளை மிகத் தெளிவாகக் கூறியிருந்தேன். அதாவது ஒரு குடும்பத்தின் சராசரி வருமானம் 2010 ஆம் ஆண்டில் 18 ஆயிரத்து 314 ரூபாவாக இருந்தது. தற்போது அது 34 ஆயிரத்து 780 ரூபாவாக மாற்றமடைந்துள்ளது. வறுமை மட்டம் 2010 ஆம் ஆண்டு 16 வீதமாக இருந்த நிலையில் தற்போது அது 8.2 வீதமாகக் குறைவடைந்துள்ளது. இதனை எடுத்துக் கூறியிருந்தேன்.

இந்தச் சுட்டிகள் ஊடாக தனி நபர் வருமானம் எவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் தேவைகள் தொடர்பாக தெரிவித்தபோது, இளைஞர்களுக்கான தொழில் பயிற்சி வழங்குவதற்கான முன்னேற்பாடுகளையும், அதனை ஆரம்பிப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

வழமையாக நிறுவனங்கள், தூதுவர்கள் வந்தால் நாம் கேட்பது மக்களுக்கு தேவையான வீடுகள் என்பதாகவே உள்ளது. அந்த வகையில் பல தடவைகள் கோரிக்கை வைத்திருந்தோம். ஆனால் வீடு தொடர்பான கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. எனவே முடியுமானவரை அவற்றை நிறைவேற்றுமாறு கேட்டுள்ளோம். இங்கு ஏற்கனவே கைத்தொழில் பேட்டைகளுக்கான நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளபோதும் அவை சரியான முறையில் ஆரம்பிக்கப்படாத நிலை உள்ளது. குறிக்கப்பட்ட-வரையறுக்கப்பட்ட நிலம் மட்டும் பயன்படுத்தப்பட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இதற்கான உதவிகளை வழங்கினால் உள்ளூர் வளங்கள் பயன்படுத்தப்படுவது டன் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும் என்ற விடயத்தையும் எடுத்துக் கூறி னேன். இதற்கமைவாக இவ்வாறான தேவைகளை அறிந்து கொள்ள வந்திருப்பதால் பின்னர் எம்முடன் தொடர்பு கொள்வதாக அவர் என்னிடம் தெரிவித்துள்ளார்-என்றார். (த-14)

# ஆசிரிய உதவியாளருக்கும் 5,000 ரூபா சம்பள உயர்வு

கிளிநொச்சி, பெப் 24

அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வு 5000 ரூபா இம்முறை ஆசிரிய உதவியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் ஆசிரிய உதவியாளர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கு மிகக் குறைந்த தொகையே சம்பளம்ாக வழங்கப்பட்டு வந்தது. அவர்களுக்கு ஏனைய அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைப் படியோ சம்பள அதிகரிப்புக்களோ எதுவுமே வழங்கப்படவில்லை.

இதனால் அரச ஊழியர்களான தமக்கும் வாழ்க்கைப்படி, சம்பள அதிகரிப்புக்களை வழங்குமாறு உரிய தரப்பினரிடம் அவர்கள் கோரிக்கைகளை முன் வைத்து வந் தனர். கடந்த கால அரசினால் வழங் கப்பட்ட 3000 ரூபா சம்பள அதிக ரிப்பைக் கூடப் போராட்டம் நடத்தித்தான் ஆசிரிய உதவியாளர்கள் பெற்றிருந்தனர்.

ஆனால் தற்போது மைத்திரி அரசினால் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பு 5,000 ரூபா அரச ஊழியர்களான ஆசிரிய உதவியாளர்களுக்கும் சம்பளத்துடன் சேர்த்து 18,000 ரூபாவாக வழங்கப்பட்டுள்ளது.

இதில் கிளிநொச்சி, துணுக்காய் போன்ற வலய ஆசிரிய உதவியாளர்களுக்கு அவர்களுடைய சம்பளப் பட்டியல் முன்னரே தயாரிக் கப்பட்டமையால் சம்பளத்துடன் 5000 ரூபா சேர்க்கப்படவில்லை எனவும், அவர்களுக்கான சம்பள அதிகரிப்பு விசேட சம்பளப் பட்டியல் மூலம் அல்லது அடுத்த மாதச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படவுள்ளதாகவும், இதில் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் கூறப்படுகின்றது. முல்லைத்தீவு, வடமராட்சி, மன்னார் போன்ற வலய ஆசிரிய உதவியாளர்களுக்கு இம்முறை 18000 ரூபா சம்பளம் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மையில்கூட ஆசிரிய உதவியாளர்களின் சம்பளத்தை அதிகரித்து தம்மை இலங்கை ஆசிரியர் சேவை தரம்-3-II இற்குள் உள்ளீர்க்குமாறு கோரி வன்னி உதவி ஆசிரியர் ஒன்றியம் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் ஆகியோருக்கு மனுக்களை அனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-426)

# சுய கட்டுப்பாட்டை இழந்து மாணவியை மோதிய கார்

கிளிநொச்சி, பெப் 24

கணினி பயிற்ச்சிக்காகத் தனியார் கல்வி நிறுவனத்திற்குச் சென்ற மாணவியை மோதித் தள்ளிய கார் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியின் கரையோரமாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் நேற்றுக் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

ஏ-9 வீதி வழியாக கிளிநொச்சி நோக்கி வேகமாக வந்த கார் வீதியின் ஓரமாக தனியார் கல்வி நிறுவனத்திற்கு நடந்து சென்று கொண்டிருந்த 17 வயதுடைய கேதீஸ்வரன் கேசலா தேவி என்ற மாணவியை மோதித் தள்ளி வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளின் மீதும் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து சம்பவத்தில் கார், மோட்டார் சைக்கிள் இரண்டுமே சேதங்களுக்கு உள்ளாகின.

விபத்துக்குள்ளாகி கால், கைகளில் பலத்த காயங்களுக்கு உள்ளான மாணவி உடனடியாகக் கிளிநொச்சி பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுப் பின்னர் வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காரின் சாரதி தப்பிச் சென்றுள்ளார். ஆயினும் விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி போக்குவரத்துப் பொலிஸார் சாரதியைக் கைது செய்துள்ளனர் விபத்துக்குள்ளான காரையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-21)

# திக்கம் வடிசாலை விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.24
திக்கம் வடிசாலையின் செயற்பாடுகள் விரைவில் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.
தற்போது பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கீழ் இருக்கும் இந்த வடிசாலையின் செயற்பாடுகளை விரைவாக ஆரம்பிப்பது குறித்த கலந்துரையாடல் ஒன்று கடந்த சனிக்கிழமை சமாச மண்டபத்தில் இடம்பெற்றது.
யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் கே.நடராஜா ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.
கடந்த சில மாதங்களாகச் செயற்பாடு இன்றி முடங்கிக் கிடந்த வடிசாலை மீள திறக்கப்பட்டுள்ளது.
வடிசாலையின் செயற்பாடுகளை விரைவாக ஆரம்பிப்பது மற்றும் அதன் அபிவிருத்தி குறித்து இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.
இந்தக் கலந்துரையாடல் குறித்து பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் கே.நடராஜா தெரிவிக்கையில்,
பழைமை வாய்ந்த திக்கம் வடிசாலையை அபிவிருத்தி செய்து அதன் மூலம் பனம் சாராயத்தைக் கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் அரசியல் நிலைமைகளால் இந்த வடிசாலை உரிய முறையில் செயற்படுத்தப்படவில்லை. இதனால் வடிசாலைக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து ஆராய்வதற்கு விசேட குழு ஒன்றை ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.
முதற் கட்டமாக திக்கம் வடிசாலை சமாசத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வடிசாலையில் செயற்பாடுகளை விரைவாக ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக வடிசாலையில் உற்பத்தி செயற்படும் பனஞ்சாராயத்தை உரிய முறையில் சந்தைப்படுத்துவதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்படும் என்று கூறினார். திக்கம் வடிசாலையின் மூலம் முன்னர் பெருமளவு வருமானம் வடக்குக்குக் கிடைத்து வந்தது. இதன் பின்னர் இந்தவடிசாலையைதென்னிலங்கை நிறுவனம் ஒன்றுக்குக் கொடுத்தமையால் அதன் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்தன. ஆட்சி மாற்றத்தின் பின்னர் வடிசாலை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இதனை மீண்டும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் மேற் கொள்ளப்பட்டன. இதன் ஒரு கட்டமாக வடிசாலை இப்போது திறக்கப்பட்டுள்ளது. அதன் செயற்பாடுகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.
இதனை இலாபகரமாக மீண்டும் இயங்க வைப்பதற்கான திட்டங்கள் தற்போது வகுக்கப்பட்டு வருவதாகவும், இதன் மூலம் அதிகளவு வருமானத்தை ஈட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும்,பெருமளவு பனங்சாரயத்தை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தமுடியும் எனவும் கூறப்பட்டது. (த-17)



## வீதி திருத்தத் தொழிலாளர் நேற்று கவனவீர்ப்புப் போர்

யாழ்ப்பாணம், பெப். 24
யாழ்.பண்ணை – ஊர்காவற்றுறை வீதிப் புனரமைப்பில் ஈடுபட்டிருக்கும்தொழிலாளர்கள்தமக்குகடந்த 3 மாதங்களுக்குரிய மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படாதமையால், அதனை வழங்குமாறு கோரி வடக்கு மாகாண தொழில் திணைக்களத்துக்கு முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
சுமார் 80 தொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.
தமக்கு நாளாந்தச் சம்பளமும் குறைவாகவே வழங்கப்படுகின்றது. கடும் சிரமப்பட்டுத் தாம் வீதி புனரமைப்புப் பணியில் ஈடுபடுகிறோம். முன்னர் மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கினார்கள். பின்னர் கடந்த 3 மாதங்களாக மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை.
காலையில் 6.30 மணிக்கு வேலைத் தளத்தில் நிற்கவேண்டும். இரவு 8 மணிவரை வேலை செய்யவேண்டும். மேலதிக நேரக் கொடுப்பனவு தருவதாகக் கூறியே இரவுவரை வேலை வாங்குகிறார்கள். ஆனால் மேலதிக நேரக் கொடுப்பனவைத் தர மறுக்கிறார்கள். கேட்டால் போய் வேலையைச் செய் இல்லது வீட்டுக்குப் போ என்று கூறுவதோடு, தாம் தென்பகுதியில் இருந்து ஆள்களைக் கொண்டு வந்து வேலை செய்வோம் என்றும் கூறுகிறார்கள்.
தற்போது அரைவாசிப் பேர் தென்பகுதியினர் தான். அவர்களில் சிலருக்கும் எமது நிலைதான். ஏனையவர்களுக்கு அப்படியில்லை. நல்ல கவனிப்பு. நிறைய நாள் விடுமுறை. ஆனால் சகல நாள்களுக்கும் சம்பளம். நாம் சகல நாள்களுக்கும் வேலை செய்தாலும் நாள் குறைத்துத்தான் மேலதிக நேரக் கொடுப்பனவு தருகிறார்கள்.
அதனால் இதற்குத் தீர்வு வேண்டும் என்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.
அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதனையடுத்து அவர்களில் சிலரை அழைத்துக் கொண்டு புனரமைப்பு வேலையைச் செய்விக்கும் நிறுவனத்துக்குச் சென்று கலந்துரையாடி கடந்த மாத மேலதிக நேரக் கொடுப்பனவை இந்தமாத சம்பளத்துடன் சேர்த்துத் தருவதாகக் கூறியுள்ளனர் என்று இணக்கம் காணப்பட்டுள்ளது என்று தமக்குக் கூறப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-4)

## வடக்கு மாகான தீர்மானத்துக்கு வலி.மேற்குச் சபையும் ஆதரவு

யாழ்ப்பாணம்,பெப்.24
தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலைக்கான நடவடிக்கைகளை கொழும்பு அரசு மேற்கொள்ள அக்கறை காட்ட வேண்டும். இதேவேளை, தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலையே என வடக்கு மாகாண சபை முதல்வரால் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்துக்கும் ஆதரவு என வலி.மேற்கு பிரதேச சபையில் தீர்மானம் நிரைவேற்றப் பட்டுள்ளது.
வலி மேற்கு பிரதேச சபையின் 43 வது மாதாந்த சபைக் கூட்டம் நேற்று சபை மண்டபத்தில் நடைபெற்றது.
அந்தத் தீர்மானத்தில் மேலும் கூறப் பட்டுள்ளதாவது:-
காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளைத் துரிதப் படுத்தி, அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை ஏக்கத்துடன் தவித்து நிற்கும் உறவுகளுக்கு கொழும்பு அரசு திட்டவட்டமாக கூறும் வகையில் நடவடிக்கையை தமிழர் அரசாகிய வடக்கு அரசு ஏற்படுத்த வேண்டும். எமது மண்ணில் அரங்கேற்றப்பட்ட ஆள் கடததல், கப்பம்,மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பிலும் விசாரணைகளை நடத்த நவடிக்கை எடுக்கப்ட்ட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.
போரின் வடுக்களுடன் வாழும் மக்களுக்கான உதவிகள் முழுமையான வாழ்வாதாரத்திற்குப் பொருத்தமற்ற ஒன்றாகவே உள்ளன. இதற்கான புதிய உத்திமுறைகளை பயன்படுத்தி உண்மைத் தரவுகளுக்கு ஏற்ப உதவ முன்வர வேண்டும்
இனப்படுகொலை குறித்து தகுந்த விசாரணைக்கும், சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் சட்ட நடவடிக்கைக்கும் பரிந்துரைக்க ஆவன செய்யும் பொருட்டு அனைத்துத் தமிழ் உறவுகளும் உறுதியுடன் கரம் கோர்த்துக்கொள்ள வேண்டும்.
தமிழ் மக்கள் அழித்தொழிக்கப்பட வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் கடந்த 60 வருட காலமாக வரலாற்று வன்முறைகள் கொலைகள்,கூட்டுக் கொலைகள், பாலியல் பலாத்காரம், பண்பாடு, கலாசார மற்றும் மொழி அழிப்புக்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டமை ஓர் இனத்தினை அழிக்கும் இல்லாதொழிக்கும் செயல் என்பது வெளிப்படையான உண்மை.
இந்த வகையில் பாதிக்கப்பட்ட இலங்கை வாழ் மக்கள் என்ற வகையில் மக்கள் கொல்லப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றை தடுக்க முடியாத நிலையில் இருந்த நாம் அவர்களுக்கான நீதியை நிலைநாட்ட வடமாகாண சபையின் முதல்வரால் பெறப்பட்ட இந்த நீதிக்கான பயணத்தில் எமது வலுவையும் இணைத்துக் கொள்வோம்.
தமிழர் தம் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்த படுகொலைகள் தொடர்பிலும் குறிப்பாக குமுதினிப் படுகொலை, கொக்கட்டிச்சோலைப் படு கொலை,செம்மணிப் படுகொலை, நவாலி சென். பீற்றர் தேவாலய படுகொலைகள், செஞ்சோலைப் படுகொலைகள் என நீண்டு செல்லும் படுகொலைகள் தொடர்பிலும் உரிய முறையிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் இனங்காணப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்த வழி ஏற்படுத்தப்படவேண்டும்–என்றுள்ளது.
(த-14)

## சுகாதார சீர்கேடான உணவகத்துக்கு அபராதம்

ஊர்காவற்றுறையில் சுகாதார வசதிகள் இன்றி இயங்கி வந்த உணவு நிலையம் ஒன்றுக்கு 7 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதோடு அதனைச் சீர்செய்வதற்காக இரண்டு வார கால அவகாசம் வழங்கியுள்ளது நீதிமன்று.
ஊர்காவற்றுறை நகரில் உள்ள இந்த உணவு நிலையத்தில் பணி புரியும் ஊழியர்கள் வைத்தியப் பரிசோதனை அறிக்கை இன்றிப் பணி புரிந்தமை, தனிநபர் சுகாதாரமின்றி உணவுகளைக் கையாண்டமை, சமையலறை உரிய முறையில் பராமரிக்கப்படாது இருந்தமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு நீதிமன்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் வழக்குத் தொடர்ந்தார்.
நீதிமன்றில் தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதனையடுத்து உணவு நிலைய நடத்துநருக்கு 7 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதோடு அந்தச் சீர்கேடுகளைப் புனரமைப்பதற்காக நீதிமன்று இரண்டு வார காலஅவாசமும் வழங்கியது. (த-4)

## வவுனியாவில் நேற்று மாணவர்கள் கைகலப்பு

வவுனியா, பெப். 24
வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவர்களுக்குள் ஏற்பட்ட குழு மோதல் காரணமாக மாணவன் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
நேற்று திங்கட்கிழமை காலை பாடசாலையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.
பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிக்கான விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன.
இதன்போது ஜி.சி.ஈ. சாதாரண தரத்தைச் சேர்ந்த மாணவர் குழுக்களுக்கிடையில் வாய்தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது. இதில் ஒரு மாணவன் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். முத்துலிங்கம்கபிலராஜ்(வயது 16) என்றமாணவனே காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த)

## உருளைக்கிழங்கு செய்கை வயல்விழா இன்று

யாழ்ப்பாணம், பெப். 24
உருளைக்கிழங்குச் செய்கை பெறுபேற்று வயல்விழா இன்று 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு மானிப்பாய் ஆனந்த வைரவர்கோயிலடியில் நடைபெறும்.
யாழ்.மாவட்ட பதில் உதவி விவசாயப் பணிப்பாளர் இ.சௌந்தரராசன் தலைமையில் நடைபெறும் இந்த வயல் விழாவில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கி.நிறஞ்சலா கலந்து கொள்கின்றார். சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் பெரும்பாக உத்தியோகத்தர் கு.கோகுலன் கலந்து கொள்கின்றார்.
(த-11)

## யாழ். நெல் கொள்வனவில் அக்கறையின்றி சங்கங்கள் நிதி ஒதுக்கியும் பயனில்லை

யாழ்ப்பாணம்,பெப்.24
குடாநாட்டில் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இதில் அக்கறை காட்டவில்லை என யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயம் தெரிவித்துள்ளார்.
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சிப்படுத்துவதற்கு 30 மில்லியன் ரூபா நிதியை அரசு வழங்கியுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கப்படும் இந்த நிதியைக் கொண்டு நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்த முடியும்.
கடந்த வருடமும் இதே நிலையிலேயே கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. களஞ்சியப்படுத்துவதற்குப் போதிய வசதிகள் இல்லை எனவும் கூறியிருந்தன. இந்த வருடமும் அதே நிலையை எதிர்கொள்ளாமல் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இந்த நிதியைக் கொண்டு நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு சங்கங்கள் முன் வரவேண்டும்.
நெல்லுக்குஉத்தேசிக்கப்பட்ட விலையாக கீரிச் சம்பா, சம்பாவுக்கு 50 ரூபாவும், நாடு நெல்லுக்கு 45 ரூபாவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, விவசாயி ஒருவரிடம் இருந்து 2ஆயிரம் கிலோவை மட்டும் கொள்வனவு செய்யுமாறும் அரசு தெரிவித்துள்ளது.
இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நெல்லை யாழ்.மாவட்டத்தில் களஞ்சியப்படுத்தினால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தட்டுப்பாடுகளை தவிர்க்கலாம்–என்றார்.
இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு தயாராக இருக்கும் சங்கங்கள் மற்றும் அவர்களுக்கு தேவையான நிதி தொடர்பான விபரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதனிடம் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (த-14)

# சாரங்கன், ரசிகரன் அரைச் சதம் ஹாட்லியை வென்றது மகாஜன

வலி.வடக்கு, பெப். 24
சாரங்கன், ரசிகரன் ஆகியோர் இரண்டாவது இன்னிங்ஸில் அதிரடியாகப் பெற்ற அரைச் சதங்களின் உதவியுடன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 6 இலக்குகளினால் வெற்றி பெற்றது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற பிரிவு மூன்றுக்கான 19 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியும் ஹாட்லிக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி 47 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.ராகவன் 43 ஓட்டங்களையும், விதுசன் 26 ஓட்டங்களையும், ஜீவன் 16 ஓட்டங்களையும், சஜீவன், சதுர்சன் தலா 13 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 17 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மகாஜனக் கல்லூரி சார்பில் பந்து வீசிய கபிலன் 08 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 25 ஓட்டங்களுக்கு 03 இலக்குகளையும், தயூஸ்ரன் 08 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றத்துடன் 30 ஓட்டங்களுக்கு 03 இலக்குகளையும், ரசிகரன் 12 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றத்துடன் 49 ஓட்டங்களுக்கு 03 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 49 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 101 ஓட்டங்களை பெற்றது.

சரண்ராஜ் 27 ஓட்டங்களையும், ரசிகரன் 23 ஓட்டங்களையும், லக்ஸ்மன் 21 ஓட்டங்களையும், சாரங்கன் 11 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 07 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஹாட்லிக் கல்லூரி சார்பில் பந்து வீசிய சஜீவன் 12 பந்துப்பரி மாற்றங்கள் பந்து வீசி 05 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 14 ஓட்டங்களுக்கு 05 இலக்குகளையும், அஜித் 09 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 25 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும், அஜந் 11 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றத்துடன் 28 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும், டில்சன் 18 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி 28.4 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது.

சாரங்கன் 10 ஓட்டங்களையும், ராகவன் 11 ஓட்டங்களையும், விதுசன் 10 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 12 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மகாஜனக் கல்லூரி சார்பில் பந்து வீசிய தயூஸ்ரன் 09 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றத்துடன் 25 ஓட்டங்களுக்கு 04 இலக்குகளையும்,கபிலன் 8.4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 14 ஓட்டங்களுக்கு 03 இலக்குகளையும், ஜெரோம் 05 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளை யும்,ஜசிந்தன் 14 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 36.1 பந்துப்பரிமாற்றங்களில் 04 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கான 149 ஓட்டங்களைப்பெற்றுக்கொண்டது. சாரங்கன் 67 ஓட்டங்களையும், லசிகரன் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஹாட்லிக் கல்லூரி சார்பில் பந்து வீசிய சஜிவன் 07 பந்துப்பரி மாற்றங்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 18 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும்,டிலக்சன் அஜந் தலா 22, 39 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.
(த-86)

## இறுதிக்குள் நுழைந்தன நவசக்தி , நவஜீவன்ஸ்

யாழ்ப்பாணம்,பெப். 24
கரவெட்டிபிரதேச இளைஞர் விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண்களுக்கான உதை பந்தாட்ட தொடரின் அரையிறுதியாட்டங்களில் நவசக்தி இளைஞர் கழகமும் நவஜீவன்ஸ் இளைஞர் கழகமும் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.

கடந்த சனிக்கிழமை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த அரையிறுதியாட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் நவஜீவன்ஸ் இளைஞர் கழக அணியை எதிர்த்து கருணாகரன் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் நவஜீவன்ஸ் இளைஞர் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் நவசக்தி இளைஞர் கழக அணியைஎதிர்த்துமனோகராஇளைஞர் கழக அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தகர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் நவசக்தி இளைஞர்கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குதகுதிபெற்றது.(த-2[illegible])

## இரண்டாம் சுற்றுக்குள் நுழைந்தது அன்ரனிஸ்



யாழ்ப்பாணம்,பெப்.24
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் யாழ்ப்பாணம் வெற்றிக் கிண்ணத்துக்கான உதை பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டு கழகம் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றது. (த-23,ரி)

## கிண்ணத்தை தனதாக்கியது சுழிபுரம் விக்டோரியன்ஸ்

யாழ்ப்பாணம்,பெப். 24
வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட 30 கழகங்களுக்கிடையில் நடத்திய 9 வீரர்கள் 7 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் உடுவில் ஸ்ரார் போய்ஸ் அணிக்கும் இடையில் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகமைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்றியில் வெற்றியீட்டிய சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து நிர்ணயிக்கப்பட்ட 7 பந்துப் பரிமாற்றத்தில் 47 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

7 பந்துப் பரிமாற்றத்தில் 48 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்கினை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உடுவில் ஸ்ரார் போய்ஸ் அணி ஆட்டத்தின் கடைசிப் பந்துவரைப் போராடி 3 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.(த-ரி)

## வெற்றி நடை போடுகின்றது நாவாந்துறை சென். நீக்கிலஸ்

யாழ்ப்பாணம், பெப். 24
யாழ்.உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்கங்களின் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலையில் அமைந்துள்ள உதைபந்தாட்டப் பயிற்சி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணிக்கும், ஊரெழு பாரதி அணிக்கும் இடையிலானஆட்டத்தில்நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் றேம்சன் 2 கோலையும், றெமில்ரன், அமில் ஆகியோர் தலா ஒரு கோலையும் அடித்தனர்.
(த-23,ரி)

# மன்னாரில் மகுடம் சூடியது சென்.சேவியர்



யாழ்ப்பாணம்,பெப்.24
மன்னார் உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்தவக் கழகங்களுக்கிடையில் நடத்திய 7பேர்பங்குபற்றும்விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்று தொடரின் இறுதி யாட்டத்தில் மன்னார் சென். சேவியர் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் நகரசபை மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் சென்.சேவியர் கல்லூரி அணியை எதிர்த்து விடத்தல் தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. பலம் பொருந்திய அணிகள் மோதிக் கொண்டதால் ஆட்டம் ஆரம்பம் முதலே சூடு பிடித்தது. இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோலைப் பெறுவதற்காக மும்முரமாக மோதிக்கொண்டிருந்தனர். ஆட்டத்தின் 6ஆவது நிமிடத்தில் மன்னார் சென்.சேவியர் அணி வீரன் சுஜீவன் தனக்கு கிடைத்த பந்தைக் கோலாக மாற்றினார். பதிலுக்கு தமது அணிக்கான கோலைப் பெற்றிடவேண்டும் என்ற கட்டாயத்தில் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக வீரர்கள் அதீத முயற்சிகள் மேற்கொண்ட போதும் அவர்களால் பெரிதாக எதனையும் செய்துவிட முடியவில்லை. ஆட்டம்இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட போது மன்னார் சென். சேவியர் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருத்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்ப மான போது. இரண்டு அணியினரும் ஆட்டத்தில் சில மாற்றங்களை மேற்கொண்டு தமது அணிக்கான கோல்களைப் பெறுவதற்காக எதிர் அணியின் கோல் பரப்பினை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். ஆனால் புதிதாக கோல்கள் எதுவும் பதியப்படவில்லை. இரண்டாம் பாதியில் இரு அணியினரும் சம ஆதிக்கம் செலுத்தியமையால் முடிவில் மன்னார் சென்.செவியர் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23,ரி)

FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர்
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவர்)
Register now : 0779 789 456 / 021 320 2973
No. 40, Palaly Road, Jaffna.(அரியாலை) | No.181, 1st Floor, Main Street, Nelliady. | சாவகச்சேரியில் விரைவில் எம் கிளை

பணிநிலை வேண்டுகை
முகாமையாளர் தேவை

யாழ் A9 றோட், கச்சேரி வீதியில் இயங்கிவரும் Bastian Hotel இற்கு அனுபவம் மிக்க முகாமையாளர் தேவை
வயதெல்லை: 25- 40 வரை
கல்வித்தகைமை: Hotel Management சார்ந்த கற்கைநெறி
அனுபவம்: 2 வருட Hotel சார்ந்த அனுபவம்
நேர்முகத் தேர்வு: 26, 27, 28 ஆம் திகதிகளில் காலை 9.00 - 11.00 வரை நடைபெறும்
தகுதியானவர்கள் நேரில் வரவும்
தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்
Bastian HOTEL
Bastian Hotel,
37, Kandy Road, Jaffna.
TP: 021 222 2605

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.